ஆகஸ்ட் 2017

OLIARAZI

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளிஅரசி

ரூபா 75 மங்கையரின் தோழி

ஒளி 04 இதழ் 08

பக்கங்கள் : 104 (72 + XII + 12 + VIII)

- ஆண் பிள்ளைகளும் இன்றைய பெற்றோரும்
- தரம் 5 - இன்னொரு அவலம்
- செம்மறி ஆட்டுக்குணம்



அலங்காரக் கந்தனின் அருளைப் பெறுவோம்

நல்லைக் கந்தன் சிறப்பிதழ்

Free

அழகுக்குறிப்பு கையேடு, தரம் 5 முன்னோடிப் பரீட்சை வினாத்தாள், போட்டிப்பரீட்சை வழிகாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளிகளுக்கான மழலைகள் மகிழ்களம் நிகழ்வின் போது





யா/மூளாய் சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு கண்காட்சி.

## பிறந்தநாள் வாழ்த்து



**லிகிதராஸ் ஜெனகன்**

31.07. 2017 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடிய லிகிதராஸ் ஜெனகனை சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.


**வாழ்த்துவோர்:**

அக்கா ராகவி, அம்மம்மா ராகினி, அப்பம்மா கமலா, சித்தப்பா நிரஞ்ச குமார், பெரியப்பா லிங்கேஸ்வரன், பெரியம்மா தேவினி, அப்பா லிகிதராஸ், அம்மா பவித்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


சாதனைகள் தூரமில்லை 05


உள நலம் காப்போம் 42


வாய்மையின் வாயாடிகள் 16


தையல் 69


அழகெனப்படுவது யாது? 19


சிறகுலர்த்தும் பறவைகள் 10

யாழ்ப்பாண பொதுசன நூலகம்


வாசிப்பு ஒரு வரம் 23


நட்பினில் மலர்வோம் 66


மருத்துவமும் மகத்துவமும். 31


உளவியல் உணர்த்தும் உண்மைகள்! 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியாளர்களின் இரகசியங்கள்






08 — 09 — 10 — 11 — 12 — 13 — 14 — 15

**இரண்டாம் வாரம்**

ஆகஸ்ட்

12 உலக இளைஞர்கள் நாள்

16 — 17 — 18 — 19 — 20 — 21 — 22 — 23

**மூன்றாம் வாரம்**

ஆகஸ்ட்

19 சர்வதேச புகைப்பட நாள்

24 — 25 — 26 — 27 — 28 — 29 — 30 — 31

**நான்காம் வாரம்**

ஆகஸ்ட்

31 மலேசியாவின் விடுதலை நாள்

01 — 02 — 03 — 04 — 05 — 06 — 07

**முதலாம் வாரம்**

செப்டெம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாசகர்கள் அனைவருக்கும் இனிய வணக்கங்கள்



# சாதனைகள் தூரமில்லை



## தோல்வி என்றால் என்ன?

மாதாந்தம் உங்கள் கரம் தவளும் ஒளிஅரசி உங்கள் வீட்டின் தோழியாய் தனது பயணத்தினை வெற்றியோடு தொடர்கின்றாள். இவ்வெற்றிப்பயணத்தின் காரண கர்த்தாக்கள் எமது அன்பான வாசகர்களாகிய நீங்கள் அனைவருமே.

உங்கள் உலகம் என்பது உங்களைச் சுற்றியுள்ள உறவுகளே என்பது நாங்கள் அறிந்த விடயமே. அதனாலேயே நீங்களும் உங்கள் நேசத்திற்குரியவர்களும் அறிவியலிலும் ஆளுமையிலும் முன்னேறும் பொருட்டு ஆழ்ந்த பொருளடக்கம் கொண்ட கட்டுரைகளை இப்பகுதியில் பிரசுரித்துவருகின்றோம். இம்மாதம் சிறார்களின் மனதில் இலட்சியங்களை விதைப்பது பற்றியும் தோல்விகளைக் கண்டு துவளாமல் வெற்றிநடை போடுவது பற்றியும் உங்களோடு அலசலாம் என எண்ணுகின்றோம்.


இலட்சியம் அற்ற வாழ்வு துடுப்பற்ற படகைப்போன்றது என்கின்றனர். அது உண்மைதான், உள்ளம் இலக்கை பற்றியிருக்கும் போது தான் சிந்தனையும் செயலும் அதன் வெற்றியை நோக்கி வீறுநடைபோடும். ஆனால் ஒரு விடயத்தை நாம் கவனிக்கவேண்டும். தோல்விகள் இல்லாமல் வெற்றிகள் சாத்தியமில்லை. அதனால் தான் தோல்வியே வெற்றியின் முதற்படி எனக்கூறப்படுகின்றது.

குழந்தைகளின் சிறுவயதிலேயே சாதனையாளர்கள் பற்றியும் சாதனைகள் பற்றியும் அதில் ஏற்பட்ட தோல்விகள் பற்றியும் அவர்கள் விரும்பும் விதத்தில் கதைகளாக கூறவேண்டும்.

தோல்வி என்றால் என்ன? போட்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதம ஆசிரியரின் பேனா முனையிலிருந்து

தோற்பது தான் தோல்வி என நினைக்கின்றனர் பலர். உண்மை அது வல்ல.

ஏதாவது ஒரு காரியத்தை எடுத்து அதை முழுமையாக முடிக்காமல் விடுவதும் தோல்வி தான். இலக்கும் திறமையும் ஒத்துப் போகாத போது செயலை முடிக்க முடியாது தோல்வி ஏற்படும்.

ஒவ்வொரு குழந்தையும் புத்திசாலியாகவே பிறக்கின்றது. அவர்களை சாதனையாளர்களாக பரிணமிக்கவைக்கின்ற திறன் பெற்றோரிடமே உள்ளது. தோமஸ் அல்வா எடிசன் என்பவரைப்பற்றி உங்களுக்குத் தெரியும்.

அமெரிக்காவில் சாமுவேல் எடிசன் நான்ஸி எலியட் தம்பதியின் நான்காவது மகனாக, 1847 ஆம் ஆண்டு பிறந்தார். தலை பெரிதாக இருந்ததால், மண்டு, மூளைவளர்ச்சி குறைந்தவன் என ஆசிரியரும் மாணவர்களும் கிண்டல் செய்யவே, பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டு, தாயிடமே பாடம் பயிலத் தொடங்கினான் சிறுவன் தோமஸ்.

எடிசன் படிப்பில் மந்தகதியானவராக இருந்தபோதும் சிறுவயது முதல் ஏன்? எதற்கு? என்ற கேள்விகளைக் கேட்கப் பழகியவர். அதனாலேயே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்தார். தனது தாயாரிடம் இருந்து அவர் பெற்ற அடிப்படையான அறிவே அவரை இத்தகையதொரு சாதனையாளராக மாற்றியது. தோல்விகள் வீழ்ச்சியல்ல என்ற மாபெரும் உண்மையை நிரூபித்துக் காட்டியவரும் இவரே. பல தோல்விகள் கண்டு வெற்றியை ரசித்தவர் எடிசன்.

உயர்வும், தாழ்வும் நாணயத்தின் இரு பக்கங்கள். தோல்வியை கண்டு துவளக் கூடாது. வாழ்வில், ஒரு முறையேனும் தோல்வி ஏற்பட்டால் தான் வெற்றியின் அருமை புரியும். சாதாரணமாக ஒருவன் வெற்றியடைந்தால், அவனுக்கு அது பெரிய விஷயமாக தெரியாது. பலமுறை தோல்வி கண்டு, வெற்றியை தழுவும் ஒருவனால் தான், அதை உண்மையில் உணர முடியும்.

தோல்வியை உணர்ந்து அதனை கொண்டாடினால் வெற்றிக்கான பாதைகளை கண்டறிந்தால் அடுத்த கட்டமான வெற்றி எம் கரம் கிட்டிவிடும். அதன் பின்னர் தோல்விகளுக்கு வாய்ப்பில்லை. ஆகவே, தோல்வியைக் கண்டு ஒதுங்கி விடாமல் தொடர்ந்து பயணித்து வெற்றிக்கனி பறிப்போம்.

பிரதம ஆசிரியர்

வடிவமைப்பு : எஸ்.மகாவிஷ்ணு, எம்.ஜீவநீதன்

ஆசிரிய பீடம் : தொலைபேசி : 0114320695, துரித அழைப்பு : 0718628369,

தொலைநகல் : 0114322614, E-mail : oliarazi33@gmail.com, Viber - 0779046836

கடித தொடர்புகளுக்கு :

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.

அல்லது இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல்



அன்று ஞாயிற்றுக் கிழமைஎன்பதால்பல்கலைக் கழக விடுதி வெறிச் சோடிக் கிடந்தது. வீட்டுக் குச் செல்பவர்கள் தவிர ஏனைய ஒன்றிரண்டு மாண விகள் மட்டுமே நின்றனர். தூர இடங்களில் இருப்பவர் கள் வார இறுதிநாட்களிலும் அங்கேயே தங்கிவிடுவது வழமை. அவர்களின் உரை யாடல் ஒன்று வாசகர்களுக் காக..

காவ்யா : எங்கடி மாலதியைக் காணோம்?
பாமதி : அவளா, ரொம்ப சோகமா அதோ அங்க இருக்கா பார்.
காவ்யா : ஏனடி, அவளுக்கு என்னாச்சு?
பாமதி : பேஸ்புக்கில இருந்த அவ பிறண்ட் யாரோ அவள ஏமாத்திட்டாளாம், அதனால ரொம்ப சோகமா இருக்கா.
காவ்யா : இதென்னடி, அவளுக்கென்ன பைத்தியமா? பேஸ்புக் பிறண்ட் ஏமாத்தினதுக்கு இப்பிடி சோகமானா வாழ்க்கைல எத்தனை பிரச்சினைகள் வரும். அத்தனையையும் சமாளிக்கவேண்டாமா?
பாமதி : ஐயோ என்னட்ட எதுக்கு சொல்றாய்? அதோ அவளட்டயே சொல்லு.
காவ்யா : ஏய் மாலதி, என்னடி இது, ஏண்டி இப்பிடி சோகமா இருக்கிறாய்?
மாலதி : அதில்லடி, ரொம்ப நல்ல பிறண்டா இருந்தா, நானும் நம்பினேன். ஆனா ஏன் இப்பிடி திடீர்னு அது ஒரு ஆண் எண்டு தெரியவும் ஒரே குழப்பமா இருக்கு.
பாமதி : உன்னோட எப்பவும் சற் பண்ணுவானா?
மாலதி : அவன் எப்பவும் மேசேஜ் போடுவான், ஆனா நான் எப்பவாவது ரெண்டு மூண்டு நாளைக்கு ஒரு தடவை சற் பண்ணுவன்.
காவ்யா : இப்ப எப்பிடி அவன் ஆண் எண்டு கண்டுபிடிச்சாய்?
மாலதி : என்னோட இன்னொரு பிறண்ட் தான் சொன்னாள்.
பாமதி : பேஸ்புக் நல்லது தான், நல்ல விடயங்களுக்கு பயன்படுத்தும் போது.
காவ்யா : ஓமடி, இப்பிடியான உண்மையா இல்லாத ஆக்களும் இருக்கத்தான் செய்வாங்க
பாமதி : நாங்கள் தான் பாத்து நடக்கவேணும்.
மாலதி : நல்லவேளை நான் அளவோடை கதைச்சது.
பாமதி : அது சரியடி, உதை நினைச்சு ரென்ஷனாகாமல் விடு.
காவ்யா : வளர வளர பிரச்சினைகளும் கூடுமே தவிர குறையாது. அதையெல்லாம் சமாளிச்சு வாழுறது தான் வாழ்வு.
பாமதி : சரி சரி ரைம் ஆச்சு, வாங்கடி போய் சாப்பாடு எடுக்கலாம். (மூவரும் எழுந்து நடந்தனர்.)

ஜனநாயகி

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிரஹம்பல் செய்தவீணை

கூக்குரலில்
அழைத்தவனெல்லாம்
கூவிஅழைக்கும்
தூரம் நின்றாலும்
கிரஹம்பலின்
வீணைவாசிக்கிறான்!

தொலைத்தொடர்புகளை
புதுப்பித்துக்கொண்டான்
பலபுதுத்தொடர்புகள்
பிறப்பித்துக்கொண்டான்
செல்லும் இடமெல்லாம்
செல்லிடை
பேசி!

எண்ணியவரை
எண்ணைஅழுத்தி
அழைத்துக் கொண்டான்
எண்ணமெல்லாம்
பகிர்ந்திடவே!

பெருஞ் செய்திகளையும்
நொடிப்பொழுதில்
பகிர்ந்துகொண்டான்
குறுஞ் செய்தி
அனுப்பி!

கிரஹம்பல் செய்தவீணை
பலகிரகங்களும்
பரவிக்கிடக்கிறதே
மலிவாய்!

ஓட்டமாவடி
எம்.எஸ்.எம்.ஹில்மி
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் – ஒலுவில்

# ஒளி கொண்ட தேசமாய்


வறண்ட பூமியில்
வண்ண வண்ண கோலமிட்டு
கீறிக் கிழித்து
கிலி கொண்ட மனத்துடன்
விதைக்கின்ற விதைகளே
மரமாகி நிற்கின்றன!
வீம்பு கொண்ட நெஞ்சமே
விதைக்கின்ற விதைகளை
நீ தானே தெரிவு செய்தாய்
உனது உள்ளத்தை
உழுதிடு உழவா......
உன்னுடன் வாழும்
நான் கூறும் அறிவுரை
(மனச்சாட்சி)
புயலுடன் போராடி
கன மழையுடன்
கானம் இசைத்து
இடியையும் தாங்கி
மின்னலையும் ஏற்று
கண்ணீர் சிந்தி
கருகிச் செல்லாமல்
வீறு கொண்டெழும்
விருட்சமாக உருமாற
விதைகளை விதை
வித்தைகள் பல செய்யலாம்!!!

குட்டி ஜசி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிசப்த பூமி

நிசப்தங்களை உடைத்து
இதயத்தில் பதுங்குகின்றாள்
யாராவது
அசிங்கப்படுத்துபவர்
ஆர்ப்பரிப்பவர்
அதர்மிகளைக்
காணும் கணங்களில்
நிசப்தங்களுக்குள் சஞ்சரிக்கிறாள்.
ஆதாய மனிதர்களிடையே
சிக்குண்ணும் கணங்களில்
கலியுகத்தைக் கீறிப்பார்க்கிறாள்.
பின்னான பொழுதுகளில்
கிலி பிடித்தவளாய்
நிசப்தங்களில் நீந்துகின்றாள்.
நிசப்தங்கள் ரம்மியமானவை.

ஒரு துளி இரவில் பற்றும்
தாகத்தைப் போக்க
கொஞ்சம் கற்பனை
இன்னும் கொஞ்சக்
கனவு
அங்கு கிடைக்கும்.
ஏன்
அதர்மிகள் அப்பிய
காயங்களைக் கழுவ
மருந்தும் கிடைக்கும்.
தவிப்புகளைத் தாலாட்டும்
தொட்டிலுண்டு.
எந்தக் கட்டில் சுகமும்
தோற்கும் அங்கு.
நிசப்த தோட்டத்தில்
நிறைந்த மீன்கள் பூக்கும்
மெல்லிய சேலை தாவும்
நிலவு நீந்தும்
இதயம் கொஞ்சம் இதயாய்த் தெரியும்.
யௌவனத்தின் நினைவுகளை
அங்குதான் மீட்ட முடியும்.
கவலைகளை கசக்கி எறியவும் முடியும்.
இன்பங்களை நுகரவும் முடியும்.
அரைக்கிழவனும்
முழுக்குழந்தையாக மாறமுடியும்.
அங்கு
அசிங்கம் இல்லை,
ஆர்ப்பரிப்பு இல்லை,
அதர்மிகளும் இல்லை,
ஒரு தென்றல் தாயாகி
அமைதியாய் தாலாட்டும்.
தூக்கத்தை சுகமாக்கி
சுதந்திர புஸ்பம் விதைக்கும்.
மமகாரம் அற்ற அழகு விருட்சங்கள்
அகங்காரம் அற்ற கனிகளை
தந்து மகிழும்.

ஓ
நிசப்தமே
அவளது கண்கள் குத்தப்படுகின்றது.

த. செல்வா
கிளிநொச்சி.

---


# சுளகு .....



மங்கையர் நாங்கள் வளைக்கரங்கள்
அசைந்தாட ஆட
பங்கைய மலராம் கைகளால் சுளகை பற்றியே
அரிசி புடைப்போமே அரிசி புடைப்போமே...
ஆனைக்காதே அன்ன சுளகு
கல்நிறைந்த நெல்லரிசி
கல்லைக் கொழித்து ஒதுக்கவே
இட்டமுடன் கன்னியரும்
பட்டணத்தில் உள்ளவரும்
கண்டவுடன் வாங்கும்
கற்பகதரு வின் கைப் படைப்பாம் சுளகு
ஆடினாள் பாடினாள் களைப்பு தீர்த்தே
ஆடிப்பழ முறத்தாலே
செந்நெல் விளைநிலத்தே விளைந்திட்ட
செந்நெல்லைத் தூற்றிடுவோமே தூற்றிடுவோமே...

கோவை திரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று ஆளுமை



# செயற்கைக் கதிரியக்கம் உருவாக்கி நோபல் பரிசு பெற்ற ஜீன் ஜோலியட் கியூரி

மேரி கியூரி, பியரிக் கியூரி ஆகிய விஞ்ஞானத் தம்பதிகளுக்குப் பிறந்த மூத்த புதல்வி ஐரீன் கியூரி! இதுவரை யாரும் அடையாத இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்று, நவீன விஞ்ஞானத்துக்கு அடிகோலிய மேரி கியூரியின் அருமைப் புதல்வி, ஐரீன் கியூரி! தாயைப் போல பிள்ளை என்ற முதுமொழியை மெய்ப்பித்து, முதன் முதல் செயற்கைக் கதிரியக்கத்தைச் செய்து காட்டி தாயைப் போல் தானும் தன் கணவருடன் நோபல் பரிசு பெற்றவர்! மூலக மாற்றத்தைப் புரிந்து ஏராளமான கதிரியக்க ஏகமூலங்களைப் படைத்து மூலகங்களின் அணி அட்டவணையைப் பெரிதுபடுத்திய விஞ்ஞானப் பெண் மேதை, ஐரீன் ஜோலியட் கியூரி!

விஞ்ஞான மேதைகள் தாய் மேரி கியூரி, தந்தையார் பியர் கியூரி இருவரும் ரேடியத்தில் இயற்கைக் கதிரியக்கத்தைக் கண்டு பிடித்ததற்கு, நோபல் பரிசை பிரெஞ்ச் விஞ்ஞானி ஹென்ரி பெக்குவரலுடன் பகிர்ந்து கொண்டனர்! அப்போது அவர்களின் புதல்வி ஐரீன் கியூரி ஆறு வயதுச் சிறுமியாக, அம்மாவின் அருகில் அமர்ந்திருந்தாள்! முப்பத்திரெண்டு ஆண்டுகளுக்கு பின்பு அதே இடத்தில் ஐரீன் கியூரி, அவரது கணவர் பிரடெரிக் ஜோலியட் இருவருக்கும் செயற்கைக் கதிரியக்கம் ஆக்கியதற்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது. அப்போது ஐரீன் அருகில் அவரது புகழ்பெற்ற தாய் மேரி கியூரி அமர்ந்திருக்க வில்லை! அவர் ரேடியத்தின் வீரியக் கதிரியக்கம் பல்லாண்டுகள் தாக்கி ஓராண்டுக்கு முன் இரத்த நோயில் இறந்து போனார்! பௌதிக விஞ்ஞானத்திற்கு நோபல் பரிசு பெற்ற முதற் பெண்மணி, மேரி கியூரி! இரண்டாவது பெண்மணி புதல்வி ஐரீன் கியூரி! தாய் உயிரோடு இருந்திருந்தால், நோபெல் பரிசு கிடைத்த புதல்வியைப் பெற்றதற்கு எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார் ?

சில விஞ்ஞானிகள் வெறும் தத்துவவாதிகள்! சில விஞ்ஞானிகள் சோதனைகளைத் திறம்படச் செய்யும் திறமைசாலிகள்! சில விஞ்ஞானிகள் மேம்பட இயக்கும் நிர்வாகிகள்! ஐரீன் ஜோலியட் கியூரி மேற்கூறிய முத்திறமும் படைத்தவர்! ஐரீன் பாரிஸ் கியூரி ஆராய்ச்சிக் கூடத்தின் ஆணையாளர். அங்கே தனியாக ஐரீன் கணவருடன் ஆய்வுகள் செய்தும் வந்தார்! பிரென்ச் அணுசக்திப் பேரவையில் ஓர் உறுப்பினர். அத்துடன் பாரிஸ் பல்கலைக் கழகத்தின் ரசாயனத் துறைப் பேராசிரியர்! ஆய்வுக் கூடத்தில் ஐரீன் ஓர் யதேட்சை அதிகாரி! எதுவும் துப்புரவாகத், தூய்மையாகத், துல்லியமானதாக இருக்க வேண்டுமென அவரது பதவி அதிகாரத்தைக் காட்டுவார்!

சிறிய வயதிலிருந்தே, ஐரீன் எதிலும் மிகத் திறமைசாலியாக மிளிர்ந்தாள்! கணிதத்தில் அவள் மித மிஞ்சிய சாமர்த்திய சாலி! பத்து வயதிலேயே ஐரீன் கணக்கில் கொண்டிருந்த வலிமை பளிச்செனத் தெரிந்தது! வல்லுநர்களின் பிள்ளைகள் பத்துப் பேருடன் ஒருத்தியாக, தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடத்தும் சிறப்புப் பள்ளியில் ஐரீன் படிக்கத் தொடங்கினாள்.

செவைன் கல்லூரியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு, ஐரீன் சார்போன் பல்கலைக் கழகத்தில் கணிதமும், பௌதிகமும் பயின்றார். ஐரோப்பாவில் முதல் உலகப் போர் துவங்கவே, ஐரீன் கல்லூரிப் படிப்புத் தடையுற்றது! அப்போது ஐரீன் தாய் மேரி கியூரியுடன் சேர்ந்து, போரில் காயப் பட்டவர்களுக்குப் பணி செய்ய, எக்ஸ்ரே சாதன வாகனத்தில் பயணம் செய்து முதலுதவி செய்தாள். மேலும் ஐரீன் அப்பணியைப் பிரான்ஸ், பெல்ஜியம் ராணுவ மருத்துவக் கூடங்களில் நீடித்து, எக்ஸ்ரே ஆய்வுச் சாதனங்களை நிறுவ எற்பாடு செய்தாள். அவ்வரிய சமூக சேவை யானது பாராட்டப் பட்டு, ஐரீன் ராணுவப் பதக்கத்தைப் பெற்றாள்.

21 வயதாகும் போது, ஐரீன் பாரிஸ் பல்கலைக் கழகத்தின் கியூரி ரேடிய ஆய்வுக்கூடத்தில் தாயின் துணையாளியாகப் பணிபுரியச் சென்றாள்.

அங்கே நடக்கும் ஆராய்ச்சியில் பங்கெடுத்து போலோனியத்தின் ஆல்ஃபாக் கதிர்கள் என்னும் விஞ்ஞானக் கோட்பாடை எழுதி, டாக்டர் பட்டத்தைப் பெற்றார். அதே ஆண்டு பௌதிக விஞ்ஞானி பால் லாங்ஜிவின் சிபாரிசின் பேரில் மேரி கியூரியிடம், உதவி விஞ்ஞானியாய் ஆராய்ச்சி புரிய வந்தார், பிரடெரிக் ஜோலியட் ஆய்வுக் கூடத்தில் கதிரியக்கச் சூழ்நிலையில் பணி செய்ய, அவருக்கு முன்னறிவிப்பாய் சோதன முறைகளைச் சொல்லிக் கொடுக்கும் முதல் வேலை ஐரீனுக்குத் தரப்பட்டது! ஐரீன், பிரடெரிக் இருவரும் விஞ்ஞானம், கலைத்துவம், மனிதத்துவம், விளையாட்டு, பொழுது போக்கு ஆகியவற்றில் ஒரே மாதிரி ஆர்வத்தைக் கொண்டிருந்ததால், அவர்கள் காதல் வயப்பட்டு மணம் புரிந்து, தாய் தந்தையரைப் போன்று விஞ்ஞானத் தம்பதிகள் ஆயினர்! அன்று முதல் ஐரீன், பிரடெரிக் இருவரும் ஒன்றாய் இணைந்து நீண்ட நேரம் விஞ்ஞான ஆராய்ச்சிகள் புரிந்தனர்! 1930 இல் பிரடெரிக் ஜோலியட் எழுதிய கதிர் மூலகங்களின் மின்னியல் இரசாயனக்கோட்பாடுக்கு டொக்டர் பட்டத்தைப் பெற்றார். ஐரீன் பிரடெரிக் தம்பதிகளுக்கு ஹெலென் என்ற புதல்வியும், பியர் என்ற புதல்வனும் பிறந்தனர்.

ஐரீன் ஜோலியட் கியூரி கதிரியக்கச் சூழ்நிலையில் நீண்ட காலம் பாதிக்கப் பட்டு, இரத்த நோயில் Leukemia தாய் மேரி கியூரி போல் தானும் அவதியுற்று, பாரிஸில் 59 ஆவது வயதில் காலமானார்! பிரிட்டானியில் ஓய்வெடுக்கச் சென்ற




Irene & Marie Curie

போது விபத்தில் காயமுற்று, சில நாட்கள் கழித்துப், பிரடெரிக் தனது 58 ஆவது வயதில் காலமானார்.

தாய் ஐரீன் கியூரி, தந்தை பிரடெரிக் ஜோலியட் இருவரும் விட்டுச் சென்ற விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் புதல்வி ஹெலனும், புதல்வன் பியரும், தம் பெற்றோர் கடைப்பிடித்தது போல பரம்பரையான குல வித்தையைப் பின்தொடர்ந்தனர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்மைச்சம்பவம்

# ஆண் பிள்ளைகளும் இன்றைய பெற்றோரும்

இக்காலத்தில் பெற்ற பிள்ளைக்கு அத்திய வசியமானவற்றை வழங்கி அதனைப்பராமரிப்பது இல குவாக சாத்தியப்பட்டாலும் அக்குழந்தையை சமூக சீர்கேடுகளின் பக்கம் இருந்து பாதுகாத்து வளர்ப்ப தென்பது கேள்விக்குறியாகவே காணப் படுகிறது. இவ்வாறு அதிக அன்புடனும் அதிக கவனிப்புடனும் வளர்க்கப்பட்டு இன்று வேறு ஒரு நிலையில் இருக்கிற ஒரு இளைஞனைப்பற்றி பார்ப்போம்.



வாரத்தில் ஒரு நாள் ஆதார வைத்திய சாலையின் உள மருத்துவப்பிரிவுக்கு உளவள ஆலோசனைக்காக செல்வது வழக்கம். அன்று உள மருத்து வப்பிரிவுக்குள் பிரவேசிக்கும் போது தீவிர மனநோயாளிகள் அடைத்து வைக்கப்படுகின்ற அறையிலிருந்து ஒரு பாரிய சத் தமும் அதன் கதவை உடைக் கின்ற சத்தமும் பலமாக கேட் டுக்கொண்டிருந்தது. உளநலப் பிரிவுக்கு இது புதியவிடய மல்ல என்றாலும் அச்செயல் என்னை அவர் பக்கம் ஈர்த்தது. அவரிடம் உரையாடச் சென்றேன். ஆனால் உரை யாடும் நிலையில் அவர் இல்லை. அவரை அழைத் துவந்த அவரது தந்தை அங்கு நின்றார். அவரிடம் விடயங்களைக் கேட்டறிந்தேன்.

சுனாமியில் குறிப்பிட்ட இளைஞனது தாயும் சகோதரியும் மரணித்துவிட்டதனால் தந்தையும் மகனும் தங்களது வீட்டில் தனியாக வாழ்ந்துள்ள னர். தாயில்லாப் பிள்ளை என்பதனால் தந்தைக்கு மகன்மீது அதிக பாசம். இவ்வாறு கட்டுப்பாடில் லாமலும் பொறுப்பில்லாமலும் வளர்ந்த மகன் க.பொ.த. சாதரண தரப் பரீட்சையில் சித்தியடை யவில்லை. அதற்கும் எதுவுமே பேசாத தந்தை மகனுக்கு ஒரு முச்சக்கர வண்டியை வாங்கிக் கொடுத்திருக்கிறார். மது, மாது, கஞ்சா, மாவா என பலவற்றையும் ருசிப்பதுதான் மகனின் நாளாந்த செயற்பாடு. அதாவது ஒரு நாளைக்கு 1000 ரூபாய் தந்தை கொடுக்கவேண்டும். அதில் 300 ரூபாய்க்கு பெற்றோல் அடித்துக்கொண்டு 200 ரூபாய்க்கு மாவா(ஒருவகை நவீன போதைப்பொருள்) வாங் கிக் கொண்டு உல்லைக் கடற்கரைக்குச் சென்று அங்கு குளித்து உல்லாசமாய் இருந்துவிட்டு வீட் டுக்குத்திரும்புவதுதான் இவரது வழமை. இவ் வாறு சென்றவர் ஒருநாள் அதிகமாக மது அருந்தி யநிலையில் கடற்கரையில் ஏற்பட்ட தகராறினால் பொலிசாரினால் பிடிக்கப்பட்டு அவரது மனநிலை தடுமாற்றம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து உரியவர்க ளுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் இவரது தந்தை சென்று அவரை மீண்டும் இந்த வைத்தியசா லைக்கு அழைத்து வந்திருக்கின்றார். அதிக போதை வஸ்துப் பாவனையால் மாயப்புலனுணர்வு என்ற உளநோயால் பாதிக்கப்பட்ட அவருக்கு அவரது நிலையைக் கட்டுப்படுத்த வழங்கிய மாத்திரைக ளினால் அவரது வாயாலே கூறிய விடயங்கள்தான் மேற்சொன்ன அவரது அன்றாட நடவடிக்கைகள்.

சில நாட்களில் அவர் நல்ல நிலைக்கு வந்து விடுவார் என்று உளநல மருத்துவர் கூறியிருந்தார். ஆனாலும் அவர் மீண்டும் அந்த மாவாவின் பக்கம் அதிகம் நாட்டம் கொண் டால் அவரது நிலை மோசமாகும் எனவும் எச்சரித்திருந் தார். எமது பிள்ளைகளுக்கு, வேண்டிய சுகபோகங்களை வழங்குகிற நாம் 'அவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கு போகிறார்கள்' என அவர் களது நடவடிக்கைகளில் கவனம் செலுத்த மறந்து விடுகிறோம். நாம் பெற்ற பிள்ளைதான் என்பதற்காக அளவுக்கு மீறிய அளவில் அவர்களுக்கு ஆடம்பரத்தை வழங்குவதென்பது இப்ப டிப்பட்ட விளைவுகளைத் தான் தோற்றுவிக்கும். இவரது மகன் நடந்துகொள் கிற விதம் பார்ப்பதற்கே கவலையாய் இருந்தது. ஆனால் வீட்டில் அமைதியான பிள்ளையாய் ஆரம்பத்தில் இருந்தவராம். மாவா பாவனைக்கு அடிமையான பிறகுதான் யாரிடமும் பேசுவதில் லை, அதிகமாக கோபப்படுவது, என்னேரமும் தனிமையிலே இருப்பது, உணவிலே வெறுப்புக் காட்டுவது, உதட்டுக்குள் ஏதோ ஒன்றை(மாவா வை) எப்போதுமே வைத்திருப்பது என அவரது நடவடிக்கைகள் முற்றிலுமே மாறிவிட்டன என வருத்தத்தோடு கூறினார்.

அன்புள்ள பெற்றோர்களே! தாயோ தந்தையோ யாரானாலும் பிள்ளையின்மீது முழு அதிகாரமும் உங்களுக்கு உண்டு. அவர்களுக்குரிய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றவேண்டியது எவ் வாறு உங்கள் கடமையோ அதேபோலத்தான் அவர் கள்மீது அதிகாரம் செலுத்துவதும், அவர்களை நல்ல வர்களாக வளர்த்தெடுப்பதும் உங்களது தலையாய கடமை. அவர்களது நடவடிக்கைகளில் மாற்றத்தை கண்டுகொள்வதென்பது பெற்றோருக்கு மட்டுமே இறைவன் வழங்கியதொரு அருட்கொடை. அதை உரியமுறையில் பயன்படுத்தி அவர்களை நல்வழிப் படுத்தி அவர்களின் எதிர்காலம் செழிப்புற ஆவன செய்யுங்கள்.



ஸஹீட். எச். சப்றீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கான மழையின் ராகங்கள்

திருமதி சந்தியா சந்தோஷ்

பழுதடைந்த வீட்டை இடித்து விட்டு வேறொன்றை கட்டுவது போலவே இன்றைய காலத்தில் திருமண வாழ்க்கையும் சென்றுகொண்டிருக்கிறது. கணவனிடமோ மனைவியிடமோ ஏதாவது ஒரு குறையைக் கண்டுவிட்டால் அதனை சரிசெய்து புதுப்பிக் காமல் உடனே விவாகரத்து என்ற பரீட்சை க்கு விண்ணப்பித்துவிடுகின்றனர். வீட்டை புதுப்பித்து வாழ முனைவது போல வாழ்க் கையின் சின்னச்சின்ன பிரச்சினைகளை சரி செய்து வாழ முற்படுவதில்லை.

திருமணமான புதிதில் கணவனும் மனை வியும் ஒருவருக்காக ஒருவர் உயிரைக்கூட கொடுக்க தயாராயிருப்பார்கள். ஆனால் காலப்போக்கில் இவர்களே தான் எதிரெதிர் துருவங்களாய் மாறி நிற்கின்றனர். நானா? நீயா? என்ற போட்டியில் தமது அழகான இல்லறத்தை தொலைத்துவிடுகின்றனர். கணவன் மனைவி இருவருக்குமிடையிலான புரிந்துணர்வு சரியானவாறு இல்லாதிருப்பதே இதற்கான காரணமாகும்.

கணவனும் மனைவியும் ஒருவரையொ ருவர் நீக்கமற புரிந்துகொள்வதுடன் ஒருவர் அடுத்தவரின் தேவைகளையும் உணர்வு களையும் மதிக்க கற்றுக்கொள்ள வேண் டும். திருமணமானதும் தனது துணை தனக் கேற்ற மாதிரியாக மாறவேண்டும் என எண் ணுவதை விட அவர்களை அவர்களாகவே ஏற்றுக்கொள்வதே மிகமுக்கியம். அவ்வாறு ஏற்றுக்கொள்ளாதவிடத்தே பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றது. அதுவே விவாகரத்து என்ற மிகப்பெரிய அணுகுண்டாகி குடும்பத்தை காவுகொள்கிறது. அபிராம், ஆர்த்தி இருவரி னதும் வாழ்க்கையிலும் இது தான் நடந்தது.

குடும்ப நீதிமன்றத்தின் வாசலில் காத்தி ருந்தாள் ஆர்த்தி. உள்ளே சட்டத்தரணியோடு உரையாடியபடி அபிராம். விவாகரத்திற்கு விண்ணப்பித்து ஒரு வருடங்கள் கடந்துவிட் டது. இன்று தான், சட்டப்படி இருவரும் பிரிந்துவிட்டனர் என்ற இறுதி தீர்ப்பு வழங் கப்பட்டது. ஆர்த்தியின் உணர்வுகள் அவ ளுக்கே விசித்திரமாய் இருந்தது. ஏதோ ஒரு பயம் அவளை ஆட்கொண்டிருந்தது. நெஞ் சுக்கூடு காலியானது போல ஒரு உணர்வு. யாருமற்ற வனாந்தர வெளியில் தனிமையில் நிற்பது போன்ற பிரமை.


அபிராமிற்கோ உள்ளம் உருகி உருகி அழு தது. இருவரினது எண்ணங்களும் கடந்த காலத்தை நோக்கிப் பாய்ந்தது.

இருவருமே சினிமாத்துறையில் முதல் நிலையில் இருந்தனர். இரண்டு மூன்று படங்கள் ஒன்றாக நடித்தனர். மெல்ல மெல்ல ஒருவர் மனதில் மற்றவர் பதிந்தனர். ஆர்த்தி, அபிராம் சார்ந்த அனைத்து விடயங்களிலும் அதிக அக்கறை காட்டினாள். அவனது நடிப்பு, ஒப்பனை என ஒவ்வொன்றாய் பார்த்துப் பார்த்து அவள் காட்டிய அக்கறை அவள் மீதான அவனது நேசத்திற்கும் தூபம் போட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கான மழையின் ராகங்கள்

இருவரும் ஒருவர் மற்றவர் மீது கொண்டிருந்த அன்பை உணர்ந்து கொண்டனர். ஒரே துறையில் மிகப்பெரிய தரத்தில் இருந்த இருவரும் தம் அன்பை மற்றவரிடம் சொல்வதில் தயக்கம் காட்டினர். வெளியே சொல்லவிடாது கட்டி வைத்திருந்த அந்த மௌனத்திரையை முதலில் கிழித்தது அபிராம் தான்.

ஒரு படத்தின் பூஜை நாளில் கடும் மழை. காரில் தனியே வந்திருந்த ஆர்த்தி எப்படி செல்வது என யோசித்துவிட்டு வேறு வழியின்றி புறப்பட்டு விட்டாள். வீதியெங்கும் கும்மிருட்டு. குறைந்திருந்த மழை சற்று நேரத்தில் மிகப்பலமாக பெய்யத்தொடங்கியது. ஏது செய்வதெனத் தெரியாது தடுமாறிய




அவள், அது அபிராம் வாழும் ஏரியா என்பதை எண்ணியபடிஉடனடியாக அவனுக்கு அழைப்பை எடுத்தாள். இணைப்பில் வந்த அபிராம், அவள் கூறியதைக்கேட்டதும் பயப்படாதே ஆர்த்தி, இதோ நான் உடனே வந்துவிடுன்றேன், என்றான். சொல்லிமுடித்து பத்து நிமிடங்கள் கழிந்திருக்கும் அவ்விடத்திற்கு வந்துவிட்டான்.

முதலில் அவனது வீட்டிற்கு அழைத்துச்சென்று சூடான தேனீர் கொடுத்து அவளை ஆசுவாசப்படுத்தியவன் கொட்டுற மழையில இப்படித்தான் தனியே கிளம்புறதா என்றான் கோபத்தை அடக்கியபடி.

இல்லை, நான் இப்பிடி மழை வரும்னு எதிர்பார்க்கல, அதான் என்றாள்.

சரி, கூட யாரையாவது கூட்டிட்டுப் போயிருக்கலாமே என்றான்.

அது அவள் இழுக்கவும்

ஏன் என்னை கூப்பிட்டிருக்கலாமே என்றான். அவசரமாய் நிமிர்ந்து பார்த்த ஆர்த்தி, நீங்க வேலையா இருப்பீங்கன்னு நினைச்சுத் தான் சொல்லாமல் மென்றுவிழுங்கினாள். உன்னை விட வேலை முக்கியமா? எதிர்பாராத அவனது பதிலில் ஆடிப்போன ஆர்த்தி மெல்ல நிமிரவும் இனிமேலும் சொல்லாம விட்டிட்டு நீ என்ன ஆபத்தில மாட்டுவியோன்னு ஏங்கிட்டிருக்கமுடியாது என்றான்.

ஆயிரம் பல்ப் வெளிச்சம் போல பிரகாசித்தது ஆர்த்தியின் விழிகள். நடிப்புத்துறைக்குள் வந்தபின் எல்லோருடனும் சகஜமாய் பழகி தன்னை ஒரு சிறந்த நடிகையாக நிலை நிறுத்திய அவளுக்கு அன்றைய உணர்வு போல என்றுமே தோன்றியதில்லை.

அபிராமை நிமிர்ந்து கூட பார்க்கமுடியாமல் நாணம் கட்டிப்போட்டுவிட்டது அவளை. அருகில் வந்தவன் அவளைப் பற்றி எழுப்பி அழைத்துச்சென்று வீடு சேர்த்ததும் ஒரு பொம்மை போல அவள் நடந்துசென்றதும் இன்று போலிருந்தது ஆர்த்திக்கு.

காலப்போக்கில் அவசரமாய் பதிவுத்திருமணம் செய்துகொண்டனர். ஆரம்பத்தில் இருவரும் உல்லாசப் பறவைகளாய் சிறகடித்தனர். பத்திரிகை ஒன்றில் ஆர்த்தியைப் பற்றி பிரசுரமாகியிருந்த கட்டுரை ஒன்றே அவர்களின் பிரிவிற்கு அத்திவாரமானது. அதன் பின்னர் அவளது நடை, உடை, பாவனை ஒவ்வொன்றையும் மாற்றமுற்பட்டான் அபிராம்.

அது ஆர்த்தியின் மனதை பெரிதும் பாதித்தது, அவள் காரணம் கேட்டபோது, எனக்கு உன்னைத்தெரியும், ரெண்டுபேருமே ஒரே துறையில இருக்கிறதால எல்லாத்தையும் என்னால சரியா புரிஞ்சுகொள்ளமுடியும், அதால நான் சொல்றதை கேள், பாத்து நடந்துகொள் என்றான். இதுவே இருவரதும் பிரிவின் ஆரம்பமானது. சில நாட்களில் விவாகரத்து பத்திரத்தை நீட்டினாள் ஆர்த்தி. பேச எதுவும் தோன்றாமல் கையொப்பமிட்டான் ஆபிராம்.


இன்று விவாகரத்தும் கிடைத்துவிட்டது. ஆனால் இருவராலும் சுதந்திரமாய் பறக்கமுடியவில்லை. சிறகுகள் வெட்டப்பட்ட பறவைகள் போல துடித்துக்கிடந்தனர். இனிமேல் அபிராம் தனக்கு இல்லை என்ற நினைவில் ஆர்த்தியும் தன் மனைவி என்ற பொக்கிசம் கைநழுவிப்போய்விட்டதே என்ற தாங்கமுடியாத வேதனையில் அபிராமும். தங்களை மறந்து பித்துப்பிடித்தவர்கள் போல இருவருமே வீதியில் நடக்கத்தொடங்கினர்.

இப்போது தான் தங்கள் பிரச்சினை சரி பண்ண முடிந்ததே என்பதும் சரி பண்ணாததால் வாழ்க்கை தொலைந்துவிட்டதே என்பதும் இருவருக்கும் புரிந்தது. தம்மை மறந்து இருவருமே வந்து சேர்ந்த இடம் இவர்கள் ஒன்றாய் வாழ்ந்த வீடு. ஒருவர் கரத்தை மற்றவர் பற்றிக்கொண்டு கதறிக்கதறி அழுதனர்.

அப்போது புரிந்தது இல்லற பந்தத்தின் அர்த்தமும் விவாகரத்தின் வலியும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பி(ரே)ரம்மஞானி பதில்கள்





**வனிதா வட்டக்கச்சி**

ஹாய் ஞானி வணக்கம்! இப்போது வரும் திரைப்படங்களின் பெயர்கள் நீளமானதாகவும் வித்தியாசமானதாகவும் உள்ளதே,?

'ஆம், ஹலோ நான் பேய் பேசுறேன்' அப்பிடீன்னு ஒரு படம். எதுக்கு இவ்வளவு நீளமா, ''என்னங்க?'' ன்னு வச்சிருக்கலாம்.

**தியாகு முத்தையன்கட்டு**

என் மகனுக்கு திருமணம் செய்துவைக்கலாம் என அவனிடம் கேட்டபோது நிலா மாதிரி பொண்ணு பாருங்க, என்றான், அது என்ன நிலா மாதிரி?

அட, இது கூட தெரியலையா? இரவில வந்து பகல்ல போயிடுறது தான். (காமடி)

**கார்த்திகா நெடுங்கேணி**

பிரம்ம ஞானி அவர்களே! சாவித்திரி தன் கணவனை எமதர்மராஜாவிடம் இருந்து மீட்ட கதை தெரியுமா?

ஓ இதிலிருந்து புருசனை பொண்டாட்டி கிட்ட இருந்து எமதர்மனால கூட காப்பாத்தமுடியாது என்ற உண்மை தெரிஞ்சுபோச்சே.





**அரவிந் மல்லாவி**

ஒரு நாள் வேலைக்காரி வரல்லைன்னாலும் வீடே சரியில்லையே, உங்க வீட்ல எப்படி?

இது கூட பரவாயில்லையே, எனக்கு மனசே சரியில்லாமப் போயிடுதே.

**றூபன் குடாஓயா**

லோன் வாங்கி கட்டமுடியாமல் திணறியதுண்டா ஞானி?

ஆம், ஆம், தவணைக்கட் டணம் கட்டமுடியாததால் என் காரைப்பிடுங்கிக்கொண்டு போனபோதுதான் யோசித்தேன், பேசாம கல்யாணத்திற்கு லோன் வாங்கியிருக்கலாம் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# வாய்மையின் வாயாடிகள்

''நான் சென்று வருகின்றேன்'' என்றபடி விடைபெற்றுக்கொண்ட அந்த வயதான பெண்மணியின் முகத்தில் கவலை குடி கொண்டிருந்தது. ''என்னம்மா அதற்குள்ளாக செல்கின்றீர்கள்.அனைவரும் சேர்ந்து ஒளிப்படம் கூட எடுத்துக்கொள்ளவில்லையே'' என்றேன்.

''பரவாயில்லை, உங்கள் அன்புக் கட்டளையின்படி உணவு உண்டுவிட்டேன்.அறுகரிசி போடும்போதே பதிவாகியிருக்கும். தனியாக எதற்கு'' என்றவரின் குரலில் பிசுறு தட்டியது. இங்கிருந்து சென்றுவிட விரும்புவதை அவரது செயல் உணர்த்தியது. முகம் இருண்டு போயிருந்தது.

''சரியம்மா,சென்று வாருங்கள்'' என்றபடி தாம்பூலப்பையை அவரது கைகளில் திணித்துவிட்டு மண்டபத்துக்குள்ளே விரைந்தேன். ''என்ன இருந்தாலும் கடவுள் முன்னிலையில் கோவிலில் தாலி கட்டிக்கொள்வது போல வருமா, எல்லாம் எமது வசதிக்கேற்ப மாற்றிவிட்டோம். எனக்கு இதில் உடன்பாடு இல்லை'' என்றபடி அரட்டை அடித்துக்கொண்டிருந்த கூட்டத்தைக் கடக்க முயற்சித்தேன்.

''என்ன யாழினி இன்னும் பயணம் சரி வரவில்லைப்போல'' என்று ஒரு குரல் தடுத்தது. பல ஆண்டுகளாகப் பழகிப்போன இந்தக் கேள்வியால் எழுந்த வலியை அடக்கிக்கொண்டு ''இல்லை இன்னும் சரி வரவில்லை'' என்றபடி திருமணத்திற்கு வந்திருந்தவர்களைக் கவனிக்கத்தொடங்கினேன்.

திருமணமாகி ஐந்தாண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், இன்னும் கணவனிருக்கும் வெளிநாடு செல்வதற்கான அலுவல்கள் சரிவரவில்லை என்பதாலேயே இக்கேள்விகள். ஒரு பெண் தனித்திருந்து அனைத்து வேலைகளையும் பார்ப்பதை விடவும் இது மாதிரியான கேள்விகள்தான் அதிகம் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணம் என்பதால் எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டுக்கொண்டு செய்து கொண்டிருந்தேன். மணப்பெண்ணின் தாயார் வேகமாக வந்து ''அம்மா யாழினி! பாக்கியம் அக்காவைப் பார்த்தாயா? இங்கேதான் நின்று கொண்டிருந்தா ஆனால் காணவில்லை'' என்றார்.

''சற்றுமுன்னர்தான் விடைபெற்றுச் சென்றார். ஏதோ அவசரம் போல என்றேன். '' என்ன அதற்குள்ளாகவா, இந்தத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்மையின் வாயாடிகள்

திருமணத்திற்கென்றே வெளியூரில் இருந்து அத்தனை மகிழ்ச்சியாக வந்தவராயிற்றே விரைவாகச் செல்லும் அளவிற்கு அப்படி என்ன வேலை'' என்று அங்கலாய்த்தபடி நடந்து சென்றார். இருவரும் பள்ளித் தோழிகள் என்று ஏற்கனவே அறிந்திருந்தேன்.


ஓரளவுக்கு வேலைகளை முடித்துக் கொண்டு அனைவரோடும் வந்தமர்ந்து கொண்டேன். ''எப்போது திருமணம் செய்வதாக எண்ணியிருக்கின்றாய். இப்படியே படித்துக் கொண்டிருந்தால் எப்படி?'' என்றபடி ஒரு திருமண வயதுள்ள பெண்ணைக் குடைந்துகொண்டிருந்தார்கள்.

''ஏன் அவ்வளவு விரைவாகத் திருமணம் செய்து என்ன செய்வதாம். திருமணம் செய்து பிள்ளை பெற்று வாழ்வதுதான் வாழ்க்கையா. ஏன் இப்படி அவசரப்படுகின்றீர்கள். எங்களுக்கென்று சில கனவுகள் இருக்கும், அவற்றை அடைந்துவிட்டுத் திருமணம் செய்துகொள்வோம். அதற்குள் ஏன் எங்களை இடையூறு செய்கின்றீர்கள் '' எனச் சரிக்குச்சரியாக அந்தப் பெண்ணும் வாயடித்துக் கொண்டிருந்தாள்.

எனக்குக் கொஞ்சம் வியப்பாகவே இருந்தது. பரவாயில்லை கொஞ்சம் தெளிவாகவே பேசுகின்றாள். இப்படியான கேள்விகளுக்ும், பார்த்த இடங்களிலெல்லாம் பெண் கேட்கும் படலத்தை ஆரம்பித்துவிடும் பெரியவர்களுக்கும் பயந்தே நான் எந்த முக்கிய விழாக்களிலும் கலந்து கொள்ளாமல் ஓடி ஒளிந்துகொண்ட என் மாணவப் பருவத்தை எண்ணிப் பார்த்தேன்.

நல்ல இடமென்று கல்லூரியை இடைநிறுத்திவிட்டுத் திருமணம் செய்து வைத்த பெற்றோரோடு என்னையும் நொந்துகொண்டேன் ஏன் அந்த வயதில் இப்படிப் பேச முடியாமல் போனதென்று. இன்று வெளிநாட்டுப் பயணமும் சரி வராது, கல்லூரிப் படிப்பையும் இடைநிறுத்திவிட்டு இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் என்னை நினைக்க எனக்கே எரிச்சலாக வந்தது.

இன்றும் தவிர்க்க முடியாத விழாக்களிற்கு சென்று அங்கே கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது விழித்தபடி,'' என்ன மனிதர்கள் இவர்கள், அடுத்தவர்களை உளவு பார்க்கின்றார்களா அல்லது கவலைகளைக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றார்களா''என்று மனதிற்குள் திட்டியபடி வீட்டிற்கு வந்து அழுவதும் வழக்கமாகிப் போனது.



★★★★

திருமணம் முடிந்து ஒரு கிழமையின் பின்பாக மலரக்கா வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கே அவரது தோழி பாக்கியமும் இருந்தார். விடைபெற்றுச் செல்வதற்கு ஆயத்தமாக இருப்பது தெரிந்தது. என்னைக் கண்டதும் முகம் மலர ''நன்றாக இருக்கின்றாயாம்மா, அன்று சரியாகப் பேச முடியவில்லை'' என்று நலம் விசாரித்தார். தலையாட்டியபடி பதிலுக்கு நலம் விசாரித்துக்கொண்டேன். என்னிடமும் சொல்லிக் கொண்டு விடைபெற்றார்.

அவர்சென்றகையோடு மலரக்காபொரிந்து தள்ளத் தொடங்கினார். ''பார்த்தாயா யாழினி, எமது மக்களுக்கு இங்கிதம் என்பதே தெரிவதில்லை. அடுத்தவர்கள் காயத்தைச் சுரண்டிவிட்டு இரத்தம் வரவைப்பவர்கள்'' என்றார்.

எனக்கு எதுவுமே புரியவில்லை. கேள்விக்குறியோடு பார்த்தேன்.'' என் நண்பி பாக்கியம் எவ்வளவு ஆசையோடு இந்தத் திருமணத்திற்கு வந்திருந்தாள் தெரியுமா, நலம் விசாரிக்கின்றோம் என்ற பெயரில் அவளைக் காயப்படுத்தி அனுப்பியிருக்கின்றார்கள். திருமணத்தில் இருந்தால் எங்கே அழுதுவிடுவோமோ என்ற பயத்தில் அங்கிருந்து அவள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.'' திருமணத்திலிருந்து இருண்டு போன முகத்தோடும், விம்மல் நிறைந்த குரலோடும் அவர் வெளியேறியது எனக்கு நினைவில் தோன்றியது.

''ஆம், அவர் அன்று செல்லும்போது அவரது முகம் நன்றாக இல்லை, என்னவாயிற்று'' என்று வினாவினேன். ''அவளுக்கு ஒரு பொம்பிளைப் பிள்ளை, துணைவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே இறந்துவிட்டார். பல ஆண்டுகளாகச் சேமித்த பணத்தைக் கொண்டு அண்மையில் சிறப்பான முறையில் மகளின் திருமணத்தை நடத்தி வைத்தாள். ஆனால் அவளைத் திருமணம் செய்தவன் ஒரு மனநோயாளி. இந்தப் பெண்ணைக் கொல்லும் அளவிற்குப் போன பின்னர் மகளைத் தன்னோடு அழைத்து வந்துவிட்டாள்''என்றார்.

என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. ஐந்தாண்டுகளாக இதை நான் சந்தித்து வருகின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாய்மையின் வாயாடிகள்

அவர் தொடர்ந்தார் '' திருமணத்திற்கு வந்தவர்கள் நலம் விசாரிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் மகளிற்கு எத்தனை குழந்தைகள், எங்கே இருக்கின்றாள் என்று உண்மையறியாமல் விசாரித்தவர்கள் ஒருபுறமும், உண்மையைத் தெரிந்துகொண்டு மேலும் விளக்கம் அறியும் நோக்கில் என்னவாயிற்று, சரியாக விசாரிக் காமலே ஏன் திருமணம் செய்து வைத்தீர்கள்'' என்று குற்றப்பத்திரிக்கை படித்தவர்கள் ஒருபுறமும் என அவளது மனதை நோகடித்திருக்கின்றார்கள். நீயே சொல்லு யாழினி எந்தப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குத் தெரிந்துகொண்டே ஒரு தவறான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பார்கள். அப்படி ஏதோ ஒன்று நிகழ்ந்துவிட்டால் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்களே தடுமாறிக் கொண்டிருக்கும் நேரத்தில் இத்தகைய கேள்விகள் அவசியமா? ஒன்றுகூடும் நேரங்களில் இந்த விசாரணைகள் அவசியமா? பார்த்த இடத்தில் எதையோ கேட்டு வைக்க வேண்டுமே என்று கேட்கப்படும் கேள்விகள் மற்றவர்கள் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஏன் சிந்தனை செய்யத் தெரிவதில்லை'' என்றார்.

எல்லாம் நியாயமான கேள்விகள்தான். நான் மலரக்காவோடு நன்கு நெருங்கிப் பழகுவதற்கு இதுவும் ஒரு காரணம். அடுத்தவர் மனதை நோகடிக்கும் வண்ணம் எதுவும் பேசமாட்டார். என் பயண அலுவல்களில் தடங்கல் ஏற்பட்டபோது உறுதுணையாக நின்றவர்.


''எப்பொழுது பயணம்'' என்று யாராவது கேட்டால்கூட '' செல்வதாக இருந்தால் சொல்லிவிட்டுதானே போகப்போகின்றாள், அதற்குள் ஏன் இத்தனை கேள்விகள். நீங்கள் முக்கியமானவராக இருந்தால் பார்த்த உடனேயே பயணம் சரி வந்துவிட்டது செல்லப்போகின்றேன் என்று கூறுவாள் அல்லவா, அவ்வாறு கூறாவிடின் இன்னும் சரிவரவில்லை என்று பொருள் என்று உணர்ந்து கொள்ளுங்கள். புத்திசாலிகளாக இருந்தால் இதைப் புரிந்துகொள்வார்கள்'' என்று சிரித்தபடியே கூறிவிடுவாள். அக்கறையில் கேட்டவர்கள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

புதினம் அறியும் நோக்கில் கேட்பவர்கள் முகம் சுருங்கிப்போய்விடும்.

இப்போதும் அவரது ஆதங்கம் எனக்கு விளங்கியது. ஒரு பெண்மணி தனியாளாக நின்று நடத்தி வைத்த மகளின் திருமணம் முறிந்துவிட்டது. அதை ஒரு செய்தியாக எண்ணி விசாரிப்பவர்களுக்கு அதன் வலி எப்போதுமே புரியாது. ஏன் இந்த மனிதர்களின் குணம் இவ்வாறு உள்ளது. திருமண வயதில் பெண்களையும்,ஆண்களையும் பார்த்தால் எப்போது திருமணம் என்பதும், படிப்பு முடித்த ஆண்களை எப்போது வேலைக்குச் செல்வாய், என்ன வேலை என்று கேட்பதும், திருமணமானவர்களாய் இருந்தால் குழந்தையைப் பற்றிக் கேட்பதும், பெரியவர்களாய் இருந்தால் பிள்ளைகளின் வாழ்க்கையைப்பற்றிக் கேட்பதும் என இத்தகைய கேள்விகளை வாடிக்கையாகவே வைத்துள்ளார்கள்.

இவை எந்த அளவிற்கு மற்றவர்களைக் காயப்படுத்தும் என்பதை உணர்வதே இல்லை. திருமணம் கைகூடினால் வந்து திருமணத்திற்கு அழைக்கப் போகின்றார்கள், பையனுக்கு வேலை கிடைத்தால் அவர்களாகவே சொல்லப் போகின்றார்கள், குழந்தை உண்டானால் அதையும் சொல்லப் போகின்றார்கள், பிள்ளைகள் வாழ்க்கை மகிழ்வாக இருந்தால் பெற்றவர்கள் பெருமிதத்துடன் சொல்லப் போகின்றார்கள். அதையெல்லாம் விட்டுவிட்டு நலம் விசாரிக்கின்றோம் பேர்வழி என்று நல்ல நிகழ்வுகளின் மகிழ்ச்சியைக்கூட அனுபவிக்கவிடாமல் தங்களது கேள்விக் கணைகளால் பலரை வரவிடாமலே செய்துவிடுகின்றனர். என்ன மனிதர்கள் இவர்கள் என்று சலித்துக்கொண்டேன்.

''அந்த வலி எனக்குத் தெரியும் யாழினி, என்னுடைய மகளிற்குத் திருமணம் நடக்கும் வரையில் எப்போது திருமணம் என்ற கேள்வியை நான் சந்திக்காத நாட்களே இல்லை. எத்தனையோ நாட்கள் ஊராரின் கேள்விக்காக வருந்தியிருக்கின்றேன். இது எப்போதும் ஓயப்போவதில்லை, இனிமேல் உனது மகளிற்கு எப்போது குழந்தை பிறக்கும், ஏதாவது நல்ல செய்தி உண்டா என்று கேட்பார்கள். பார்த்தவுடன் எதையாவது கேட்க வேண்டுமே என்று கேட்பார்கள் பார்'' என்றார். உண்மைதான் என்று நானும் ஏற்றுக் கொண்டேன். சிறிதுநேரம் உரையாடிவிட்டு எனது வீட்டிற்குச் சென்றேன்.



பொலிகையூர் ரேகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

# அழகெனப்படுவது யாது?

## வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி!

எழுதுவது:
பாலாஜினி - பளை

அத்தியாயம்
7




**வா**ருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி எனும் தொடரினூடாக உங்களைச் சந்திப்பதையிட்டு நான் உளமார சந்தோசம் கொள்கின்றேன். ஒவ்வொரு பகுதியின் ஊடும் நான் உங்களுடன் ஏதேனும் வாழ்க்கை சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி கலந்து கொள்வது வழக்கம். என்னுடைய எண்ணத்தில் தோன்றுகின்ற விட யங்களையே நான் உங்களிடம் கலந்து கொள்வேன். அந்த வகையில் நான் இதுவரை உங்களுடன் பகிர்ந்து கொண்ட விடயங்கள் உங்கள் மனதில் நிச்சயமாக ஏதேனும் ஒரு நல்லமாற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் என நம்புகின்றேன். அந்த நம்பிக்கையின் தொடர்ச்சி யாக இந்தப் பகுதியில் நான் உங்களுடன் **''அழகு என்பது எதுவோ? அதை அடைந்து கொள்வது எப்படி''** எனும் தலைப்பில் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பது சங்ககாலம், சங்கமருவிய காலம் என எல்லா வற்றையும் தூக்கிச் சுருட்டி எறிந்து விட்டு முன்னேறிக் கொண்டிருக்கின்ற அதி நவீன யுகத் திலாகும். அப்படியான யுகத்தில் எத்தனையோ தொழிநுட்பங்கள், இரசாயனங்கள் மாற்றங்கள் என்பன ஏற்பட் டாலும் என்றுமே மாறாது இருப்பது இந்த 'அழகு' என்ற சொல் மட்டும்தான். அழகு என்ற விடயத்தைப் பற்றி நாம் கொண்டிருக் கின்ற எண்ணங்களும், செயற்பாடுகளும், வெளிப்பாடுகளும் தான் மாறிக்கொண்டிருக்கின்றனவே தவிர அழகு இன்றும் மாறவே இல்லை.

உண்மையிலேயே அழகு என்பது என்ன என்று சிந்தித் துப்பார்திருக்கின்றீர்களா? ''நீ அழகு, அவள் அழகல்ல'' என்று வாய்க்கு வந்தபடி எதையோ சொல்லுகின்றோம். ஆனால் அழகு என்பது ஆணா? பெண்ணா? அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அழகெனப்படுவது யாது?

எவ்வாறு எண்ணக்கருவானது என்று நினைப்பது இல்லை. நிஜத்தைச் சொல்ல வேண்டுமே ஆனால் அழகு என்பது பார்ப்பவரின் / இரசிப்பவரின் மனநிலையை உணர்வுகளைப்பொறுத்தது. ஒருவருக்கு அழகாக இருப்பது இன்னொருவருக்கு அசிங்கமாகத் தெரியும். ஓவியம் ஒன்றைப் பார்க்கும் ஒருவருக்கு அது மிகவும் அழகாகவும், அம்சமாகவும் தோன்றும். அதே ஓவியத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் வேறு ஒருவர் அதைப்பார்க்கும் போது அதே ஓவியம் அவருக்கு அசிங்கமாகவும், அழகற்றதாகவும் இருக்கும். இதுதான் அழகு என்பது. அழகு என்பதை, 'இதுதான், இது இப்படித் தான் இருக்கும்' என்று யாராலும் வரையறுத்துக் கூறிவிட முடியாது. ஒவ்வொரு மனிதர்களும் தங்களுக்கு ஏற்றாற் போல அழகுக்கு ஓர் அர்த்தத்தினை சிருஷ்டித்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தவகையான அழகி என்ற ஆராய்ச்சிக்கு அப்பால் எல்லோரும் தங்களை அழகுபடுத்திக் கொள்ளவே விரும்புகின்றார்கள் என்பதுதான் குறிப்பிடத்தக்க விடயம். அழகு படுத்திக் கொள்வதற்கு எத்தனையோ விதமான வகைகள் / வழிகள் காணப் படுகின்றன. ஆனால், இன்றைய ஆண்களும் பெண்களும் நவீன முறைகளைப் பயன்படுத்தி தம்மை அழகுழுடுத்திக் கொள்கின்றார்கள். அதுதான் தமக்கு உண்மையான அழகு என அவர்கள் எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால் மற்றவர்களின் பொதுவான கண்களுக்கு அவர்கள் அழகில்லாது தோன்றுகின்றார்கள் என்பதை நம்ப மறுத்து விடுகின்றார்கள். வாசகர்களே! நீங்கள் பெண்ணாக இருந்தாலும் சரி ஆணாக இருந்தாலும் இயற்கையாகவே நீங்கள் அழகாக தோன்றுவதற்கும் இலகுவான எத்தனையோ வழிமுறைகள் உள்ளன. பணத்தை பெருமளவில் செலவு செய்து ஒப்பனைகள் போட்டு உங்களை அழகாக்கிக் கொள்வதை விட எந்தவித செலவும் இல்லாத ஒப்பனைகள் இவை. ஆனால் இந்த ஒப்பனைகள் உண்மையானவை. எமது பண்பாடுகளையும், கலாசாரங்களையும் பாதிக்காதவை. இந்த இயற்கையான வழிமுறைகளை ஒரு முறை பார்க்கலாம்.

### 1. புன்னகையுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல்

புன்னகை என்பது ஒரு பொன்னான அணிகலானாகும். அது எல்லோருக்குமே அழகினைத் தரக்கூடியது. நீங்கள் எப்போதும் உங்கள் முகத்தினை புன்னகையுடன் வைத்துக் கொள்ளுங்கள். கதைப்பவர்களுடனும், சந்திப்பவர்களுடனும் புன்னகையைப் பகிர்ந்து கொள்ளுங்கள். வாழ்வில் கஸ்டங்களும், துன்பங்களும் நேருவது இயற்கையே. ஆனால் அந்த துன்பங்களும் துயரங்களும் உங்களின் முக அழகையும், தோற்றப்பொலிவினையும் பாதிக்காது இருக்க வேண்டுமானால் புன்னகை என்பது அவசியமே. ஒரு சின்னப் புன்னகை உங்களை அழகனாகவோ/ அழகியாகவோ பிரதிபலித்துக்காட்டி விடும். எனவே புன்னகையுங்கள். உங்கள் புன்னகை உங்களை அழகாக்குவதோடு மட்டுமல்லாது




மற்றவர்களையும் புன்னகைக்க வைக்கும்.

### 2. பாரம்பரிய ஆடைகளை அணிதல்

இன்று எத்தனையோ விதம் விதமான ஆடைகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. பெரும்பாலும் அவை எல்லாமே எம் பண்பாடுகள் மற்றும் சலாசாரங்களுக்கு முற்றிலும் பொருத்தமற்றவை. ஆனால் அதை அறிந்து கொள்வதுதான் அழகு என்றும் நாகரிகம் என்றும் எண்ணுகின்றோம். இது முற்றிலும் தவறு. எந்த ஒரு மனிதனுக்கும் அவனது பண்பாடுகளை பிரதிபலிக்கின்ற ஆடைகள் நிச்சயம் அழகாகவே இருக்கும். பண்பாடுகள் தான் மனிதனின் அகஅழகையும், வெளி அழகையும் கூட்டுபவை. எனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தயவு செய்து அழகாக இருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் உங்களுடைய கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள். அது முடியாவிட்டால் ஒழுக்கமான / ஒழுங்கான ஆடைகளைஅணிந்து கொள்ளுங்கள். கண்ணாடி முன் நின்று பாருங்கள். உலகத்தில் அழகு நீங்களே.

**3. இயற்கையை இரசித்தல்.**

இறைவனின் உன்னத படைப்பு இயற்கையே. எழில் கொஞ்சும் இயற்கை எப்போதும் கண்ணுக்கு குளிர்ச்சியையும், அழகையும் தருகின்றது. எனவே இந்த இரசாயனம் கலக்கப்பட்ட வீதிகளிலும், வாகன நெரிசலிலும் சிக்கித் தவிக்கும் நீங்கள் ஓய்வு நேரத்திலாவது இயற்கை நிறைந்த இடங்களை கண்டு களியுங்கள். அந்த இயற்கையினைக்காதலியுங்கள். நேசியுங்கள். நீங்கள்வசிக்கும் இடங்களில் அழகிய மலர்ச்செடிகளை உருவாக்குங்கள். அவை தருகின்ற சுத்தமான காற்றை சுவாசியுங்கள். மலர்களின் அழகினை ஆராதியுங்கள். இயற்கையின் ஒலிகளையும், அதன் உணர்வுகளையும் உங்கள் ஆழ் மனதினால் அறிந்து கொள்ளுங்கள். இப்போது இயற்கையை விடவும் அழகானவர் நீங்களே.



**4. மனதை இலேசாக வைத்திருங்கள்.**

மனது எப்போதும் பாரமாகி இருந்தால் அது உங்கள் அழகினைப் பாதிக்கும். மனது என்பது கழிவு தொட்டி அல்ல. அதை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் கடமை. எனவே உங்களை அடக்கி அடிமைப்படுத்த வருகின்ற துன்பங்களையும், துயரங்களையும் அள்ளி ஒரு மூட்டையாக கட்டி எறிந்து விடுங்கள். மனதில் எதையும் வைத்து பூட்டுப் போடாதீர்கள். அது சுதந்திரமாக சிந்திக்கட்டும். சுதந்திரமாக இருக்கட்டும். மனது இலேசாக இருந்தால் அழகு தானாக வரும். ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பதன் அர்த்தம் இதுதான்.

**5) நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்**

குஞ்சி அழகும் கொடுந்தானை கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல. நெஞ்சத்து நலம் யாமெனும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு'' என்கிறது நாலாடியர். கல்வி அறிவு உள்ளவன் நற்பண்புகளை கொண்டிருக்கும் போது அவன் உண்மையிலேயே அழகானவன் தான். எனவே உங்களிடம் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். மற்றவர்களிடம் பண்பாக பேசிப் பழகுங்கள். அது உங்களை அழகானவனாலும், அம்சமானவனாகவும் மற்றவர்களுக்கு காட்டும். இன்றைய கால கட்டத்தில் வெளித்தோற்றத்தில் மட்டுமே ஒப்பனைகளைப்போட்டு எல்லோரும் அழகுபடுத்திக் கொள்கின்றார்கள். ஆனால் அவர்களுடன் கதைக்கும் போதுதான் உண்மைத் தன்மை வெளிப்படுகின்றது. எனவே நீங்கள் அவ்வாறு இல்லாது நற் பண்புகளை உங்களிடம் வளர்த்துக் கொள்ளுங்கள்.

மேற்கூறப்பட்ட பண்புகளை / செயற்பாடுகளை நீங்கள் உங்கள் வாழ்விலும் நடைமுறைப்படுத்துங்கள். இவற்றை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். அடுத்த ஆண்டு உலக அழகன் / அழகி நீங்களாக கூட இருக்கலாம். ஆச்சரியப்படுவதற்கில்லை.

''அழகைப்பாட வந்தேன் தமிழில்
வார்த்தை இல்லை
நெஞ்சில் நீ சிந்தும் முத்தம்'' என்
நினைவில் முத்திரை.



பருவசஞ்சிகைப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரத்தில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குள் ஒளிந்திருக்கும் தத்துவத்தை தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் கண்டுபிடிக்கவும்.

விடைகள்
65 ஆம் பக்கத்தில்

## கண்டுபிடியுங்கள்...

இரண்டு படத்திற்கும் இடையே உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்மாத மங்கை

# வாசிப்பு ஒரு வரம்



பெண்களின் ஆளுமைகளை அடை யாளப்படுத்தி அவர்களின் திறன்களை வெளிப்படுத்தும் ஒளிஅரசியின் இம்மாத மங்கையாக ஜொலிப்பவர் கவிதாயினி, பாடலாசிரியர் எச்.எப். ரிஸ்னா.

**01. உங்கள் பிறப்பிடம், கல்லூரி வாழ்க்கை, தொழில் அனுபவம் பற்றி குறிப் பிடுங்கள்?**

இயற்கை வண்ண எழில் கொஞ்சும் தியத்தலாவையை பிறப்பிடமாகக் கொண்ட நான் கஹகொல்லை அல் பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம், பண்டாரவளை சேர் ராசிக் பரீட் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் எனது கற்றல் செயற்பாடுக ளைத் தொடர்ந்தேன். பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இதழியல்துறை பாட நெறியைப் பயின்றேன். தற்போது கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தில் கணினி வடிவமைப்பாளராக கட மையாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

**02. கவிதை எழுதும் ஆர்வம் எப்படி வந் தது? இந்த ஆற்றலை எப்படி வளர்த்துக் கொண்டீர்கள்?**

இயற்கை அழகு என்னில் பல கற்ப னைகளை விதைத்துவிட்டதாலும், இயல் பிலேயே வாசிப்புப் பழக்கம் எனக்குள் அதிகரித்துக் காணப்பட்டதாலும் எழுத்துத் துறையில் ஈடுபட வேண்டும் என்ற எண் ணம் வலுப்பெற்றது. அதற்கான ஆரம்பகால முயற்சியாக எனது பாடசாலை பாடக்கொப் பிகளின் கடைசிப் பக்கங்களில் சின்னச் சின்ன கவிதைகளை எழுதியிருக்கின்றேன். அவற்றை எதேச்சையாக கண்டுவிடும் நண்பர் கள் அவற்றைப் பாராட்டும்போது உள் ளுக்குள் மகிழ்ந்திருக்கிறேன். அதுவரை என து வீட்டாருக்குத் தெரியாதிருந்த இறைவன் தந்த இந்த ஆற்றலை நான் பாட சாலை மட்டங்களில் கவிதை, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில் மற்றும் சான்றிதழ்களைக் கொண்டு வந்து காட்டி யபோது அறிந்துகொண்டார்கள். வாழ்த்தி னார்கள். பத்திரிகைகளுக்கு அனுப்புமாறு சொன்னார்கள். பத்திரிகையில் முதன்முத லாக நான் எழுதியனுப்பிய கவிதை பிரசு ரிக்கப்பட்டதைக் கண்டு சந்தோசத்தின் உச்சிக்கே சென்றுவிட்டேன். அதிலிருந்து என் எழுத்துப் பயணம் ஆரம்பமானது.

**03. படைப்பிலக்கியத் துறையில் சுமார் எத்தனை வருட காலம் பணியாற்றி வருகின் றீர்கள்? இதுவரை எத்தனை நூல்களை வெளியீடு செய்துள்ளீர்கள்?**

சுமார் 12 வருடங்களாக எனது எழுத்துப் பயணம் தொடர்கின்றது. இதுவரை 09 நூல் கள் வெளியிட்டிருக்கின்றேன்.

01. இன்னும் உன் குரல் கேட்கிறது (கவிதை)

02. வைகறை (சிறுகதை ) 03. காக்கா குளிப்பு (சிறுவர் கதை)

04. மரத்தில் முள்ளங்கி (சிறுவர் கதை)

05. வீட்டிற்குள் வெளிச்சம் (சிறுவர் கதை)


06. இதோ! பஞ்சு காய்கள் (சிறுவர் கதை)

07. திறந்த கதவுள் தெரிந்தவை (விமர்சனம்)

08. நட்சத்திரம் (சிறுவர் பாடல்கள்) 09. மெல்லிசைத் தூறல்கள் (பாடல்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**04. மெல்லிசைத் தூறல்கள் என்ற உங்கள் பாடல் நூல் பற்றி சொல்லுங்கள்?**

ஆம். எனது 36 பாடல்களை தேர்ந்தெடுத்து அவற்றை நூலாக வெளியிட்டேன். இப்பாடல்கள் ஆன்மீகம், சமூக அக்கறை, மனித நேயம், பெற்றோரின் பெருமை, காதல் ஆகியவற்றுடன் இன்னும் பல பாடுபொருள்களில் எழுதப்பட்டுள்ளன. நூலை வாசித்தவர்கள் பாடல்கள் குறித்து மிகவும் பாராட்டிப் பேசினார்கள். இந்தப் பாடல் துறையினூடாக நான் பல எழுத்தாளர்களது அறிமுகங்களைப் பெற்றிருக்கின்றேன். அது எனக்கு மிக்க மகிழ்ச்சியாகும்.

**05. பாடல் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றி?**

எனது தாயார் இஸ்லாமிய கலை நிகழ்ச்சிகளுக்காக இஸ்லாமிய பாடல்களை இயற்றுவார். அதை நான் நன்கு அவதானித்திருக்கின்றேன். அதே போல பாடசாலைத் தோழிகளுடன் சேர்ந்து சில பாடல் மெட்டுக்களுக்கு நான் வரியமைத்திருக்கின்றேன். அதன் பிறகு அண்மையில் ரூபவாஹினி அலைவரிசையில் இஸ்லாமிய நிகழ்ச்சிக்கு பாடல் எழுதும் சந்தர்ப்பம் கிடைத்தது. அத்தோடு மண்வாசனையில் மகரந்தப் பூக்கள் என்ற 11 பாடலாசிரியர்களின் பாடல்களடங்கிய இறுவட்டிலும் எனது பாடல் இணைக்கப்பட்டு வெளிவந்துள்ளது. மேலும் பல இசையமைப்பாளர்களின் பார்வைக்கு எனது பாடல்களை அனுப்பியிருக்கின்றேன். அவர்களின் வாழ்த்துக்கள் இன்னும் பாடல்துறையில் மிளிரவேண்டும் என்ற எண்ணத்தை தோற்றுவித்திருக்கின்றது.

**06. தொலைக்காட்சி, வானொலிகளில் உங்கள் பாடல்கள் ஒளி, ஒலிபரப்பப்பட்டுள்ளனவா?**

'இன்பங்கள் பொங்கும் இரு பெருநாளிலே' என்ற எனது பாடல் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேத்ரா அலை வரிசையில் திரு. டோனி ஹஸனால் இசையமைத்துப் பாடப்பட்டது. அத்துடன் 'மக்காவில் பிறந்த மாணிக்கமே' என்ற பாடல் ஈழத்து இசை முரசு பாடகர் கலைக்கமலால் இசையமைத்து பாடப்பட்டுள்ளதுடன் அவர் வெளியிட்ட 'மண் வாசனையில் மகரந்தப் பூக்கள்' என்ற பாடல் இறுவட்டிலும் வெளிவந்துள்ளன. இப்பாடல் இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளது.

**07. நீங்கள் பாடல்கள் எழுதும் போது கூடுதலாக எதனை மையப்படுத்தி எழுதுகிறீர்கள்?**

இசையமைப்பாளர்கள் பல்வேறுபட்ட சூழ்நிலைகளைச் சொல்லி பாடல் வரிகள் எழுதித் தருமாறு கேட்டபார்கள். சில பாடல் போட்டிகள் குறித்த தலைப்புக்களைத் தந்து பாடல்களை எழுதுமாறு பணித்திருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர, என் மனதுக்கு குதூகலமளிக்கக் கூடிய எல்லா சந்தர்ப்பங்களையும் தனித்தனியாக மையப்படுத்தி நான் பாடல்களை எழுதியிருக்கின்றேன். எழுதி வருகின்றேன்..

**08. ஒரு பாடலை வழி நடத்துவது இசை அல்லது மெட்டு என்றால் அங்கே பாடலாசிரியரின் பங்களிப்பு எப்படி அமைகிறது?**

சில பாடலாசிரியர்கள் இசைக்கு பாட்டெழுதுவார்கள், சில பாடலாசிரியர்கள் தாம் ஏற்கனவே எழுதிவைத்த பாடல் வரிகளை இசையமைப்பாளர்களிடம் கொடுப்பார்கள். சில இசையமைப்பாளர்கள் தேவைப்பட்டால் தமக்கு ஏற்றாற்போல சொற்களை மாற்றிக் கொள்வார்கள். இன்னும் சிலர் இசையமைப்பாளருடன் ஒன்றாக இருந்து பாடலை உடனே எழுதுவார்கள். எந்த வகை என்றாலும் பாடலாசிரியர் தன் கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டு பாட்டெழுதும் சூழ்நிலையே காணப்படுகின்றது. இதில் பாடலை வழிநடத்துவது என்ற வார்த்தைக்கு வலுவில்லை. வரியும் இசையும் நன்றாக இருந்தால் பாடல் சிறப்பாக அமையும்.

**09. புதிய எழுத்தாளர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**


எழுத்தாளராக பரிணமிக்க விரும்புபவர்கள் ஏனைய காத்திரமான எழுத்தாளர்களின் படைப்புக்கள் யாவற்றையும் வாசிக்க வேண்டும். எடுத்த எடுப்பில் ஒருவர் பிரபலமாக வேண்டும் என்றோ முகப்புத்தகத்தில் மூழ்கிக் கிடப்பதனாலோ அல்லது பலர் லைக் இடுகின்றார்கள் என்பதற்காகவோ தான் ஒரு பெரிய எழுத்தாளர் என்று எண்ணும் எண்ணத்தைக் கைவிட்டு, யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். கவிதைகளை மாத்திரம் எழுதுவதால் எழுத்தாளராக முடியாது. இலக்கியத்தின் ஏனைய பக்கங்களையும் புரட்டிப் பார்க்க வேண்டும். வாசிப்பில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டும்.

நேர்காணல்: வெலிகம ரிம்ஷா முஹமட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பிரித்தானியாவில் முதலிடம் பெற்ற வல்வைத் தமிழன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ரமேக்ஷ் தனலக்ஷ்மி தம்பதிகளின் புதல்வன் ஒன்பது வயதுடைய குறிஞ்சிகன் பிரித்தானியாவில் ஐந்து லட்சம் மாணவர்கள் பங்குபற்றிய போட்டியில் முதலிடம் பெற்று 150,000 பவுண்ட்ஸ் பரிசுத்தொகை பெற்று ஈழத்தாய்திருநாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் பிரித்தானியாவில் பீச்சோம் ஆரம்பப் பாடசாலையில் (Beecholme Primary School) நான்காம் ஆண்டில் கல்வி கற்று வருகின்றார். அங்கு பிரித்தானியா எரிவாயு (British Gas) நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு, பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பசுமை பேணல் சம்பந்தமான பசுமை வீடு கட்டுதல் , வீடு வடிவமைத்தல் போட்டியில் தனது மிகவும் சிறந்த சிந்தனையால் வீட்டின் உள்ளக, வெளிப்புற அமைப்பை வடிவமைத்திருந்தார்.

இவரது பாடசாலை முதலாவது இடத்தைப் பெற்று 150,000 பெறுமதியான பரிசினைத் தட்டிக்கொண்டது. இளைய தலைமுறையினரிடையே எரிவாயு சேமிப்பு, பசுமை பேணல் என்பன சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இங்கு ஐந்நூறுக்கு மேற்ப்பட்ட பாடசாலைகள் பங்கு பங்குபற்றியிருந்தன . ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். முழுமையாக ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அவர்களில் ஆறு பேர் முதற்சுற்றில் தெரிவு செய்யப்பட்டு இறுதிச் சுற்றில் இவர் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது இச்சாதனையால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதன் காரணமாக எம் தமிழ் சமூகமும் பெருமைகொண்டு குறிஞ்சிகனை வாழ்த்துகின்றது.

## கணிதப்போட்டியில் சாதனை



யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி பயிலுகின்ற மந்துவிலை சேர்ந்த மாணவி U. கஜாலா அகில இலங்கை ஒலிம்பியாட் கணித போட்டியில் சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச போட்டிகளிலும் கலந்து வெற்றிகளையீட்டி கல்லூரிக்கு பெருமை சேர்க்க வாழ்த்துகின்றோம்


## நகைச்சுவை

பஸ்ஸில் அருகிலிருந்த பெரியவர் இன்னொருவரிடம் கேட்டார் அங்கே கரம், சிரம், புறம் நீட்டாதீர்கள்னு போட்டிருக்காங்களே, அப்டின்னா என்னா தம்பி அர்த்தம்?

மற்றவர் அதற்க்கு கை, தலை வெளியே நீட்டாதீங்கன்னு அர்த்தம் ஐயா என்று பதில் சொன்னார்


அடங்கொப்புரானே! நீங்க சொன்ன மாதிரி தமிழிலேயே எழுதியிருக்கலாமே என்றார் அந்தப் பெரியவர்.

அதானே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறகுலர்த்தும் பறவைகள்



மணம்கொண்டுமனம் இணைந்து
காலாண்டுபோனதால்
கசந்துபோனதாஎனதன்பு ?
எங்கிருந்துதான் வார்த்தைகளை
பெயர்த்துஎறிகிறாய்
பாறையல்லவேஎன் மனம்
பசுந்தரைஎன்பதைஉணராயோநீ..

உண்மைதான்
வார்த்தைகளின் மோதலில் அடியுண்டு
காயப்பட்டிருக்கிறது இதயம்
எனக்கும் பயன்படும் என்று
நீபிரியமானவாங்கிய
பிளசர் மோட்டார் சையிக்கிளின்
சாவியை உன் தம்பிநேற்று
திருப்பித்தந்தபோது
எங்கோ இடமாறிவைத்துவிட்டேன்..

சாவிஎங்கே? என்று உன் கேள்வி
தெரியாதுஅங்கேஎங்கோதான் என்
பதில்
எதில்தான் உனக்குகவனம்!
வெடுக்கென்றுநீசொல்ல
கவனம் கலைந்துதான் இத்தனைநாள்
இவ்விடத்தில் இருக்கிறேனா?
சட்டென்றுஎன் பதில்
அடுத்தவர் பொருளைகொடுக்கும்போது
கேட்கவேண்டும் என்றபழக்கம் கூட
உன்வீட்டில் சொல்லித் தரவில்லையா?
சாடலாய் உன் கேள்வி
பொருள் ஒன்றும்
அடுத்தவருக்குகொடுக்கலையே..
எங்கள் வீட்டில் தம்பிக்கு
கொடுப்பதற்குஅடுத்தவரிடம் கேட்கும்
பழக்கமில்லைநான்
எங்கள் வீட்டிற்குபதிலடிஉங்கள் வீடு
சமாதனம் கொண்டதாய் உள்மனது..

பதறிப்போய் நான் சமைத்தஉணவுடன்
உன்பின்னே வந்துமுன்நிற்க
காலில் காலுறைகளைமாட்டியபடிநீ.
உணவுகோப்பையினைநான் நீட்ட
வேண்டாம் என்று உன்பதில்
சாப்பிடுங்கள் என்று-நான்
சட்டென்றுபறித்தது
குப்பை கூடையில் கொட்டிவிட்டு
சொன்னால் புரியாதாஎனவெட்டிவிடும்
பார்வையோடுநீவெளியேசெல்கிறாய்

அப்படிஎன்னவன்மம் உனக்கு
நீயும்தான் தவறிழைத்தாய் அதற்கு
என்னதண்டனைநான்தர
பொங்கிப்போகிறதுஎன்கோபம்
நீ இப்படித்தான் கல்விகற்பிப்பாயா
ஆசிரியர் என்பதற்குஅகராதியிலும்
அணுஅளவும் உன்குணம் இல்லை
எனக்குநானேசொல்லிக்கொண்டு
அப்படியேஉறங்கிவிட்டேன்..

என் பெயர்சொல்லிஒருகுரல்
கதவில் சாய்ந்தபடிநீ
எழுந்துகொண்டஎன்னிடம்
சாப்பிடவாஒருவார்த்தை
பசிக்கவில்லை என்பதில்
ஏன் உன் அப்பாவந்து
சாப்பாடு போடாமல்
பட்டினி போட்டான்
அதனால்தான் அல்சர் என்றுபழிசொல்லவா
எதற்காகவார்த்தைகளில்
விசத்தைவைத்துஎய்கிறாய்
வார்த்தைகளின் பிரியம்தேடி
களைத்துக் கிடக்கிறது மனம்..
பதிலேதும் சொல்லாமல்
உன்னைதள்ளாதகுறையாக
வாசல் படிதாண்டி சமயலறை செல்கிறேன்
புட்டும் முட்டைப்பொரியலும்
உதட்டில் தானாகவந்தமர்கிறதுபுன்னகை..
ஆமாம் முதல்முறையாக
நான் உன்னோடுஊர்விட்டுஊர்வந்தபோது
உன் முதல் சமையல்
அதிலிருந்து அதுவே எனக்கு
பிடித்தஉணவாகமாறியதை
நீ அறிவாய்

இரவுநேரங்களில் உறங்குவரை
கணினியோடுஉன்தேவை
தினம் தினம்தொடரும் அதுவழமை.
பொழுதைகரைப்பதற்காய்
தொலைக்காட்சிமுன்னேநான் அமர்ந்தும்
காட்சியேதும் மனதில் பதியவில்லை
மேசைமீது உன்காலியானதண்ணீர் போத்தல்
சமாதானப்புறாசுடுதியாகமனதில் வந்தமர
தண்ணீரோடுஉன்னுடன் சமாதான
உடன்படிக்கைகைச்சாத்திடஎன் எண்ணம்
தண்ணீர் போத்தலைநான் கையிலெடுக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநிமிடம் இருவரின் வார்த்தைகள்
வாதாடிகளைத்துபோகிறது
இறுதியில் நான் செய்தபாவம்
உன்னைஎன்தலையில் கட்டிவிட்டார்கள்
அனுபவிப்பதுநானல்லவா..
உன்னைப்போல் ஒருபெண்ணை
எவன் சம்மதிப்பான்
உன் வார்தைகளின்
மருண்டேமிரழ்கிறதுஎன்மனம்

இதுவரைகாத்திருந்தகோபம் ,ஏமாற்றம்
அவமானம் எல்லாம் சேர்ந்து
மனதிற்குள் குளித்துஎழ
தன்னிலைமீறிப்பாய்கிறது
கண்கள்வழிநீர்த்திவளைகள்
கரையுடைத்துபெருகுகிறது.

உன்னைநானும் என்னைநீயும்
விஞ்சிவிடும் வேகத்தில்
வார்த்தைகளால்
காயப்படுத்திகொள்கிறோம்

உன் முகத்திருப்பலில்
முடங்கிக்கொள்கிறது என் மகிழ்ச்சி
அத்தனைநாள் அன்பும் உருக்குலைந்து
போனதாய் பேதலித்து உடைந்தமனம்
கதறிக்கதறி அழுகிறது.

ஆனாலும்..
காலைநேரம் பணிக்கு உன் ஆயத்தம்
சமயலறையில் என் வேகம்
தேநீர் கோப்பையை மேசையில் வைத்துவிட்டும்
குடியுங்கள் என்று ஒருவார்த்தை சொல்ல
தன்மானம் இடம்கொடுக்காமல் நான்
சமயலறைக்கு திரும்பி நான் செல்ல
பின்னாலே ஓர் அரவம் திருப்புகிறேன்
கழிவு நீர் குழாயில் நான் தந்த
தேநீரை ஊற்றிவிட்டு நீ
பசியோடு நீ செல்வாய் என்று

இத்தனை நாட்களில் நீ தந்த
அன்பின் தூறல்கள் என் நெஞ்சோரம்..
பணிக்குநேரம் தாமதமென்றால்
நான் உனக்கு உணவூட்டி அனுப்பவேண்டும்
போகும் போது
விளங்க முடியாத உன் பார்வைக்கும்
விரசம் கொள்ளவைக்கும்
உன் புன்னகைக்கும்
விலாகத உன் அன்புக்கும்
ஒருமிதமான சுகம் தந்து
விடை பகவர்வாய்..
இன்று உனக்குள் இப்படியொருமறுமுகமா
ஆண்ம கனுக்குகோபம் தலைக்கேறினால்
மதியேதும் புரியாது என்பது சரிதானோ
அங்கலாய்கிறதுமனது

மதியம் சமையலாகவில்லை
நீசமைத்தாலும் உண்ணமாட்டாய்
என்பதுநானறிவேன்
பாடசாலைமுடிந்துவேண்டுமென்றே
தாமதமாய் நீவருகிறாய்
அத்தனைமணி நேரமாய்
அழுதேநான் தீர்த்துவிட்டேன்


படுக்கையில் நான் இருப்பதைக்கண்டு
பாராமுகமாய் நீ செல்கிறாய்
இரைப்பை பசி யெடுக்க
தொண்டைக்குழி தாகம் கொள்கிறது
அனுவளவும் இரக்கமற்றவனா நீ?
உண்டாயாஎனகேட்கவில்லை
காலையில் நிகழ்ந்தவையால்
மனம்கழைத்திருப்பேன் என்பது
உணர்ந்திருப்பாய் ஆனாலும்
இறங்கிவரமனமற்று..நீ
கண்களுக்குள் அடங்கிருந்த
நீர்த்துளிமீண்டும்
அருவியென படையெடுப்பு
இடையிடையே சமயலறையில்
ஏதேதோ சலசலப்பு

என்னை மேலிருந்து கீழ்வரை
கணல்கக்க உன்பார்வை
சட்டென்று வைத்துவிட்டு வந்தமர்கிறேன்
உன் செய்கையால் மனம் நிறைந்திருக்கும்
சமாதான உணர்வுகளையும்
விஞ்சியேமறுதலிக்கிறது மனம்.

எண்ணங்கள் சிதறிநிற்க சிந்தனையில் நான்
நிமிர்ந்துபார்த்தால் என் அருகில் நீ
ஒருகையில் மாத்திரை
மறுகையில் நீர்க் குவளை
என்று ஒரு கட்டளை
நான் மறுபக்கமாய் திரும்பிக்கொள்ள
என் கையில் திணித்துவிட்டு
உன் உதட்டில் ஒரு புன்னகை
மறுப்பேதும் சொல்லாமல் நான்


மனக்கவலை அதிக மென்றால்
தூக்கம் எனக்கு விரோதி என்பது நீ அறிவாய்
நீ சொன்னால் மனம் அடங்கிவிடும்
மாயமும் நீ அறிவாய்
மனதை சபித்தபடி நான்.
தூக்கமது துணைவர
கட்டிலில் வழமைக்குமாறாக
இடம்மாறிதூங்குகின்றேன் .

எங்கோ ஆதிகாலை ஆரம்பத்தின்
அலாரமாய் ஒருபறவையின் குரல்
கண்விழிக்கின்றேன் ஏதோ ஒரு உணர்வு,
இறுக்கமாய் இடைதழுவிய உன் கரம்
மனமெல்லாம் மென்மையுற உருகியது நெஞ்சம்
தூக்கத்தில் உருளும் பழக்கம்
எனக்குண்டு என்பதை
உன்னையன்றி வேறுயாரறிவார்.
விடியலை அண்மித்தும் நீள்கிறது
உன்னோடான என்தூக்கம்
இதம் சொல்லும் நெஞ்சோடு



-அபர்ணா-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூலோக கைலாசத்தில் கொடியேற்றப் பெருவிழா

நல்லூர் கந்தசுவாமி கோயிலைக்கட்டியவன் புவனேகபாகு என்பது கைலாய மலையில் வருகின்ற பின்வரும் தனிச்செய்யுளால் அறியமுடிகிறது.

இலக்கிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மண்டலத்தில்
அவர் பொலி மார்பணாம் புவனேகபாகு
நலமிகு யாழ்ப்பாணத்து நகரில் கட்டுவித்து நல்லை
குலவிய கந்தவேட்டு கோயிலும் புரிவித்தானே

பன்னெடுங்கால வரலாற்று சிறப்பையும்
நல்லூர் மாண்பினை என்றென்றும் எடுத்து
இயம்பியிருக்கும் நல்லை முருகன் பெருமையும்
மகோற்சவ சிறப்பும் தத்துவமானது.



தெய்வீகஞானத்தமிழருவி
வர்ணனைக் கலாநிதி.
மதுரகவி. காரை
எம்.பி. அருளானந்தன்.

## அலங்காரக் கந்தனின் அருளைப்பெறுவோம்


நல்லூர் என்ற சொல்லை அவதானிக்குமிடத்து தமிழ்நாட்டை ஆண்ட அரசர் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டி நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மாணாபரண நல்லூர், செய் துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தை சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன.

சோழநாட்டில் பெருஞ்சோழ மன்னர்கள் உருவாக்கிய நல்லூர்களை சாசனங்களில் காணலாம்.

முடிகொண்ட நல்லூர், சுரிபாய நல்லூர், திருநூற்றுச்சோழ நல்லூர், திருத்தொண்டத் தொகை நல்லூர், கலிகடிந்த சோழ நல்லூர், முதலிய நல்லூர்கள் சோழமன்னரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டைய விருதுப்பெயர் பெற்ற பதிகளாகும்.

**மூலஸ்தானத்தில் வேல்**

வேல்முருகனது அருளை நல்கும் அருட்கவியாகக் கருதப்படுகின்றது. வேல், ஞானத்தினதும் அறிவினதும் அடையாளம். வேலை வழிபடும் ஆதிமரபு இன்னும் தமிழர்களிடையே நிறைந்து நிலவி வருகிறது. இன்று நல்லூரில் மட்டுமல்ல செல்வச்சந்நிதியிலும் கதிர்காமத்திலும் முருக வழிபாடு உண்டு. இந்த ஆலயங்களின் மூலஸ்தானத்தில் அழகிய வேல்பெருமானாக வீற்றிருந்து அருள் பாலிப்பதுடன் நம்புபவர்களுக்கு அபயமளிக்கிறது. இதற்கு மேல் மகோற்சவ காலங்களில் வழிபாடியற்றப்பட்டு திருப்பவனியாக உலாவந்து வணங்கப்படுகிறது.

**அபயமளிக்கும் ஆறுமுகப்பெருமான்**

நல்லூரின் தெற்கு நோக்கி ஆறுமுகப் பெருமான் வீற்றிருந்து தேரில் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலிப்பார்.


**முருக தத்துவம்**

முருகன் என்ற பேரழகு வாய்ந்த சிவகுமாரன், அழகிய நீலமயிலின் மேல் அமர்ந்திருக்கின்றான். அந்த மயிலின் காலடியில் கொடிய பாம்பு காணப்படுகின்றது. இப்படி ஒரு திருவுருவத்தை நாம் சாதாரணமாக நாட்காட்டிகளிலும் புத்தகங்களிலும் பார்க்கிறோம். அவ்வளவு பெரிய அதிக எடையுடைய கடவுள் அவரைவிடப் பலமடங்கு எடைகுறைந்த ஓர் அழகுப் பறவை மீது அமர்ந்திருப்பது அதிசயமாக இரக்கிறது. ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரு உட்பொருள் உண்டு.

மயிலின் உருவம் அழகானது. இது தோகை விரித்தாடும் போது இன்னும் அழகாக உள்ளது. இதன் அழகிற்கு அழகூட்டுவது நீலவர்ணமாகும். இத்தகைய ரூப லாவண்யம் உள்ள மயில் ஆடும் போது அதற்கு இயற்கையாக ஏற்படுவது கர்வம். இதே போலத்தான் மனிதனும். தன்னுடைய அழகு, இளமை, செல்வம் இவற்றின் காரணமாக கர்வப்படுகின்றான். தன்னால் எதையும் செய்யமுடியும் என்று எண்ணும் போது அவனது கர்வம் அதிகரிக்கின்றது. கர்வம் எங்கே இருக்கின்றதோ அங்கே இறைசிந்தனை இல்லாமல் போய்விடுகின்றது.

இந்த நிலையில் இருந்து அவன் மாறியாக வேண்டும். அவனுடைய உண்மையான வடிவம் அவனுடைய ஆத்துமாவே தவிர அழகு, இளமை, செல்வம் என்பவையல்ல என்பதை உணர வேண்டும். இப்படி அடங்காத மனதை அடக்கும் கடவுளாக இறைவன் என்பதை உணர்த்துவதே மயிலின் மீத முருகன் அமர்ந்திருக்கும் திருக்காட்சியாகும். இத்தகு வரலாற்று பெருமைகளோடு முருகன் நல்லூரில் பன்னெடுங்காலமாக அருளாட்சி புரிகின்றான். வந்தாரை வாழவைக்கின்றான். வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் வாரி வழங்குகின்றான். அலங்காரக் கந்தன் என்ற மகத்துவ சிறப்புகளோடு அருள்பாலிக்கின்ற பெருமானின் கொடியேற்றப் பெருவிழா *19.08.2017* பக்திபூர்வமாக பல்லாயிரக்கணக்கான பக்தர்களுடன் இடம்பெறுகின்றது. அனைவருக்கும் முருகனின் திருவருள் பெருக பிரார்த்திப்போமாக.


**ஈழத்தமிழினத்திற்கு தீர்வு தந்து வாழ்**




**விக்க தேரேறி வரவேண்டும் நல்லைக் கந்தரே!**

சரித்திரப்பிரசித்திபெற்ற அலங்காரக்கந்தனாக தமிழ் மண்ணாம் யாழ்ப்பாணத்தில் நல்லையெம்பதியில் பன்னெடுங்காலமாக அருளாட்சி செய்துவரும் நல்லைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எம்மதமும் சம்மதம்

கந்தனின் தேர்த்திருவிழா இலட்சோபலட்சம் மக்களின் மத்தியில் இந்திர விழா போல நடைபெறும்.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்குமான தொடர்பு வரலாற்றிற்கு அப்பாற்பட்டதெனலாம். கருணைக்கடலாகிய முருகன் ஈழத்தில் கதிர்காமத்திலும் நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், கந்தவனக்கடவை, மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய தலங்களில் கோயில்கொண்டு அருள்பாலித்து வருகிறான். யாழ்ப்பாண மண்ணில் சைவத்தமிழ் மரபின் குன்றாக விளங்குவது நல்லூர். இது தமிழ் மன்னர்களின் இராசதானியாக போற்றப்படுகின்றது. சைவ மக்களும் சைவ மன்னர்களும் வணங்கிய கீர்த்தி வாய்ந்த முருகன் ஆலயச்சிறப்பினை நல்லூர் பெற்றுவருகின்றது.

தமிழ் நாட்டு அரசர்கள் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டிநாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மாணாபரண நல்லூர், செய்துங்க நல்லூர், முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர்கள் பெரை விளக்கிநிற்கின்றன. சோழ நாட்டில் பெருஞ்சோழ மன்னர்கள் உண்டாக்கிய நல்லூர்களை சாசனங்களில் காணலாம்.

முடிகொண்ட நல்லூர், அநபாய நல்லூர், திருநீற்றுச்சோழ நல்லூர், திருத்தொண்டர் தொகை நல்லூர், கலிகடிந்தசோழ நல்லூர், முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப் பெயர் பெற்ற பதிகளாகும்.

ஈழத்திலும் நல்லூர் எனப்பெயருடைய கிராமங்கள் ஐந்துள. மற்றய நான்கும் பூநகரியிலும் குருநாகல் பகுதியிலும் களுத்துறையிலும் உள்ளனவாம். இத்தகு நல்லூர் என்ற பெயர் பல கிராமங்களுக்கும் சூட்டப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண நல்லூரை எண்ணுகின்ற போது அங்கே நல்லைக்கந்தன் ஆலயம் தான் எம் கண்முன்னே தோன்றுகின்றது.

வீரவேல், தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கை வேல் வாரி
குளித்த வேல் கொற்ற வேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை

முருகனுடைய கையில் இருப்பது வேல். இது ஞானசக்தி வேலாகும். அஞ்ஞானப் பகையை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளவன் முருகன்.

தனிவழி நடக்கும் பக்தர்களுக்கு வலப்புறத்தும் இடப்புறத்தும் முன்னும் பின்னும் எங்குமாகி இரவுபகலில் துணையாக விளங்குவது வேல் என்கிறார் அருணகிரிநாதர். இத்தகு வரலாற்றுப்பெருமைகளை தன்னகத்தே கொண்ட வெற்றிவேலே நல்லூர் கந்தசுவாமி கோவில் மூலஸ்தானத்தில் காட்சியளிக்கின்றது. உலகிலே உள்ள இயல்புகள் எல்லாம் கொண்டு இயற்கையுடனானவனாகவும் விளங்குபவன் ஆறுமுகன். ஆறுமுகன். ஐந்து முகங்களையுடைய சிவப்பரம்பொருளினால் தோற்றுவிக்கப்பட்டவன் ஆறுமுகன். முருகனை செந்தமிழாலும் பாடி வழிபடலாம். ஏனெனில் தமிழாலே வைது நிந்தித்துப்பாடினாலும் அதனை பெருமனதோடு ஏற்று அருள்பவன் முருகன். அதனாலேயே முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன் என்கிறார் அருணகிரிநாதர்.

செயலாலே தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னூற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்பசிவாச்சாரியார் கூறுகின்றார். இத்தகு சிறப்புகளையுடையவன் நல்லூரில் வீற்றிருந்து அருள்பவன் திருத்தேரிலே பவனி வரும் திருக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது. ஈழத்தமிழினத்துக்கு வாழ்வுதர வேலேந்தி மயிலேறி பவனி வரவுள்ளது.

வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு, மேல், கீழ் என்ற எங்கும் நிறைந்த தன்மையை காட்டுவது ஆறுமுகம் என்பது மற்றொரு கருத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நித்திய கல்யாணிப் பூவின் மருத்துவமும் மகத்துவமும்.

நீரின்றி அமையாது உலகு என்பது போல, பூவின்றி ஒரு நாளும் அமை யாது நித்திய கல்யாணி. நள்ளிரவில் ஒரு பூ உதிர்ந்தால்கூட, உடனே இன்னொன்று அதற்கு ஈடாக மலர்ந்துவிடும் குணம் கொண்டது. அதனால்தான் நித்தியமும் பூத்துக்குலுங்கும் கல்யாணி (திருமணப் பெண்) என்று இதன் பெயர் அமைந்தது. இன்றைக்கு நவீன மருத்துவர்களால் ரேடி யேஷன் என்ற பெயரில் சுட்டுப் போட் டும், சர்ஜரி என்ற பெயரில் வெட்டிப் போட்டும் தீர்க்க இயலாத புற்றுநோய்க்கு நித்திய கல்யாணி ஓர் உன்னதமான மருந்து.

ஓர் இடம் விட்டு இன்னொரு இடத்துக் குப் பற்றிப்பரவிச் செல்வது புற்றுநோயின் சிறப்பம்சம் ஆகும். மேலும் உடல் உறுப் புகளைப் பாதிப்பதோடு தாங்க முடியாத வலியையும் வேதனையையும் தருவது புற்றுநோய்.

இப்படிப்பட்ட கொடிய நோயைப் போக்கும் தன்மையுடையது நித்திய கல் யாணி. ஆரம்பக் கட்டத்திலேயே புற்று நோயை வேரறுக்கக் கூடியது இம்மூலிகை. நித்திய கல்யாணியை குப்பை வேளை என்றும் அழைப்பது வழக்கம். Catharanthes roseus என்பது இதன் தாவரப் பெயர் ஆகும். மேற்கிந்திய நாடுக ளைத் தாயகமாகக் கொண்ட நித்திய கல்யாணி ஆங்கிலத்தில் Madagascar periwinkle என்று அழைக்கப்படுகிறது. சதம் புஷ்பா என்பது இதன் வடமொழிப் பெயராகும்.

நூற்றுக்கும் மேலான மருத்துவ வேதிப் பொருட்களை உள்ளடக்கியது நித்திய கல் யாணி. இதில் உள்ள Vincamine எனும் வேதிப்பொருள் இரத்த நாளங்களைத் தளர்த்தும் வல்லமை உடையது. இதனால் குருதி அடைத்தல், மார்பக நோய்கள், இத யம் தொடர்பான நோய்கள் தவிர்க்கப் பெறு கின்றன.

அனைத்துக்கும் மேலாக நித்திய கல்யா ணியில் செறிந்து விளங்கும் Vinblastine என்ற வேதிப்பொருட்கள் புற்றுநோயைப் போக்கத்தக்க வலிமையுள்ள மருந்தாக விளங்குகிறது. இரத்தத் தட்டணுக்கள் குறை பாட்டைப் போக்குவதற்கு வின்கிரிஸ்டின், வின்ப்ளேஸ்ட்டின் ஆகிய வேதிப்பொருட் கள் மருந்தாகிப் பயன் தருகின்றன. இரத்த சிவப்பணுக்களின் சிதைவை தடுத்து உயிர் காக்கும் மருந்தாகவும் இது விளங்குகிறது. விதைப்பையில் ஏற்படும் புற்று, சிறு நீர்ப்பையில் ஏற்படும் புற்று, மார்பகப்புற்று, நுரையீரல் புற்று மற்றும் லிம்ப்போசைட்ஸ் எனும் ரத்த வெள்ளை அணுக்களைப் பாதிக் கும் செல்கள் ஆகியவற்றுக்கும் இந்த வேதிப்பொருட்கள் மருந்தாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய கல்யாணியின் மருத்துவப் பயன்கள்:

★வரலாற்றுக் காலந்தொட்டு நித்திய கல்யாணியைப் பல்வேறு நோய்களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய நாடுகளில் இதை சர்க்கரை நோயைக் குணப்படுத்துவதற்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

★இந்தியாவில் இதன் இலைச்சாற்றை எடுத்து வண்டு கடிகளுக்கு மேற்பூச்சாகப் பயன்படுத்துவது உண்டு.

நித்திய கல்யாணியில் உள்ள மருத்துவப் பொருட்கள் விஞ்ஞானிகளுக்கும் மருத்துவ வல்லுனர்களுக்கும் மிகவும் வியப்பைத் தருவதாக அமைந்துள்ளது. மூலிகைகளுள் ஒன்று நித்திய கல்யாணி எனில் மிகையாகாது. நித்திய கல்யாணியில் எழுபதுக்கும் மேற்பட்ட மருத்துவ வேதிப்பொருட்கள் இருக்கின்றன என்று கண்டுபிடித்துள்ளனர். Leurosin, Catharanthine, Tetrahydro alstonin, Vindoline போன்ற வேதிப்பொருட்கள் இரத்தத்தில் மிகுந்திருக்கும் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தவும், உயர் இரத்த அழுத்தத்தைத் தணிக்கக் கூடியதாகவும், புற்றுநோய்க்கு அருமருந்தாகவும் விளங்குகின்றன. நித்திய கல்யாணியிலிருந்து பெறப்படும் வின்கிரிஸ்டின் 80 விழுக்காடு நோய் தீர்க்கும் சக்தி வாய்ந்ததாக அதாவது நான்கு பங்கு திறனுள்ளதாக விளங்குகிறது.

நித்திய கல்யாணி மருந்தாகும் விதம் :

★நித்திய கல்யாணி இலைச்சாறு இரண்டொரு தேக்கரண்டி எடுத்து வெருகடி மஞ்சள் சேர்த்து தீ நீராக்கிக் குடிப்பதால் சர்க்கரை நோய் தணியும், பேதியும் நிற்கும்.

★நித்திய கல்யாணி செடியின் வேர்ப்பகுதியை எடுத்து சுத்திகரித்து மிளகு, சீரகம் இரண்டையும் சிறிதளவு எடுத்து அதனுடன் 10 கிராம் நித்திய கல்யாணி வேரையும் சேர்த்து நீர் விட்டு தீநீராய்க் காய்ச்சி பருகுவதால் பல் வலி, உடல் வலி ஆகியன போகும்.

★நித்திய கல்யாணி பூக்கள் 10 இலைகள் 5 மாதுளை தோல் 10 கிராம் அளவு சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு, அரை டம்ளராகச் சுருங்கக் காய்ச்சி உடன் தேவையான சுவைக்குத் தேன் சேர்த்து தினம் இருவேளை சாப்பிட அதிக இரத்தப்போக்குடன்கூடிய மாதவிலக்கு குணமாகும்.

★ நித்திய கல்யாணி இலைகள் ஐந்து உடன் வெருகடி அளவு சுக்கு, மிளகு, திப்பிலி சேர்த்து அரை டம்ளர் நீரிலிட்டுக் கொதிக்க வைத்து பாதியைக் காலையிலும், மீதியை இரவு படுக்கப் போகும் முன்னும் சாப்பிட்டு வர தொண்டைக்கட்டு, நுரையீரல் தொற்று ஆகியனவிரைவில் குணமாகும்.

★ நித்திய கல்யாணி இலை ஐந்தோடு சீரகம் சேர்த்து தீநீராக்கிப் போதிய இனிப்பு சேர்த்து பருகி வர இரத்த ஓட்டம் சீர்பெறும். இதனால் மன அழுத்தம், தலைவலி, மயக்கம் ஆகியன குணமாகும்.

★ நித்திய கல்யாணி செடியின் துளிர் இலைகள் ஐந்தாறு எடுத்து சிறிது சுக்கு, சீரகம், பனங்கற்கண்டு சேர்த்து தினம் இரு வேளை அருந்தி வர வயிற்றுவலி, வயிற்றுக் கடுப்பு ஆகியன குணமாகும்.

★ நித்திய கல்யாணி பூக்கள் 10 எடுத்து அதனுடன் சிறிது மிளகு சேர்த்து தீநீராக்கிக் குடிப்பதால் ஆஸ்துமா என்னும் மூச்சிரைப்பு குணமாகும்.

★நித்திய கல்யாணி பூக்களை பத்து எடுத்து ஒரு டம்ளர் நீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கண்களைக் கழுவ கண் நோய்கள் குணமாகும். இதைக் கொண்டு ஆறாதப் புண்களைக் கழுவி வர விரைவில் ஆறும்.


★நித்திய கல்யாணி பூக்கள் 10 முதல் 15 எடுத்து அதனோடு மஞ்சள் சேர்த்து நீரிலிட்டுக் கொதிக்க வைத்து தேன் சேர்த்துப் பருகி வர எவ்வகைப் புற்றுநோயும் விலகும்.

நித்திய கல்யாணி பூவுக்கு இவ்வளவு மகத்துவ, மருத்துவ குணங்கள் உள்ளன என இப்போது தெரிந்து கொண்டோம். இதை ஒவ்வொரு இல்லத்திலும் வைத்திருந்தால் பெரும்பாலும் மருத்துவமனை என்பதே நமக்குத் தேவைப்படாது என்பது திண்ணம்.

நன்றி இணையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அன்பிற்கு மொழியும் வடிவமும் கிடையாது

ஒரு ஊரில் தங்கத்தால் மெல்லிய தாள் செய்து விற்கும் தொழில் செய்து வந்தார் ஒருவர். அவருக்கு எட்டு வயதில் ஒரு மகள் இருந்தாள். ஒரு நாள் அந்தக் குழந்தை அப்பா செய்து வைத்திருந்த தங்கத் தாள் ஒன்றை எடுத்து ஒரு அட்டைப் பெட்டியில் ஒட்டி விட்டாள். அதைப் பார்த்த அப்பாவிற்கு மிகவும் கோபம். குழந்தையை ''இப்படிப் பொருளின் மதிப்புத் தெரியாமல் வீணடித்து விட்டாயே'' என்று கோபித்துக் கொண்டார்.

மறுநாள் காலை அவர் தூங்கி விழிக்கும் போது அந்தத் தங்கத் தகடு ஒட்டிய பெட்டி அவரது படுக்கை அருகில் இருந்தது. அதன் மேல் குழந்தை தனது சொந்தக் கையெழுத்தில் பிறந்த நாள் வாழ்த்து எழுதியிருந்தாள். தந்தை அந்தப் பெட்டியை ஆர்வமாகத் திறந்து பார்த்தார். அது காலியாக இருந்தது.

திரும்பவும் அப்பாவிற்குக் கோபம் வந்தது. குழந்தையைக் கூப்பிட்டு ''ஏன் இப்படிச் செய்கிறாய்?'' என்று கோபமாகக் கேட்டார். அதற்கு அவள் மழலை மாறாமல் ''அப்பா, நான் அந்தப் பெட்டி நிறைய முத்தம் நிரப்பி வைத்திருந்தேனே. உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று கேட்டாள். அப்பாவிற்குச் சுரீர் என்று ஏதோ தைத்தது. தன் தவற்றுக்கு வருந்தினார். மகளைக் கட்டி அணைத்து முத்தங்கள் கொடுத்தார்.

இன்று அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகிவிட்டது. அவள் குடும்பம், அவள் குழந்தை என்று கிளம்பிப் போய் விட்டாள்.


அப்பா இன்னமும் அந்தப் பெட்டியை பத்திரமாக வைத்திருக்கிறார். தினமும் அதைத் திறந்து அதிலிருந்து ஒரே ஒரு முத்தம் மட்டும் எடுத்துக் கொள்கிறார். இன்னமும் அந்தப் பெட்டியில் குறையாமல் முத்தங்கள் இருக்கின்றனவாம்.

முருகப்பெருமானிடத்தில் அமையும் கருணை அனைவராலும் விரும்பிஅனுபவிக்கப்படுவதாகும். எவரெவர்க்கு எவ்வெவ்வாறெல்லாம் அருள்புரியவேண்டுமென்ற கருணை உள்ளம்கொண்ட கலியுகவரதன் கந்தக்கடவுள்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# இலக்கிய உலகிலும் பத்திரிகை உலகிலும் தனி முத்திரை பதித்துள்ள கலாபூசணம் எஸ்.ஐ. நாகூர் கனி

தமிழ் இலக்கியத்தில் கோலோச்சிய பல புகழ் பூத்த எழுத்தாளர்களை உருவாக்கிய கொழும்பு வாழைத்தோட்டம்தான் தனது பிறந்த மண் என்று மார் தட்டிச் சொல்லும் எழுத்தாளர் எழுத்துலகில் அரைநூற்றாண்டைத் தாண்டி மிளிர்பவர் இன்றும்கூட இலக்கிய உலகில் மங்காப் புகழுடன் சுடர் விட்டு பிரகாசிப்பவர். அவர்தான் கலாபூசணம் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி அவர்கள். இம்முறை எமது ஒளி அரசியின் இலக்கிய முத்தாக திகழ்பவரும் அவர்தான்.

செய்யது இஸ்மாயீல் சல்கா பீவீ தம்பதிகளின் அருமைப் புதல்வராக 1947ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21ஆம் திகதி பிறந்தார். ஆரம்ப கல்வியை கொழும்பு குணசிங்கபுர மிகுந்து மாவத்தை முஸ்லிம் வித்தியாலயத்திலும் (தற்போதைய அல் ஹிக்மா தேசிய பாடசாலை) உயர் கல்வியை மருதானை ஸாஹிரா கல்லூரியிலும் பயின்றவர். பத்திரிகைத்துறையில் தனக்குள்ள ஆர்வத்தின் காரணமாக கொழும்பு பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமா கற்கைநெறியையும் மேற்கொண்டவர். இவரது எழுத்தின் ஆழத்தையும். ஆற்றலையும் சரியாக எடைப்போட்டுக் கொண்ட பத்திரிகையுலக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயா அவர்கள் தான் மரணிக்கும் வரை இவரது எழுத்துக்கு பெரும் களம் கொடுத்தது டன் தனக்கருகிலும் இவரை வைத்துக் கொண்டார். எஸ்.டி. சிவநாயகம் ஐயா அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்த தினபதி சிந்தாமணி பத்திரிகைகள் இவரது எழுத்துக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தன. சமுதாய பிரச்சினைகளை துப்பறியும் எழுத்தாளராக (Investigating Journalism) மாறினார். இவரது எழுத்தில் வந்த 'முஸாபிர் பார்வையிலே....' என்ற பத்தி எழுத்து இவருக்கு மிகுந்த புகழைக் கொண்டு வந்தது. இது வாசகர் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்திய பகுதியாகும்.

இலக்கியத்தில் இவர் தொடாத துறை எதுவுமே இல்லை எனலாம். சிறுகதை. கவிதை. கட்டுரை. நாவல் என எழுதிக்குவித்தவர். அவற்றில் பலதை நூலுருவிலும் வெளிக் கொணர்ந்தவர். அது மட்டுமல்ல வானொலிக்கெனவும் தொலைக்காட்சிக்கெனவும் பல நாடகங்களையும் எழுதி வருபவர். இவரால் எழுதப்படும் ஆக்க இலக்கியங்கள் அனைத்துமே பரிசில்களை தட்டிச்செல்லும் அளவுக்கு பெறுமதிமிக்கவை என்றால் அது மிகையாகாது. 'இதயக் கனி' என்ற புனைப்பெயரிலும் புகுந்து சுவையான இலக்கிய கனிகளை தந்தவர்தான் இந்த நாகூர் கனி. அவரது எழுத்துகளுக்கு வயது ஐம்பதைத் தாண்டியிருந்தாலும்; அவர் என்றுமே சோர்வில்லாது எழுதும் ஒரு துடிப்பான இளைஞர் என்றே நான் சொல்வேன். இவர் ஒரு சத்திய எழுத்தாளரும் கூட. அது மட்டுமா? இவர் Nonstop எழுத்தாளருந் தான். மலருக்கு அதன் மணமே விளம்பரமாகும் அவ்வாறே இவருக்கு அவரது எழுத்துக்களே விளம்பரமாகும். இவரது பெயரைச் சொன்னால் தெரியாதவர்கள் எவருமிலர்.

அவ்வாறே வானொலி முஸ்லிம் சேவையில் இவர் பிரதியாக்கம் செய்து கலைஞர்களான மஹ்தி ஹசன் இப்ராஹீம் மற்றும் ஓ.நாகூர் ஆகியோர் நடிப்பில் ஒலித்த 'ஊடுருவல்' என்ற சமூக சித்திரமும் நேயர்கள் மத்தியில்

பெரும் வரவேற்பை பெற்ற நிகழ்ச்சியாகும்.

1963ஆம் ஆண்டு ஜுலை 4ஆம்திகதி தினகரன் பத்திரிகையில் பாலர் கழகப்பகுதியில் பிரசுரமான தனது முதலாவது கவிதையை அடுத்து எழுத்துலகில் பிரவேசித்தார். நம்நாட்டில் வெளிவரும் தேசிய பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, தினக்குரல், நவமணி, சுடரொளி, விடிவெள்ளி உட்பட அனைத்து பத்திரிகைகளுக்கும் அடிக்கடி எழுதி வரும் படைப்பாளர் இவர். நம் நாட்டு பத்திரிகைகள் மட்டுமல்ல கடல்கடந்து வரும் பத்திரிகைகள் சஞ்சிகைகளும் இவரது ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளன. சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் நேசன்' தமிழ்நாட்டிலிருந்து வரும் 'ஆனந்த விகடன்' போன்ற சஞ்சிகைகளிலும்; இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

1983ஆம் ஆண்டு இவரது சிறுகதைத் தொகுதி ஒன்று 'தூரத்து பூபாளம்' என்ற பெயரில் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து 'அவள் நெஞ்சுக்குத் தெரியும்' என்ற நாவலும் வெளிவந்தது. அவ்வாறே 'காலத்தின் சுவடுகள்' என்ற பெயரில் கட்டுரைத்தொகுதி, 'எஸ்.ஐ.நாகூர் கனி ஒரு வெள்ளிவிழாப் பார்வை', 'கூர்நாவின் கோன் விழா' தகவல் திரட்டு என்பனவும் இவர் வெளியிட்ட ஏனைய நூல்களாகும்.


இவரது எழுத்தாற்றலையும் இலக்கிய ஆளுமையையும் கௌரவிக்கும் முகமாக கலாசார அமைச்சின் அனுசரணையுடன் முஸ்லிம் கலாசார திணைக்களம் இவருக்கு 'காதிபுல் ஹக்' 'சத்திய எழுத்தாளன்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. 2007ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் அமைச்சு இவருக்கு 'கலாபூசணம்' அரச விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவித்தது.

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் மன்றம் 2014 ஆம் ஆண்டு நடத்திய உலகளாவிய சிறுகதை போட்டியில் இவரது சிறுகதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. அவ்வாறே அவுஸ்திரேலிய 'அக்கினிக்குஞ்சுகள்' இணையத்தளம் நடத்திய அமரர் எஸ்.பொ.நினைவு தின சர்வதேச சிறுகதை போட்டியில் இவரது சிறுகதை முதலாமிடத்தை சுவீகரித்துக்கொண்டது.

அதற்காக இவருக்கு முந்நூறு அமெரிக்க டாலர்கள் பரிசாக கிடைத்தன. கொழும்பு தமிழ் சங்கம் நடத்திய மறைந்த சிறுகதை எழுத்தாளர் இலங்கையர்க்கோன் நினைவு தின சிறுகதைப் போட்டியிலும் பிரபல எழுத்தாளன் 'செம்பியன் செல்வன்' நினைவாக நடத்திய 'ஞானம்' சஞ்சிகை நடத்திய சிறுகதை போட்டியிலும் முதற் பரிசு இவருக்குத் தான்.

இவ்வாறு இவர் பெற்ற பரிசில்கள் ஒன்றல்ல. இரண்டல்ல. சங்கிலித் தொடர் போல

## இலக்கிய முத்து



இவர் பெற்ற பரிசில்கள் பற்றிய விபரங்களையும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

தலைநகரில் வீறுநடை போடும் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) என்ற கவிதை அமைப்பு 1981 இல் தோற்றம் பெற ஒரு முக்கிய காரணமானவர். அதன் ஸ்தாபக உறுப்பினர். முதல் கவியரங்கத் தலைவரும் இவரே தான். மீள் எழுச்சிப் பெற்றிருக்கும் அவ்வமைப்பு இன்று மறுபடியும் வெற்றிப் பாதையில் நடைபோட பெரிதும் உழைத்து வருபவர் இந்த சத்திய எழுத்தாளர் நாகூர் கனி அவர்கள்.

எழுத்தாளர் நாகூர் கனி அவர்கள் ஒரு சாதாரண தர குடும்பத்தலைவனாக இருந்த போதிலும் எமது சமூகத்துக்கு பெண் டாக்டர் ஒருவரையாவது உருவாக்க வேண்டும் என்ற பிரக்ஞையால் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தனது இளைய மகள் ருஸைக்காவை பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவுக்கு மருத்துவப் பட்டப்படிப்புக்காக அனுப்பி வைத்தார். இன்னோரன்ன இடர்களை அனுபவித்து அவரை டாக்டர் ஆக்கியுள்ளார். அன்னாரின் இந்த முயற்சியையும் பாராட்டியே ஆக வேண்டும்.

கடந்த மாதம் பிலிப்பைன்ஸில் மணிலாவில் நடைபெற்ற தனது மகளின் மருத்துவ பட்டமளிப்பு விழாவில் தனது துணைவியாருடன் கலந்துக்கொள்ளும் பாக்கியம் இவருக்கு கிடைத்தமை மகிழ்ச்சியான விடயமே.

பழம்பெரும் இலக்கியவாதியான நாகூர் கனி வெறுமனே இலக்கியவாதி மட்டுமல்ல சிறந்த சமூக சேவையாளராகவும் செயல்படுகிறார். வாழைத்தோட்டவாசிகளுக்கெல்லாம் இவர் செய்த சேவைகள் எண்ணிலடங்காதவை.


எழுத்துலகில் ஐம்பது ஆண்டுகளை வெற்றிகரமாக கடத்தி விட்ட கலாபூசணம் எஸ்.ஐ. நாகூர் கனி அவர்களின் பேச்சும் மூச்சும் எழுத்துத்தான். எனவே இந்த 'இலக்கிய முத்து' எங்களின் இலக்கிய சொத்து என்றே கூற வேண்டும். ஓயாது எழுதிக்கொண்டிருக்கும் பல்துறை ஆளுமை கொண்ட இந்த மூத்த இலக்கியவாதி இலக்கிய உலகிலே மென்மேலும் ஓயாது எழுதி எழுத்துலகில் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும் எனவும் Nonstop எழுத்தாளராக கின்னஸ் சாதனை படைக்க வேண்டும் எனவும் 'ஒளி அரசி' சார்பில் நாமும் வாழ்த்துகிறோம்.



கலாபூசணம் நூருல் அயின்
நஜ்முல் ஹுசைன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





தருவது சுகன்ராஜ்

# காதல் முதல் கல்லறை வரை.

## அத்தியாயம் 6

வெளியில் ஓடி வந்தவளிற்கு அங்கு கண்ட காட்சி ஈரக்குலையையே நடுங்கச் செய்தது. மகன் பயத்தால் நடுங்கி அழுது கொண்டு இருந்தான், அதே நேரம் வேலியின் பனைமட்டை இடுக்கு வழியே கருநாகம் ஒன்று வெளியேறிக் கொண்டிருந்தது. துடிதுடித்துப்போன கயல் சக்தி என கத்திக்கொண்டே ஓடிச்சென்று அவனைகட்டிக் கொண்டு உடல் எல்லாம் தேடினாள், ஆம் அவள் பயந்தது போலவே குழந்தை சக்தியின் கால்களில் பாம்பின் பற்கள் தெளிவாக பதிந்திருந்தன. தன் முந்தானையை சர்ஏனக் கிழித்தவள் அவனது முழங்காலில் இறுக்கமாக கட்டி அவனை தூக்கிக் கொண்டு அரச ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். சக்திக்கு அவசர பிரிவு அறையில் சிகிச்சை நடந்தது. கயலால் தாங்கிக் கொள்ளவே முடிய வில்லை, பாவம் அவளுக்கு என்று இருக்கும் ஒரே சொந்தம் குழந்தை சக்தி மட்டுமே. தன் காதலன் சக்தியின் நினைவால் அவள் இவனிற்கும் சக்தி என பெயர் சூட்டி இருந்தாள். ஆஸ்பத்திரியில் இருந்த சிறிய ஆலயத்தின் முன் இருந்து கதறி அழுது மன்றாடினாள். அதே சமயம் அங்கு சிகிச்சைக்காக வந்திருந்த நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணைக் கண்டதும் இவளது நினைவுகள் கடந்த காலத்தை நோக்கிப் பாய்ந்தது.

கயல் பல்கலைக்கழகம் செல்ல ஆரம்பித்திருந்தாள். புதிய நண்பர்கள், புதிய உலகம், சீனியர்களின் சின்னச் சின்ன, பகிடிவதைகள் கூடவே மனதினுள் தன் சக்தியின் நினைவுகள் என கல்லூரி நாட்கள் அழகாகக் கடந்தன. தினமும் கல்லூரிக்கு பஸ்ஸிலே சென்று வருவாள் கயல். அன்றும் யன்னல் கரை சீற்றில் அமைதியாக அமர்ந்திருந்து வெளியில் வேடிக்கை பார்த்தபடி சென்றாள். அப்போது ஒரு பஸ் தரிப்பிடத்தில் நிறைமாத கர்ப்பிணிப்பெண் ஒருவர் தனியாக நிற்பதை அவதானித்தாள். அந்த பெண் கயலிற்கு மிகவும் நெருக்கமானவர் போல தோன்றவே உற்று நோக்கினாள். அது!! அவள்தான், அகிலா. அண்ணாவும் அகிலாவும் யாழ்ப்பாணத்தில் தான் இருக்கிறார்களா? உடனே அகிலாவிடம் பேச வேண்டும் என தீர்மானித்தவள் பஸ்ஸை நிறுத்தி இறங்கினாள். கண்களில் கவலை நிரம்பியிருக்க கைகளில் சிறிய பையுடன் ஆங்காங்கே வெளிறலும் கந்தலுமாய் உடை அணிந்து பரிதாபமாக நின்றிருந்த அகிலாவைக் கண்டதும் அவள் மேல் இருந்த கோபங்கள் போய் இரக்கம் உண்டானது கயலிற்கு, என்னடி இது கோலம்? என்று கேட்டபடியே அகிலாவை நெருங்கினாள். கயலைக் கண்டதும் அகிலா எப்படி எதிர் கொள்வது எனத் தவித்தாள். அவளது உணர்ச்சியை புரிந்து கொண்ட கயல் அவள் அருகே சென்று தோள் மீது கைபோட்டு அன்புடன் விசாரித்தாள்.

பாழாய்ப்போன இந்த யுத்தத்தால என் வாழ்க்கையே காணம போயிற்று கயல்.

இங்க இருந்து நாங்க வன்னிக்கு ஓடிப்போனம், அங்க அவர் ஒரு சைக்கிள் கடை வச்சாரு , சந்தோஷமாதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ரீதியான திருத்தல் சேவையுடன் தரம் -05 மாணவர்களின் (2017) பரீட்சைப் பெறுபேற்று அடைவை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை செயற்றிட்டம்

# முன்னோடிப்பரீட்சை-2017

**(பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்கள் தனியாக தபாலிடப்படும்.)**

## ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 13(ஆகஸ்ட்) தரம் 5

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு
உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு
நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2018

முழுப்பெயர்: - ..............................................................................

பாடசாலை: - ..............................................................................

வீட்டின் சரியான தபால் முகவரி - ..............................................................................

..............................................................................

தொ.பே. இல. ...................................... பிறந்த திகதி. ......................................

**முக்கியகுறிப்பு** - இவ்வினாத்தாளைநேரம்கணித்துசுயமாகஎழுதச்செய்து 85, ஐயந்தமால்லிமராச்சி மாவத்தை, கொழும்பு - 14 என்ற முகவரிக்கு 18ஆம் திகதிக்கு முன்பு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ் வினாத்தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு தபாலிடப்படும்.

வினாத்தாள் -I
புள்ளிப் பதிவு

வினாத்தாள் -II
புள்ளிப் பதிவு

மொத்தப்புள்ளிகள்

**உயர் பெறுபேறுகள்**

கடந்த மாதப் பரீட்சை -11 இல் உயர் புள்ளி களைப் பெற்ற மாணவர்களின் விவரங்களும் பாராட்டுக்களும் ஒளிஅரசியுடன் இலவசமாக இணைக்கப்பட்டுள்ள போட்டிப் பரீட்சை வழிகாட்டியில் வெளி வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோடிப்பரீட்சை- 2017

**சுட்டெண்**


பகுதி - I




நேரம் - 1 மணி 15 நிமிடங்கள்

**தரம் 5**



★ **1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.**

★ **முதல் உருவினை ஒத்த உருவைத் தெரிவு செய்க.**

(01) 



1. 
2. 
3. 

(02) 



1. 
2. 
3. 

★ **3, 4 ஆகிய வினாக்களில் மூன்று அடைப்புக்களில் இரண்டில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் அடைப்பில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க.**


(03)


1. 
2. 
3. 


(04)


1. 
2. 
3. 

★ **5, 6 ஆகிய வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**


(05) 






(06) 






★ **தரப்பட்டுள்ள உருக்கோலத்தில் அடுத்துவரும் இரண்டு உருக்கோலத்தையும் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

(07) 

1. 
2. 
3. 


(08) 

1. 
2. 
3. 


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப்புள்ளித்தொகை


★ **கீழ் உள்ள தொடர்பை அவதானித்து 09ஆம் 10ஆம் வினாக்களுக்கு விடை தருக.**



**ரூபா 110**



**ரூபா 120**



**ரூபா 80**

(09) தோடம்பழம் ஒன்றின் விலை யாது?
1. ரூபா 25  2.ரூபா 30  3.ரூபா 20

(10) அன்னாசிப்பழம் ஒன்றினதும் மாம்பழம் ஒன்றினதும் மொத்த விலை யாது?
1. ரூபா 120  2. ரூபா 130  3. ரூபா 100

★ **பின்வரும் கவிதையை வாசித்து வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**


மரஞ்செடி கொடிகளால் மண்ணினில் வாழ்வு
மனிதர் இதனை உணர்வது அறிவு
அறச்செயல் நல்ல மரஞ்செடி வளர்ப்பு
அனைவரும் இதனை உணர்வது சிறப்பு


(11) நல்ல மரஞ்செடி வளர்ப்பது எவ்வாறான செயல்
1.அறச்செயல்  2.அறிவுச்செயல்  3.சிறப்பான செயல்


(12) பாடலில் கூறப்படும் பிரதான கருத்து
1. மரஞ்செடி கொடி வளர்ப்பதால் மனிதர்களின் வாழ்வு சிறப்பதோடு மட்டுமல்ல சிறந்த அறச்செயலும் ஆகும்.
2. சிறந்த அறச்செயல்கள் செய்வதற்கு மரஞ்செடி கொடிகள் மட்டும் வளர்க்க வேண்டும்.
3. மனிதனது வாழ்வின் அனைத்தையும் தரும் மரஞ்செடி கொடிகளை மட்டும் அறமாகப் போற்ற வேண்டும்.


★ **வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

(13)












(14)










★ **குமரன் L என்ற எழுத்தை மைப்பேனாவால் எழுதினான். அதன் தோற்றம் அருகில் தரப்பட்டுள்ளது. அவன் அடுத்த பக்கத்தை திருப்பிய போது முதலில் எழுதிய L என்ற எழுத்து அதனூடாகத் தெரிந்தது. அந்த எழுத்து அடுத்த பக்கத்தில் எவ்வாறு தோன்றும் என்பதைத் தெரிவு செய்க.**

பக்கபுள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) 

A,E,M,S,T ஆகிய எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ள இரு ஆங்கிலச் சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் 1, 2, 3, 4, 5 ஆகிய எண்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் எழுத்துக்களுக்குரிய இலக்கங்கள், எழுத்துக்கள் அமைந்துள்ள ஒழுங்கில் தரப்படவில்லை.


SEAT = 2541 MEET = 3252

★ **இதன்படி பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிக.**

(16) இங்கு E எழுத்துக்குப் பதிலாக வழங்கப்பட்டுள்ள இலக்கம் யாது?
1. 2 2. 3 3. 5

(17) இங்கு T, M ஆகிய எழுத்துக்களுக்குப் பதிலாக வழங்கப்பட்டுள்ள இலக்கங்கள் முறையே
1. 2, 5 2. 5, 3 3. 5, 1

(18) ஒரு சதுர வடிவக் காணியைச் சுற்றி 28 தூண்கள் சம இடைவெளிகளில் நடப்பட்டிருந்தன. எனின், ஒரு பக்கத்தில் நின்று பார்க்கும் போது தென்படும் தூண்கள் எத்தனை?




1. 7 தூண்கள்
2. 8 தூண்கள்
3. 9 தூண்கள்

(19) ''காகம்'' எனும் சொல் △□○ என குறியீட்டில் எழுதினால் கானகம் எனும் சொல் எழுதப்படும் சரியான முறை
1. △○□△ △✡△○ △✡□○

(20) ''அன்பு'' எனும் சொல் WRT என குறியீட்டில் எழுதினால் வன்பு எனும் சொல் எழுதப்படும் சரியான முறை
1. WRT 2. MRT 3. WST

(21) விமல் தனது பண்ணையிலிருந்து ஒவ்வொரு நாளும் 35 முட்டைகள் வீதம் சேகரிப்பான். சனிக்கிழமை வரை 175 முட்டைகளைச் சேகரித்தான் எனின் அவன் அந்த நாளிலிருந்து எத்தனை முட்டைகளைச் சேகரித்திருப்பான்?
1. புதன் 2. திங்கள் 3. செவ்வாய்

(22) 

இவ்வுரு சிறிய சதுரமுகி கட்டைகளால் ஆக்கப்பட்டது. இதில் உள்ள சிறிய சதுரமுகிகள் எத்தனை?
1. 8 2. 4 3. 6

(23) ஒரு குறித்த ஆண்டின் ஒக்டோபர் 17ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். அவ்வாறெனின் நவம்பர் 17,
1. வெள்ளிக்கிழமை 2. சனிக்கிழமை 3. ஞாயிற்றுக்கிழமை

பக்கபுள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோடிப்பரீட்சை- 2017

**சுட்டெண்**

பகுதி - II

நேரம் - 45 நிமிடங்கள்

**தரம் 5**

★ பின்வரும் பாடல்பகுதியை வாசித்து (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப்போல்
அதன் பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப்போல்
சேற்றோடு வெள்ளம் நெளிந்து வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்
சினந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை
கண்ணன் எங்களூர் இளந்தாரிமாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே

மட்டுருக்காலை அருவாளுமடித்து
மரவிலங்கன் பிடி சீவியிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித்தகட்டினால் விரல் கூட்டமிட்டு
வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவுறு வராமற் காரும் ஐயனாரே.

01) இப்பாடலை எவ்வகையினுள் அடக்கலாம்?

.......................................................................................................

02) உயர்திணை ஆண்பால் பன்மை ஒன்று தருக.

.......................................................................................................

03) "புள்" என்பதன் ஒத்தபதத்தை தருக.

.......................................................................................................

04) பிரித்து எழுதுக.

01. செங்கால் : ..............................................................

02. எங்களூர் : ..............................................................

05) " இளந்தாரிமார் " என யாரைக் குறிப்பிடப்படுகின்றது?

.......................................................................................................

06) இப்பாடலில் இரண்டு ஒரே கருத்துடைய வேறுபட்ட சொற்கள் தரப்பட்டுள்ளன, அவை இரண்டையும் எழுதுக.

.................................................. ..................................................

07) இப்பாடலில் குறிப்பிடப்படும் பறவை எது?

.......................................................................................................

08) சினைப் பெயர்ச்சொல் ஒன்று தருக?

.......................................................................................................

09) பாடலில் " காரும் " என்பதன் சரியான எழுத்துவழக்கு யாது?

.......................................................................................................

★ பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

10) எடுத்தெறிதல்

.......................................................................................................

11) சீட்டுக் கொடுத்தல்

.......................................................................................................

பக்கபுள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.

12) நற்றமிழ்ப் புலவரே தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுமையா?

13) ஆறு குளம் ஏரி கிணறு இவை யாவும் நீர் நிலைகளாகும்

★ பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

14) முனிவர்கள் வாழும் இடம்: (அந்தப்புரம் / கோயில் / பன்னசாலை)

15) எழுபத்தைந்தாண்டு முடிவில் எடுக்கப்படும் விழா: (பொன்விழா / வைரவிழா / பவளவிழா)

★ பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனம் அமைக்குக.

16) மகாவித்தியாலயம்/ கல்வி / பாரதி / விளங்கியது / சிறந்து.

.................................................................................................................................

17) குறைவு / கொம்பு / தொகை / மான்களின் / மிகவும் / உள்ள

.................................................................................................................................

★ வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.

18) 

He is............................ the Cloths
(bathing / watering / washing / drinking)

19) உருவில் உள்ள நாயின் உறுப்புக்களுக்குரிய ஆங்கிலச் சொற்களைத் தருக.

I. ...................................... →



← II. ......................................


★ பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.


20) தயவுசெய்து இங்கே வாருங்கள் - ..................................................................

★ 21 ஆம் 22 ஆம் வினாக்களில் உள்ள சிங்களச் சொல்லின் தமிழ்க் கருத்தை எழுதுக.

21. குறுத்துமா எய்த?

......................... .........................



22. 

சமஹரவி(ட்)ட ஏவி

......................... .........................

பக்கபுள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இரு நிகழ்ச்சிகளின் ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்குவரிசை மாற்றப்பட்டு A, B, C, D, E எனத் தரப்பட்டுள்ளன. அவ்வுருக்களில் காணப்படும் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்குவரிசை இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(24) ஒருவர் பேருந்தில் பிரயாணம் செய்யப் புறப்படுதல்.



A B C D E

1. C, E, A, D, B    2. B, C, A, E, D    3. C, D, M, A, B

(25) தாய் ஒருவர் கடைக்குச் சென்று உணவு வாங்கி பிள்ளைக்கு வழங்குதல்



A B C D E

1. E, A, D, C, B    2. E, A, D, C, B    3. E, A, C, A, B


(26) வீடு, கூடு, புற்று, குடை, குகை என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.
1. வீடு    2. குடை    3. குகை

(27) A என்பவர் B இன் தாய் ஆவார். ஆனால் B என்பவர் A இன் மகள் அல்லர். அவ்வாறாயின் A என்பவர் யார்?
1. மகன்    2. மருமகள்    3. மாமா

★ **1, 2, 3, 4 ஆகியவற்றுக்குப் பதிலாக A, B, C, D என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்திப் பின் வரும் கணிப்புக்கள் செய்யப்பட்டன. இதற்கேற்ப வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எழுத்துக்கள் முறையே**


(28) ...................... + ...................... = D    1. A, C    2. A, D    3. B, C


(29) ...................... + ...................... = C    1. A, B    2. A, C    3. B, C


(30)  பின்வரும் உருவில் அவதனிக்கக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை,
1. 6    2. 7    3. 8

(31) ஆனந்தி ஜானகியைவிட உயரமானவள். குமாரி ஆனந்தியை விடக் கட்டையானவள். இதன்படி பின்வருவற்றுள் எது மிகச்சரியான வாக்கியம்
1. குமாரி ஜானகியை விட உயரமானவள்    2. குமாரியும் ஜானகியும் ஒரளவு உயரமானவர்கள்
3. மூவரிலும் ஆனந்தி மிக உயரமானவள்

(32) பின்வரும் உருக்களில் 1/2 பங்கு நிறந்தீட்டப்பட்ட உரு எது?

1.


2.


3.


பக்கபுள்ளித்தொகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(33) நான்கு வருடங்கள் வயதுடைய ஒரு சிறுவனின் சகோதரி சிறுவனைப்போல் மூன்று மடங்கு வயதுடையவள். சிறுவனுக்கு 12 வருடங்கள் வயதாகும் போது சகோதரியின் வயது யாது?

1. 20 வருடங்கள் 2. 24 வருடங்கள் 3. 36 வருடங்கள்

★ **சதுர வடிவ கடதாசித்துண்டு ஒன்று முலைவிட்ட மையக்கோட்டின் வழியே மடிக்கப்பட்டு மீண்டும் படத்தில் உள்ளவாறு புள்ளிக் கோட்டின் வழியே மடிக்கப்படுகிறது.**

(34) மூன்றாவது படத்திலுள்ளவாறு கத்தரிக்கோலால் புள்ளிக்கோட்டின் வழியே ஒரு துண்டை வெட்டி நீக்கிய பின்பு மடிப்புக்கள் விரிக்கப்படும் போது வரும் உரு எது?




1. 2. 3.

★ **கீழேயுள்ள வினாக்களின் ஐந்து சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தமான ஒரு முறையின் போது நடுவில் வரும் சொல் யாது?**


(35) பிட்டு, நெல், அரிசி, நெற்பயிர், மா

1. நெல் 2. அரிசி 3. மா

(36) மணித்தியாலம், செக்கன், நாள், நிமிடம், வாரம்

1.மணித்தியாலம் 2.நாள் 3.நிமிடம்


(37) ஐந்து செவ்வகங்கள் படத்தில் காட்டியவாறு ஒட்டப்பட்டுள்ளன. ஒரு செவ்வகத்தின் பரப்பளவு 8 சதுர சென்ரி மீற்றர் ஆகும். உருவிலுள்ள வடிவத்தின் பரப்பளவு யாது?





1.40 சதுர சென்ரி மீற்றர் 2. 32 சதுர சென்ரி மீற்றர் 3. 42 சதுர சென்ரி மீற்றர்

(38) 

படத்தில் காட்டப்பட்டுள்ள தளவடிவத்தை மூடுவதற்கு வெட்டாமல் பயன்படுத்தக்கூடிய மாபிள்கல் எது?

1 

2. 


3. 


(39) | 4 | 3 | 5 | 2 |


அஜய் 4 எண்ணட்டைகளை வைத்திருந்தான். அவற்றைப் பயன்படுத்திச் சில கூட்டல் பிணைப்புக்களை உருவாக்கினான். அவன் செய்த கூட்டல் செய்முறைகளில் பெறுமானம் கூடிய விடை எது?

1. 543 2. 545 3. 653

(40) ஒரு சதுரமுகியில் எதிர் எதிரான முகங்களில் ஒரே உருவம் வரையப்பட்டுள்ளது. அச் சதுரமுகியின் வெட்டுரு எது?


1. 

2. 

3. 

பக்கப்புள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.  உருவில் உள்ள பறவையின் பெயரைச் சிங்களத்தில் எழுதுக.

......................................................................

★ பின்வரும் பந்தியை வாசிக்குக.

இருண்ட ஒரு பெரிய காடு இருந்தது அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்து ஒரு குருவி தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்து. ஆயினும் தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காண வில்லை. அக்குருவி பார்க்காத ஒரு பக்கமும் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால் ......................................................................

(இதனைப் பூரணப்படுத்தி நான்கு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற வேண்டும். இவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, பயனிலை தொடர்பு சரியாக இருக்கவேண்டும்)

24) ......................................................................

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்


25) ......................................................................

26) ......................................................................

யாழ்ப்பாண பொதுநூலகம்

27) ......................................................................

★ ஒரு கிராமத்தில் மரக்கறி பயிரிடுவோர் எண்ணிக்கை தொடர்பான நிரல் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




28. கிராமத்தில் அதிகமானோர் பயிரிடும் பயிர் எது? ..............................

29. கீரை வகைகளைப் பயிரிவோர் எத்தனை பேர்? ..............................

30. இங்கு மரக்கறி பயிரிடுவோரின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

31. கிழங்குவகை பயிரிடுவோரிலும் பார்க்க கீரை வகை பயிரிடுவோர் எத்தனைபேர் அதிகம்?


..............................

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

பக்கபுள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32.




வரிப்படத்தில் காணப்படும் இரு பென்சில்களின் நீளங்களுக்கிடையிலான வித்தியாசம் எவ்வளவு?

..........................................................

33. 


A பாத்திரத்தில் இருந்து B பாத்திரத்தில் இரண்டு தடவை நீர் ஊற்றப்பட்டது. B பாத்திரம் நிரம்ப இன்னும் ஊற்றவேண்டிய நீரின் அளவு யாது?

..........................................................

★ **பிரித்தானியாவிலிருந்து புறப்பட்ட விமானம் துபாயில் சிறிதுநேரம் தரித்து நின்று மீண்டும் புறப்பட்டு கொழும்பை வந்தடைந்தது.**

விமானம் பயணித்த நேரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வேறுகுறிப்பு | |
|---|---|
| செல்லுகை - | ✈ |
| வருகை - | ✈ |

| பிரித்தானியா | துபாய் | கொழும்பு |
|---|---|---|
| ✈ 11:25 | ✈ 17:40<br>✈ 18:10 | ✈ 22:55 |


34. விமானம் பிரித்தானியாவிலிருந்து புறப்பட்டு துபாயை வந்தடைய எடுத்த காலம் எவ்வளவு?

..........................................................


35. விமானம் பிரித்தானியாவிலிருந்து கொழும்பை வந்தடைய எடுத்த பிரயாண நேரம் யாது?

..........................................................


36. ஒரு புத்தக அட்டையின் நீளம், அகலம் அளவு நாடாவினால் அளந்து பெற்ற அளவுகள் புள்ளிகளால் காட்டப்பட்டுள்ளது.




மேற்குறிப்பிட்ட அளவுகளைத் தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடங்களில் குறிப்பிடுக.




★ **இவ்வுருவில் உள்ள சிறிய சதுரங்கள் ஒவ்வொன்றும் 1cm நீள அகலம் கொண்டது. செவ்வகத்தில் சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன.**




37) இவ்வுருவின் சுற்றளவு ..................... சென்ரி மீற்றராகும்.

பக்கப்புள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38) நீக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு ................. சதுர சென்ரி மீற்றராகும்.




39. உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?

.........................................................................

40. உருவின் நிழற்றப்படாத பகுதியின் சுற்றளவு யாது?

.........................................................................

★ 41 தொடக்கம் 66 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின்கீழ் கோடிடுக.

41. மிகத் தொலைவில் இருக்கும் இரையையும் தொலைவில் இருந்தே இனங்காணக் கூடிய கூர்மையான பார்வையுடைய பிராணி?
1) காகம் 2) கழுகு 3) கோழி 4) வெளவால்

42. 
உருவில் உள்ள பறவை,
1) வான்கோழி
2) காட்டுக்கோழி
3) கானாங்கோழி
4) நெருப்புக்கோழி

43. பொரித்து உண்ணும் வடகம் தயாரிக்கப்ப பயன்படும் பூ,
1) வேப்பம் பூ 2) இலுப்பம் பூ 3) தாமரைப் பூ 4) முருக்கம் பூ

44. வெயிலில் காயவைத்துப் பேணப்படும் உணவுப் பொருளான பினாட்டு பெறப்படும் பழம்
1) வில்வம் பழம் 2) விளாம்பழம் 3) இலுப்பம் பழம் 4) பனம்பழம்

45. 
உருவில் உள்ள வித்து பரம்பலடைவது
1) விலங்குகளால் 2) நீரால்
3) காற்றால் 4) அதிர்ந்து வெடித்து

46. கார்த்திகை உடுத்தொகுதியில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை?
1) நான்கு 2) ஐந்து 3) ஆறு 4) ஏழு

47. இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான சான்று,
1) 2) 3) SLS 4)

48. கொதித்தாறிய நீரைப் பருகுவதால் தவிர்க்கக்கூடிய நோய்
1) மலேரியா 2) கழிச்சல் நோய் 3) சலரோகம் 4) மரஸ்மஸ்

49. சூரியவெப்பம் அதிகமாக உள்ள வேளைகளில் தொலைவில் நீர் இருப்பதுபோலத் தோன்றும் பொய்த் தோற்றம்
1) ஏரி 2) குளம் 3) நீர்வீழ்ச்சி 4) கானல்நீர்

பக்கபுள்ளித்தொகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. எமது பாதுகாப்புத் தொடர்பான சரியான செயற்பாடு
1) மலையுச்சியிலிருந்து பள்ளத்தை நோக்கி கைப்பிடியைப் பிடிக்காது சைக்கிள் ஓட்டிச்செல்லுதல்.
2) ''இங்கே குளிப்பது ஆபத்தானது'' என அறிவித்தல் பலகை காணப்படும் ஒரு குளத்தில் இறங்கி குளிக்க முற்படுதல்.
3) பாரிய மரமொன்றின் உச்சிக்கிளை தறிக்கப்படுவதை அருகே இருந்து பார்த்துக் கொண்டிருத்தல்.
4) பாதசாரிகள் வீதியின் வலப்பக்கத்தால் நடத்தல்.

51. ''நான் வீட்டிலும் பாடசாலையிலும் பொறுப்புடன் வேலைசெய்யும் ஒரு சிறு பிள்ளையாவேன்'' என்பது
1) மலர்வு 2)பிரார்த்தனை 3) மனதை தளர்த்துதல் 4) மனவுறுதி

★ **தரப்பட்ட இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி 52 ஆம் 53 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**








52. இந்து சமுத்திரத்தின் நடுவினிலே
இலங்கும் தீவாம் இலங்கை இது
தந்த செல்வமே களனி நதி
தரணி போற்றும் கல்யாணி
இப்பாடலில் குறிப்பிடப்படும் நதியைக் குறிக்கும் எழுத்து எது?
1) W 2) X 3) Y 4) Z

53. தேனீ போல் உழைக்கும் மக்கள்
சேர்ந்து வாழும் நகரம்.
ஞானி யோகர் சுவாமி நல்லூர்
நாவலர் போற்றும் நகரம்
இப்பாடலில் குறிப்பிடப்படும் நகரத்தைக் குறிக்கும் எழுத்து எது?
1) A 2) B 3) C 4) D

54. ஒருவர் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறச் சாயங்களை வைத்திருந்தார். ஆனால் அவருக்கு பச்சை நிறம் தேவைப்பட்டது எனின் அவர் கலக்கவேண்டிய நிறச்சாயங்கள்,
1) சிவப்பு, நீலம் 2) சிவப்பு, மஞ்சள் 3) நீலம், வெள்ளை 4) மஞ்சள், நீலம்

55. ''போர்த் தேங்காய் அடித்தல்'' விளையாட்டு நடைபெறும் மாதம்
1) தை 2) மாசி 3) சித்திரை 4) ஆடி

56. மடிப்புக் குலையாதிருக்க தைக்கப்படும் தையல்?
1)

2)

3)

4)


57.

இக்குறியீட்டினால் கருதப்படுவது,
1) வீதி செப்பனிடும் வேலை நடைபெறுகின்றது 2) முன்னால் சாய்வான பாதை
3) முன்னால் கற்பாறைகள் விழும் 4) குண்டும் குழியுமான வீதி

58. அநுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசு மரத்தின் கிளையை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வந்தவர்.
1) பராக்கிரமபாகு 2) தாதுசேனன் 3) விஜயன் 4) சங்கமித்தை

59. தூண்டிலின்மூலம் மீன்பிடிக்கும் போது தூண்டில் கொழுவப்படும் இரை
1) நாக்கிளிப்புழு 2) பயற்றங்காய் 3) சோளம் 4) கரட்


60. சைக்கிள் மிதியுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லின் பற்களின் எண்ணிக்கை
1) 18 2) 22 3) 44 4) 60

61. ''பொலி பொலி தாயே பொலி தம்பிரானே பொலி'' என்னும் பாடல்
1) அரிவு வெட்டும் பாடல் 2) சூடு மிதிப்புப் பாடல்
3) கும்மிப் பாட்டு 4) கோலாட்டம்

பக்கபுள்ளித்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தம். இந்த யுத்தம் உச்சம் ஆகினதும் நாங்க ரெண்டு பேரும் முள்ளிவாய்க்கால் வரை ஒண்ணாத்தான் வந்தம். அப்போ நடந்த பயங்கர சண்டைல பிள்ளைதாச்சி யான என்ன பங்கர்ல விட்டுட்டு எனக்கு தண்ணீர் கொண்டுவர போனவர்தான், இங் கயே இருடி வெளிய வந்தா செல்படும், நான் போய் தண்ணி கொண்டுவாறன், எண் டுட்டு போனார்டி, திரும்ப வரவே இல்ல, அவர அப்போதான் கடசியாக பாத்தன்'' என கூறிக்கொண்டே தேம்பித் தேம்பி அழு தாள். கயலிற்கு தலையே சுற்றியது, தன் பாசமான அண்ணா காணாமல் போய்ட் டானா, கடவுளே அண்ணா இருக்காரா



உன் பிள்ளையையும் காப் பாத்துறது என் கடமை, நீ வா நம்ம வீட்டுக்கு போக லாம் என அகிலாவை கூட்டிக் கொண்டு பஸ்ஸில் வீட்டை நோக் கிப் பயணித்தாள் கயல்...

கல்லூரி சென்ற கயல் அகிலாவுடன் வீடு வருவதைக்கண்டு கொதித்தெழுந்தார் கய லின் அம்மா. ஆயினும் அகிலாவின் நிலை இரக்கத்தை உண்டுபண்ணியது. தன் வம் சத்தின் வாரிசையல்லவா சுமக்கின்றாள். கயல் நடந்த விடயங்களை தாய்க்கு தெளி வுபடுத்தினாள். தன் ஒரே மகன் காணா மல் போனதை எண்ணியதும் வேதனை




இல்லையானே தெரியலயே என குழம்பித் தவித்தவள், சரி நீ எப்பிடி இங்க வந்தாய்? என்றாள்.


பங்கர்ல இருந்த என்ன ஒரு குடும்பம் காப்பாத்திச்சு, யுத்தம் முடிந்ததும் ஆறு மாசம் முகாமில இருந்தன், அங்க இருந்து போகலாம் எண்டுட்டாங்க, எனக்கு எங்க போறது எண்டே தெரியல, கையில் இருந்த காச வச்சு இங்க வரைக்கும் வந்து நிக்கிறன் டி, 'சாகலாம் போல இருக்கு, அந்த கட வுள்தான் உன்ன இங்க அனுப்பி இருக்காரு, என்ன விடுடி, ஆனா என் பிள்ளைக்காக நான் வாழணும் கயல், என விம்மிக் கொண்டே கூறினாள்.

லூசு மாதிரி பேசாதடி, உன்னையும்

அவளை ஆட்கொண்டது ''இப்பிடி காண மல் போகவாடா வீட்ட வீட்டுப் போனாய்? எங்கயாசும் நல்லா இருப்பாய்னு நினைச்ச னே, இப்பிடி ஆயிற்றே'' எனப் புலம்பியது தாயுள்ளம். அன்று முதல் கயனை தேடும் படலம் ஆரம்பமாகியது. காணாமல்போ னோர் பட்டியலில் கயனின் பெயரும் சேர்க் கப்பட்டது. அனைத்து முகாம்களும் புனர் வாழ்வுக் கழகங்களும் சல்லடை இட்டுத் தேடப்பட்டன. ஆயினும் கயனை கண்டு பிடிக்கவே முடியவில்லை. காணாமற்போ னோரை மீட்ககோரி இடம்பெற்ற ஊர்வ லங்களிலெல்லாம் கலந்து கொண்ட னர். இறுதியாக ஓர் பேரணியில் கலந்து கொள்ள தம் மகனின் புகைப்படங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காதல் முதல் கல்லறை வரை

ளுடன் கயலின் தாய் தந்தை இருவரும் சென்ற னர். அகிலாவின் பிரசவ காலம் நெருங்கியதால் அவளும் அவளிற்கு துணையாக கயலும் வீட்டில் இருந்தனர். மறுநாள் அதிகாலை வீட்டின் தொலைபேசி சிணுங்கியது. கயல் எடுத்தாள், சிறிய நேர இடைவெளியில் அம்மா எனக் கதறினாள் , அவள் வாயி லிருந்து வார்த்தைகள் வரமுடியாமல் திக்கி யது. அழ மட்டுமே முடிந்தது அவளால், அருகில் இருந்த அகிலா தொலைபேசியை வாங்கி விசாரித்தாள். கயலின் தாய் தந்தை பயணித்த பேருந்து கோரமான விபத்துக்கு உள்ளானதில் இருவரும் தவறிவிட்டதாக வும் பிரேதங்களை யாழ்ப்பாண பிணவறை யில் தக்க சான்றுகளை வழங்கி பெறமுடியும் எனவும் யாழ் போலிசாரிடமிருந்து தகவல் வழங்கப்பட்டது. கயல் அகிலா இருவருமே இடிந்து போனார்கள். அம்மா அப்பா என கதறிக் கதறி அழுதாள் கயல். அயல் வீட் டார் உதவியுடன் தாய் தந்தையரின் இறு திக் கிரியைகளை மகன் ஸ்தானத்திலிருந்து முடித்தாள் கயல். அனைத்து காரியங்களும் முற்றுப்பெற்றன.

தன் புத்தகத்திற்குள் ஒழித்து வைத்தி ருந்த சக்தியின் புகைப்படத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டு

''சக்தி நான் அநாதை ஆகிட்டன்டா, அப்பா அம்மா இரண்டுபேரும் ஒரேதா விட் டுட்டு போய்ட்டாங்கடா, அண்ணா இருக் கானா இல்லையானே தெரியல, நீ மட்டும் தான்டா எனக்கு இருக்கிறாய், சீக்கிரமா இந்த அபலைகிட்ட வாடா'' என நெஞ்சில் பதித்து அழுதாள்.


காலம் விரைவாக கடந்து கொண்டிருந் தது தந்தையின் வருமானம் இன்றி வாழ் வாதாரம் பாதிக்கப்பட்டது. தன்னை நம்பி உள்ள அகிலாவுக்காகவும் அவள் வயிற் றிலுள்ள பிள்ளைக்காகவும் தைரியமாக இருக்கணும், என எண்ணியவள் கல்லூரி செல்வதை நிறுத்தி வேலைக்கு செல்ல ஆரம்பித்தாள் கயல் .

நினைவுகள் நெஞ்சில் நிழலாடிக் கொண் டிருந்த வேளை கயலை நெருங்கிய தாதிப் பெண் ''ஹலோ உங்க பையன காப்பாத்தி யாச்சு, நோர்மல் வாட்டுக்கு மாத்தியாச்சு, போய் பார்க்கலாம், அதோட, இந்த மருந்து இங்க கொஞ்சம் தான் ஸ்ரொக் இருக்கு, ரொம்ப முக்கியமான மருந்து, நாளைக்கு பிறைவேற்றா வாங்கிட்டு வாங்க'' என கூறி மருந்துச் சிட்டையை நீட்டினார்.

தயக்கத்துடன் பெற்றவள் எவ்வளவு வரும் ஸிஸ்ரர், என்பதற்குள், ஆறு மாத் திரை எட்டாயிரம் ரூபா, வெளில இருக்கிற மருந்து கடையில இருக்கு, கெதியா வாங் கிற்று வாங்க, அப்புறம் ஏதாவது ஆனா எங்கள குறை சொல்றல, ஓகே, என கடிந்து கொண்டவள் அங்கிருந்து சென்றாள். மயக் கத்தில் இருந்த மகனை வெறித்துப்பார்த் தபடி பணத்துக்கு என்ன செய்வதென்ற சிந்தனையில் இருந்த கயல் பக்கத்து வீட்டு அக்கா ஒருவரிடம் கடனுக்கு பணம் பெற் றதாக கூறியது நினைவு வரவே மறுநாள் காலை அந்த பெண்ணின் உதவியுடன் கட னுக்கு பணம் பெற அந்த வீட்டிற்குச் சென் றாள்.

அங்கு, ''அண்ணே! இவங்க பெயர் கயல், இவங்க மகன் ஆஸ்பத்திரியில் இருக் கான், மருந்து செலவுக்குத்தான் பணம் கேக் குறாங்க, பாத்து உதவி பண்ணுங்க'' என் றாள் அந்தப் பெண்மணி. நாகரிகத்திற்காய் வணக்கம் வைப்பதற்காக அவரை நிமிர்ந்து பார்த்த கயலால் தன் கண்களையே நம்ப முடியவில்லை அதிர்ச்சியில் உறைந்து போனாள். கண்கள் ஈரமானதே தவிர வார்த் தைகள் வரவில்லை.. அங்கு கயல் எதிரே நின்று கொண்டிருந்தான் சக்தி..

**நினைவுகள் நீளும்.**



ஈசாமை, தற்புருசம், அகோரம், வாமம், சத்தியோதசாதம், என்னும் சிவபெருமா னுடைய ஐந்து முகங்களுடன் உமாதே வியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினார் என்பது ஒரு கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்ச்சிக்கு மயங்காதே




முன்னர் ஒரு தடவையேனும் குதிரையைப் பார்த்திராத நரி ஒரு குதிரையைக் கண்டது. அதன் அழகான உடலும் நீண்ட வாலும் நரியின் கண்களைக் கவர்ந்தன. உடனே தனது நண்பனான ஓநாயிடம் ஓடிச் சென்ற நரி, அன்பரே! இன்று உமக்கு அருமையான இரையொன்று காத்திருக்கிறது. அற்புதமான உணவு அது, வந்து பாருங்கள் என்று அன்புடன் அழைத்து இரண்டும் ஓடிச்சென்று குதிரையைப் பார்த்தன. குதிரை அவற்றைக் கவனிக்காது புல் மேய்ந்துகொண்டிருந்தது. நரிக்கும் ஓநாய்க்கும் குதிரையை நெருங்கப் பயமாக இருந்தது. அது சாதுவானதா? அல்லது கொடியதா? என்று தெரிந்துகொள்ள விரும்பின. சற்று தூரத்தில் நின்று, நரி குதிரையிடம் பேச்சுகொடுத்தது.

சற்று தூரத்தில் நின்று நரி குதிரையிடம் பேச்சு கொடுத்தது. அண்ணா உங்கள் பெயர் என்ன? உங்களை இதற்கு முன்னர் நான் பார்த்ததில்லை, அதனால் தான் கேட்கிறேன் என்றது. குதிரைக்கு நரியின் கேள்வி வேடிக்கையாக இருந்தது. நரியுடன் ஓநாயும் ஒன்றாய் சேர்ந்து வந்திருப்பதன் மர்மத்தை அது புரிந்துகொண்டது. நரிக்கு நல்ல பாடம் புகட்ட எண்ணியது. என் பெயர் என் கால் குளம்பில் எழுதப்பட்டிருக்கிறது, யார் வேண்டுமானாலும் அதனைப் பார்க்கலாம் என்றது. நரிக்கு இந்தப் பதில் சந்தோசத்தை ஏற்படுத்தியது. அண்ணா எனக்கு எழுதப்படிக்க தெரியாது, ஆனால் என் பக்கத்தில் நிற்கும் ஓநாய் நண்பர் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர், அவருக்கு எழுதப் படிக்க தெரியும் என்றது.

நரி தன்னை புகழ்ந்து கூறியதும் ஓநாய் பெருமை கொண்டது. தன்னை பெரிய படிப்பாளியாக கருதியது. குதிரையின் கால் குளம்பில் உள்ள அதன் பெயரைப் படிப்பதற்காக கம்பீரமாக நடந்து சென்றது. குதிரையும் குளம்பை தூக்கிவைத்து காத்திருந்தது. ஓநாய், குதிரையின் கால் குளம்பின் அருகில் சென்றதும் குதிரை தன் பின்னங்காலால் முகத்தில் படார் என்று ஓர் உதை விட்டது. முகம் சிதைந்து ஓநாய் தூரத்தில் சென்று விழுந்தது. எதிர்பாராத இந்த தாக்குதலை கண்ட நரி நண்பரே குதிரை அண்ணாவின் பெயரை அதன் குளம்பில் பார்த்து தெரியவேண்டியதில்லை, உன் முகத்தில் நன்றாகவே தெரிகிறது, என்றுகூறிவிட்டு ஓட்டம் எடுத்தது. புகழ்ச்சிக்கு மயங்கி இப்படி முகம் புண்ணாகிப்போனேனே, என்று ஓநாய் தன்னைத் தானே நொந்துகொண்டது.

சு. லக்சிகா
(வட்டு வடக்கு சித்தங்கேணி)


## வரைந்து பழகுவோம்



யோகேந்திரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் நலமா

# கனவுகளுக்கு அர்த்தம் உண்டு... எதற்கு என்ன பொருள்?

## உளவியல் உணர்த்தும் உண்மைகள்!





யாரோ ஒருவரை அப்போதுதான் முதன்முதலாகப் பார்த்திருப்போம். ஆனால், அவரை அதற்கு முன்னரே பார்த்தது போன்ற ஓர் உணர்வு ஏற்படும். வெகுநாளாக நன்றாகப் பழக்கமானவர் போலவே தோன்றுவார். இவரை எங்கே பார்த்திருக்கிறோம் என்று பல மணி நேரம் யோசித்தாலும் விடை கிடைக்காது. அதே போல், ஒரு நிகழ்வு நடக்கும்போது, ஏற்கெனவே அது நடந்ததுபோலவும் பார்த்ததுபோலவும் உணர்வோம். அந்த நபர் அல்லது அந்த நிகழ்வு எப்போதாவது நம் கனவில் தோன்றியிருக்கும் என்பதுதான் காரணம். அது நிஜ வாழ்க்கையில் நடக்கும்போது, இரண்டாவது முறையாக நடப்பதாகத் தோன்றுகிறது. சூகனவுகளுக்குப் பலன் உண்டு இப்படிக் கண்டால் இது நடக்கும் அது நடக்கும் எனக் கேள்விப்பட்டிருப்போம். அது உண்மையா? உண்மை. நாம் அடிக்கடி காணும் கனவுகள் எல்லாவற்றுக்குமே நிஜ வாழ்க்கையில் அர்த்தம் இருக்கிறது என்கிறார் ஆவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இயான் வாலஸ் (Ian Wallace) என்கிற சைக்காலஜிஸ்ட்.

**கனவுகள் தொடர்பாக சுமார் இரண்டு லட்சம் பேரிடம் ஆராய்ச்சியும் செய்திருக்கிறார். இயான் வாலஸ் சொல்லும் சில கனவுகள்... அதற்கான அர்த்தங்கள் இங்கே...**

★ கீழே விழுவதுபோல கனவு கண்டால், நீங்கள் வாழ்க்கையில் யாரோ ஒருவரை அதிகம் எதிர்பார்த்து வாழ்கிறீர்கள், அவரையே சார்ந்து இருக்கிறீர்கள், இப்போது அவரிடம் இருந்து உங்கள் நிலையில் தடுமாறிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது பொருள்.

★ பயன்படுத்தாத அறை அல்லது இடத்தைக் கண்டால், வாழ்க்கையில் நீங்கள் புதிதாக ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள். உங்களுக்கான தனிப்பட்ட திறமையை இப்போதுதான் தெரிந்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

★ தேர்வுகளில் தோல்வி, மேடைப் பேச்சுகளில் சொதப்புவது மாதிரியான கனவுகள் வந்தால், நாம் ஒரு விஷயத்தில் அதிகமாகக் குழம்பிப் போய் இருக்கிறோம் என்று பொருள். வாழ்க்கையில் எல்லோருக்கும் ஒருமுறையாவது இதுபோன்ற கனவு நிச்சயம் வந்திருக்கும். ஒரு விஷயத்தை எந்தக் குழப்பமும் இல்லாமல் தெளிவாக முடிக்க வேண்டும் என்ற பயத்தில் இதுபோன்ற கனவுகள் வருவது இயல்பு.

★ பறப்பதுபோல் ஒருவருக்குக் கனவு வந்தால், அவர் வாழ்க்கையில் மிகச் சுதந்திரமாக ஒரு முடிவை எடுத்திருக்கலாம், இல்லையென்றால், இனி வரும் காலத்தில் வாழ்க்கைக்குத் தேவையான சுதந்திரமான முடிவை எடுக்கப்போகிறார் என்று பொருள். நீண்ட நாள்களாகக் குழம்பிக்கொண்டிருந்த விஷயத்தில், தெளிவான முடிவை எடுக்கப் போவதற்கான அறிகுறி இந்தக் கனவு. இதன் பிறகு வாழ்க்கையில் அதிகமான சவால்களை எதிர்கொள்ளும் எண்ணமும் ஏற்படும்.

★ பொது இடத்தில் நிர்வாணமாகப் பயணம் செய்வதுபோல் கனவு வந்தால், அதற்குப் பிறகு தூக்கம் வருமா? இப்படிக் கனவு வரக் காரணம், ஒரு விஷயத்தின் மீது நம்பிக்கை இல்லாததே. செய்கிற வேலை நல்லபடியாக முடியுமா, முடியாதா? என்ற குழப்பத்தில் இப்படிக் கனவுகள் வரும்.

★ சிறுநீர் கழிக்கவேண்டிய நிர்ப்பந்தம், ஆனால், கழிப்பிடம் கிடைக்காமல் அவஸ்தைப்படுவது போல கனவு வந்தால், அவர் தன்னுடைய பிரச்னையை யாரிடமும் சொல்ல முடியாமல் சங்கடத்தில் இருக்கிறார் என்று புரிந்துகொள்ளலாம். தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்தச் சரியான சூழல் கிடைக்காதவராக அவர் இருக்கிறார் என்று அர்த்தம்.

★ மேலே சொல்லப்பட்டிருக்கும் கனவுகள் எல்லாம் நேர்மறையானவை, ஆனால், பல் விழுவதுபோலக் கனவு வருவது எதிர்மறை எண்ணங்களை வெளிப்படுத்துவது போன்றது. இது போன்ற கனவுகள் தன் மீது நம்பிக்கை குறைந்து இருப்பதையும், செய்யும் வேலையில் அதிக கவனம் இல்லாததையும் தெளிவு படுத்துகின்றன.

★ ஒரு விலங்கோ அல்லது ஒரு விஷயமோ அடிக்கடி துரத்துவது போல நம்மில் பலர் கனவு கண்டிருப்போம். இதுபோன்ற கனவு வருவது, நாம் நிர்ணயத்து வைத்திருக்கும் இலக்கை நோக்கி நாம் பயணிக்காமல் இருக்கிறோம் என்பதை நம் ஆழ் மனதில் பதிந்து போயிருக்கிறது என்று அர்த்தம்.

இலக்குகளை அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருப்பதால், அதை யாரோ ஒருவர் நமக்கு நினைவுபடுத்துவது போலவே வருகிறது இந்தக் கனவு.

கனவுகள் வருவது மனித இயல்பு. காணும் ஒவ்வொரு கனவும் வாழ்க்கையில் நாம் செய்யும், செய்யத் தவறும் விஷயங்களை நமக்கு நினைவுப்படுத்துபவை. அதற்காக நாம் பயபடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், எதற்காக இப்படி கனவு வந்தது என்பதை அறிந்து செயல்பட வேண்டும் என்கிறார் இயான் வாலஸ்.



சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து அக்கினிப் பொறியாக சரவணப்பொய்கையில் உதித்தவர் ஆறுமுகன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வுக் கட்டுரை

# செம்மறி ஆட்டுக்குணம்

எம்மை நாமே முதுகில் தட்டி விதந்து பாராட்டக்கூடியதாக எம்மிடம் அமைந்துள்ள சிறப்பியல்பு, எந்த முயற்சியை எடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு பிறரை பின்பற்றுவதுதான்! என்னே பரிதாபம்!



உலக நாடுகளை எடுத்துக்கொண்டால் அவை ஒவ்வொன்றும் விஞ்ஞானத்திலும் விவசாயத்திலும் கைத்தொழிலிலும் கொடிகட்டிப்பறக்கின்றன என்றால் அதற்கு காரணம் அந்த நாட்டு பிரஜைகளின் வேறுபட்ட சிந்தனைகள்தான்.

ஐம்பெரும் வல்லரசுகள் எப்படித்தோன்றின?... வல்லரசுகளுக்கு போட்டியாக இந்தியா பாகிஸ்தான் , வடகொரியா, இஸ்ரேல் போன்ற நாடுகள் அணு ஆயுத பலத்தில் எப்படி சமத்துவம் பெற்றன? வடகொரியா ஐதரசன் குண்டை கண்டுபிடித்தது யாரை பின்பற்றி?

விண்வெளி பயணம் என்று எடுத்தால் நாஸா யாரைப்பின்பற்றி அண்ட வெளியில் சாதனை புரிகின்றது? ரஸ்சியாவிற்கு யார் வழிகாட்டி?

A.K 47 இறக்குமதி செய்யப்படாவிட்டால் நாம் இன்றும் அம்பும் வில்லும் ஈட்டியும் ஏந்துபவர்களாகத்தான் இருப்போம். ஜப்பான், இந்தியா, ஆகிய நாடுகளிடமிருந்து வாகனங்களை தருவிக்காவிட்டால் இன்றும் நம்நாட்டில் மாட்டுவண்டியும், குதிரை வண்டியும்; ரிக்ஷா'வும் தான் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும்.

இவற்றையிட்டு எம்மில் எவரும் கவலை கொள்வதாகவும் இல்லை. எங்கள் பாடசாலைகளின் அமைப்பும் அப்படித்தான்!


ஒரு ஆசிரியை மாணவன் ஒருவனிடம் கேட்கின்றார். உனக்கு படித்து யாராக வர வேண்டும் என்று விருப்பம்? அவனது பதில் டாக்டராக என்றிருக்கும். மற்றொரு மாணவன் எஞ்ஜினியராக என்றிருக்கும். அபூர்வமாக பொலிஸ்காரனாக என்று ஒரு மாணவன் சொன்னால் அவன் வீட்டில் திருட்டுப் போயிருக்கலாம்!

இலங்கையில் சட்டப்படிப்பை பின்பற்றுவோர் தொகை குறைவாக உள்ளது. விவசாயம், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்விகளை மேற்கொண்டால் அத்துறைகளில் கண்டுபிடிப்புக்களை செய்யமுடியும்.

மொத்தத்தில் எமது நாட்டில் எப்படியாவது பட்டப்படிப்பை பூர்த்திசெய்ய வேண்டும் என்ற கவலைதான் மாணவர்களிடம் காணப்படுகின்றதேயல்லாமல் புதிதாக எதையாவது சாதிக்கவேண்டுமென்ற ஆர்வம் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பட்டப்படிப்பை முடித்த பின் உத்தியோகத்திற்காக அலைகின்றார்கள். 'வேலையில்லா பட்டதாரி' என்று சினிமா படம் கூட வந்துள்ளது. நம் நாட்டில் பட்டதாரிகள் வேலை கேட்டு சாத்வீக போராட்டம் நடாத்துகின்றார்கள். என்ன வெட்கக்கேடு! உங்களுக்கென்று சுயமூளை சுய தொழில் என்று கண்டுபிடிக்க மாட்டீர்களா?

இன்று இணையத்தில் ஒரு செய்தி படித்தேன். அதை அப்படியே தருகின்றேன்

ஜேர்மனியில் ஆஸ்மா நோய்கு தீர்வு வழங்கி சாதனை படைத்த இலங்கை மாணவன்.

இளம் விஞ்ஞானிகளுக்கான சர்வதேச மகாநாட்டில் பங்குபற்றிய இலங்கை மாணவரொருவர் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். நலந்தியன் ரகிந்து விக்ரமரத்ன என்ற 15 வயது மாணவனே இந்த சாதனை படைத்துள்ளான்.



இதே போன்று நாட்டின் வடக்கிலும் வெவ்வேறு பிரதேசங்களிலும் சில மாணவர்கள் விவசாயம், மருத்துவம் போன்ற துறைகளில் கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளார்கள்.

வெறுமனே டாக்டராக வேண்டும்... சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் மட்டும் செயற்படுவது கவலையளிப்பதாகும். மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெறவேண்டுமானால் குறைந்தது 2A, 1B சித்தியாவது பெறவேண்டும். அப்படியான திறமையை உடைய மாணவர்கள் நூற்றோடு நூற்றி ஒன்று என்று போவதில் என்ன பயன் ? அவர்கள் மருத்துவ கல்வியை மேற்கொள்ளும் அதே நேரம் பயனுள்ள வகையில் மருத்துவ துறைக்கு கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அப்படி நடப்பதில்லை.


இலங்கையில் மருத்துவ கல்வியை கற்பிக்கும் உரிமையை தனியார் கல்வி நிலையங்களுக்கு (Saitm) வழங்கினால் பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளிகளால் தவறவிடப்பட்ட மாணவ மாணவிகளுக்கு அது ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமையும். அதனை பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீட மாணவர்களாக இருப்பவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நாடளாவிய ரீதியில் அதனை எதிர்த்து போராட்டம் நடாத்தினார்கள். பாடசாலைகள் உட்பட வேறு திணைக்களங்களையும் தமது போராட்டத்திற்கு சாதகமாக திரட்டிக்கொண்டார்கள்.

இந்த இடத்தில் நான் எனது பட்டறிவு ஒன்றை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன் எனது மருமகள் ஒருத்தி தனது இருபது வயதில் கனடாவில் உள்ள தனியார் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தாள். அவள் இறுதியாண்டில் இருந்த போது அமெரிக்காவில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரியிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஒரு டிகிரி தேவையாக இருந்தாலும் கூட அந்த மருத்துவ கல்லூரி அவளுக்கு ஒரு விட்டுக்கொடுப்பை செய்தது. டிகிரியை பின்னர் முடித்துக்கொடுக்கலாம் இப்போ மருத்துவ கல்லூரியில் இணையலாம் என்பதே அது! பாருங்கள் அந் நாட்டில் உள்ள பெருந்தன்மையை !

அவளும் அமெரிக்காவில் உள்ள அந்த தனியார் மருத்துவக்கல்லூரியில் இணைந்து கொண்டாள். அனைத்து பரீட்சைகளிலும் சராசரி 90 புள்ளிகளை பெற்ற அதே வேளை விடுமுறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலங்களில் தனது முன்னைய டிகிரி ஐயும் பூர்த்தி செய்தாள்.

மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு பரீட்சையில் திறமையாக சித்தி பெற்றாள். இலங்கையில் போல அந் நாட்டில் உடனே டாக்டராக முடியாது. எம் நாட்டில்தான் வைத்தியசாலைகளுக்கு டாக்டர்கள் அங்கு நோயாளிகளுக்குதான் டாக்டர்கள்!

இறுதிபரீட்சையில் சித்தி பெற்றதும் வருடம் ஒரு முறை மட்டும் நடாத்தப்படும். ரெஸிடென்ஸி (Residency) தெரிவுக்கு விண்ணப்பிக்கவேண்டும். எனது மருமகள் நான்கு வருடங்கள் நேர்முகப்பரீட்சையில் தவறினாள். வயதும் 30 ஆகிவிட்டது. மிகவும் சோர்ந்து விட்டாள். இந்திய மாணவர்களுடன் போட்டிபோடுவது மிகவும் கஷ்டமாக இருந்தது!

ஐந்தாவது வருடம் ஒரு Research Institute ல் இணைந்து சேவையாற்ற தொடங்கினாள். அங்கு Residency நேர்முக பரீட்சைகளுக்கு வகுப்புக்கள் நடந்தன. அதில் அவளும் பங்குபற்றக்கூடியதாக இருந்தது. அங்கு வகுப்புக்கள் எடுக்க வரும் டாக்டர்களுக்கு'' அறிமுகமானாள். அதனால் செல்வாக்கு அதிகரித்தது. நேர்முகப்பரீட்சையில் சித்தியும் பெற்றாள்.

அத்துடன் முடியவில்லை மேலும் இரண்டு வருடங்கள் பயிற்சி வேறு பரீட்சைகளும் உண்டு. அவற்றில் தேறினால்தான் டாக்டராக முடியும்! அதனை இலகுவில் சாதித்துவிடுவாள்! பாருங்கள் ஒரு இலங்கை பெண் கனடாவில் பட்டப் படிப்பை முடித்து அமெரிக்காவில் உலகத்தின் அனைத்து நாடுகளிலிருந்தும் வந்து போட்டி போடும் மாணவர்களுக்கு சவாலாக இருந்து வெற்றி பெற முடிகின்றது. அதுவே சாதனை! இது ஒரு உண்மைச்சம்பவமும் கூட. 2017 மார்ச் மாதம் Residency க்கான தெரிவு பட்டியல் ஈமெயிலில் அறிவிக்கப்பட்டது.

எமது நாட்டு டாக்டர்களுக்கு இந்த அனுபவங்கள் இல்லை. அதனால் கூற வேண்டி இருந்தது!

இனி , எனது நண்பன் ஒருவன் சிங்கப்பூரில் பொறியிலாளராக பணி புரிந்தான். அவனது முயற்சியால் கட்டடக்கலையில் பல கண்டு பிடிப்புக்களை மேற்கொண்டான்.

இப்போ மாலைதீவில் கடலுக்குள் சர்வதேச விமான நிலையம் ஒன்றை கட்டி எழுப்பு கின்றார்கள். முதலில் கடலை மூடி தளம் அமைக்க வேண்டும்.!

டுபாயில் மாபெரும் தீவு ஒன்றை கடலுக்குள் ஸ்தாபித்தார்கள். அதை ( Dubai Palm Island ) டுபாய் பாம் தீவு என்று பெயரிட்டுள்ளார்கள். நிச்சயமாக மனித முயற்சியால் பூமியில் செயற்கையாக அமைக்கப்பட்ட மிகப்பெரிய தீவு இதுவாகும். இப்போ இத்தீவு சுற்றுலா பயணிகளுக்கான சுவர்க்கபுரியாக அமைந்துள்ளது.

அதே முயற்சியைத்தான் மாலைதீவில் மேற்கொள்கின்றார்கள். இதற்கான வேலை தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அப் பாரிய பொறுப்புக்கு எனது நண்பனும் தெரிவாகி பணிபுரிகின்றான். மாலைதீவில் நிலப்பிரச்சனை... நண்பனுக்கு (Flats) பிளட்ஸில் தங்க இடம் ஒதுக்கி உள்ளார்கள். அவனுக்கு தனி போர்ஷன் (Portion). ATM காட்போல ஒரு வெள்ளைக்காட் கொடுத்திருக்கின்றார்கள்.

அவரது போர்சனுக்கு அதுதான் திறவுகோல். கதவுக்கு முன்னால் அவர் போய் நிற்க வேண்டியது கார்ட்டை காட்ட வேண்டியது. அவரது முகம் ஸ்கான் (Scan) பண்ணப்படும். கதவு திறந்து கொள்ளும். வேறு யார் சென்றாலும் கதவு திறக்காது!

எம்மையும் எங்கள் நாட்டையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! இந்த கட்டுரை கூறுவது யாரையும் பின் தொடராதே என்பது. ஆனால் கடவுள் விடயத்தில் ஒரு குருவை பின்பற்றியே ஆக வேண்டும். அப்போதான் எமது இதயம் பக்குவப்படும். எமது வெள்ளை உள்ளத்தை கடவுளுக்கு காட்டினால் அவர் தனது கதவை அகல திறந்து வைப்பார்!



திருமலை. வீ.என்.சந்திரகாந்தி
572A, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதிவிழந்தது பாகற்காய் குளம்.



வன்னியசிங்கம் ஆதவன்

தமிழர்களின் பாரம்பரிய கிராமங்கள் பல, காலத்தால் அழிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளன. அவற்றின் வரலாறுகளை, படிமங்களை, தொன்மைகளை இன்றைய சமூகத்திற்கு தெரியப்படுத்தும் பொருட்டே மண்வாசனை என்னும் இப்பகுதி பிரசுரிக்கப்படுகின்றது. இம்மாத மண்வாசனையில் வாசம் சுமந்து வரும் நிலம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாகற்காய் குளம் என்னும் இடமாகும்.


அழிந்து போன தமிழ்க்கிராமங்கள் பலவற்றில் ஒன்றுதான் இந்த பாகற்காய் குளம். நெடுங்கேணியின் கிழக்கே பட்டிக்குடியிருப்பு கிராமத்திலிருந்து 2 km தூரத்தில் பட்டிக்குடியிருப்பு செல்லும் வீதியில் அமைந்துள்ளது இக்கிராமம். குளம், அந்த நீரில் விளையும் வயல்கள், முத்துமாரிஅம்மன் கோயில் பனைமரங்கள் என, அழகிய காடு சூழ்ந்த இந்த கிராமம் இன்று அழிவடைந்து காணப்படுகின்றது. ஒதியமலை, ஊஞ்சல் கட்டி, மருதோடை, பட்டிக்குடியிருப்பு, கீரிசுட்டான், கற்குளம் போன்ற வளம் நிறைந்த கிராமங்கள் சூழ அமைந்துள்ள இக்கிராமத்து மக்கள் 1983 இற்கு பின்னர் இடம்பெயர்ந்து பல இடங்களிலும் வாழ்ந்துவருகின்றனர். அயற்கிராமமான ஒதியமலையில் நடைபெற்ற படுகொலையும் தமிழ் மக்களால் மறக்கமுடியாததொரு சம்பவமாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வவுனியா மாவட்டத்தின் மேல்ப்பற்று கிழக்கு பிரிவில் அமைந்திருந்த இக்கிராமத்தில் 1817 இல் 29 மக்களும், 1839 இல் 43 பேரும் 1881 இல் 10பேரும், 1891இல் 20பேரும் வசித்துள்ளார்கள் என a manual of vanni districts நூல் கூறுகின்றது.

பாகற்காய்குளம் முத்துமாரியம்மன் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். ஆவணி மாத பூரணையுடன் வருகின்ற திங்கட்கிழமை சிறப்பாக பொங்கல் நடைபெறும். இவ்வாலயத்தின் பொங்கல் தினம் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாலயமானது தற்போது தண்டுவான் கிராமத்தில் அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றது. இவ்வாலயம் பாகற்காய்குளத்திலிருந்தபோது அயலூர் மக்கள் ஒவ்வொருவரும் பொங்கல் வேலைகளை ஒவ்வொரு ஊருக்குமாக பிரித்து செய்வார்கள். அறிந்தவரையில் சைவக்குருக்களான நாகலிங்கஜயர் அவர்கள் பூசை செய்தார் அதனைத்தொடர்ந்து அவரது மகன் தில்லையம்பலம் அவர்களும் பூசை செய்து வந்தார், பின்னர் தண்டுவானில் ஆலயத்தை கொண்டுவந்து தில்லையம்பலம் அவர்க்ளின் மகன் கந்தவனம் அவர்கள் பூசை செய்து வந்தார். தற்போது அவரது மகன் யோகநாதன் பூசைகளை மேற்கொண்டு வருகிறார். பாகற்காய்குளத்திலிருந்த பழைமை வாய்ந்த மணி, விக்கிரகங்கள் போன்ற ஆலயப்பொருட்களை இப்போதும் காணமுடிகின்றது. இவ்வாலயப்பொங்கலிற்காக அம்மன் எழுந்தருளி ஊர்சுற்றி வந்து பரிகலம் அழைத்தல், மடப்பண்டம் எடுத்தல், கச்சு நேருதல், வளர்ந்து நேருதல், பரிகலம் வழிவிடல் பொங்கல் என பாகற்காய்குளத்தில் எவ்வாறு பொங்கல்குளிர்ச்சி கொண்டாடப்பட்டதோ அதேபோன்று இப்போதும் கொண்டாடப்பட்டுவருகின்றது.

அழிந்து போகின்ற எல்லைக் கிராமங்களையும், அவற்றின் வரலாறுகளையும் பாதுகாக்கவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# தரம் 5 இன்னொரு அவலம்




அவரவர் சொத்துக்கள் எவ்வாறு அவரவர்க்கு சொந்தமானதோ அவ்வாறே எழுத்துரிமமும் வெளியீட்டு உரிமமும் அவரவர்க்கே சொந்தம். அடுத்தவரின் எழுத்தையோ இன்னொருவரின் வெளியீட்டையோ களவாடுவதும் பிரதிசெய்து விற்பனை செய்வதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

கொழும்பிலுள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்று அலகுசார் வினாக்களை தயாரித்து விற்பனைசெய்து வருகின்றது. அதன் உரிமையாளர் புலமைப் பரிசில் பரீட்சைக்கான ஒரு சிறப்பு செயற்றிட்டமாக நாடளாவிய ரீதியில் பத்திற்கும் மேற்பட்ட அசிரியர்களிடம் வினாத்தாள்களைப்பெற்று அதனை எதிர்பார்க்கை வினாக்களாக தொகுத்து அடக்கமான வகையில் பத்து பரீட்சைத்தாள்களையும் இணைத்து அழகான பை ஒன்றில் இட்டு குறிப்பிட்ட விலையில் விற்பனை செய்துவந்தார். அதன் விளம்பரப்படுத்தலுக்காக அதிகளவு பணத்தினையும் செலவுசெய்திருந்தார்.

பல பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் அதனை வாங்கி தொடர்ச்சியாகச் செய்து தம்மை தயார்ப்படுத்தி வந்தனர். யாழில் உள்ள ஒரு பாடசாலை அதிபர் இதிலிருந்த வினாத்தாளை பிரதி எடுத்து வகுப்பிலுள்ள அத்தனை மாணவர்களுக்கும் விற்பனை செய்து பரீட்சை செய்வித்திருந்தார்.

இவ்விடயம் எப்படியோ அந்த வெளியீட்டு நிறுவனத்திற்கு தெரியவர அதன் உரிமையாளர் கோபத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார். அவசரமாய் அப்பாடசாலை அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கண்டபடி பேசிவிட்டார். அத்துடன் விடவில்லை. அந்த வினாத்தாள்களை வெளியிடுவதற்காக தான் எத்தகைய சிரமங்களை எதிர்கொண்டேன் என்பதையும் அதைப்பற்றிய எந்த எண்ணமும் இல்லாமல் அதனை பிரதி செய்து விற்பனை செய்த ஈனச் செயலைச் சுட்டிக்காட்டியும் பலவாறாக வசைபாடியிருந்தர்.

ஐந்தாம் தர ஆசிரியரே அவ்வாறு செய்தார் எனவும் தான் அப்படி செய்யவில்லை எனவும் அதிபர் விளக்கம் கொடுத்திருந்த போதும் அந்த நிறுவன உரிமையாளர் எதற்குமே சமாதானம் ஆகவில்லை. அதிபரிடம் தெரிவிக்காமலோ அதிபரின் அனுமதியின்றியோ ஆசிரியரால் எதுவும் செய்ய முடியாது என்பது யாவரும் அறிந்த விடயமே.

இப்பிரச்சினையினை தீர்ப்பதற்காக பல வகையிலும் பல்வேறு தரப்பினரிடமும் பேசப்பட்டும் நிறுவன உரிமையாளர் சமாதானம் அடையவில்லை. சமூக வலைத்தளம் போன்றவற்றில் இதனை வெளிப்படத்தி மானபங்கப்படுத்துவேன் என மிரட்டவும் அந்த அதிபரிற்கு என்ன செய்வது எனப்புரியவே இல்லை. அவர் அடைந்த மனஉழைச்சலுக்கு அளவே இல்லை எனலாம்.

இறுதியில் பிரபல புத்தக கடை உரிமையாளர் மூலம் நிறுவன அதிகாரியை கொழும்பிலிருந்து வரவழைத்து மிக உருக்கமான முறையில் மன்னிப்பு கேட்ட பின்பே அவர் சமாதானமானார். இவ்விடயம் இவ்வாறு பிரதி செய்வது எத்தகைய சிக்கல்களை உண்டுபண்ணும் என்பதை புரியவைத்திருக்கும் என எண்ணுகின்றோம். இதே முறையை பல அதிபர்கள் பின்பற்றி வருகின்றனர். இவ்வாறான செயல்களை செய்யும் அதிபர் ஆசிரியர்கள் இச்செயலை தவிர்த்து மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவித்து விரும்பினால் அத்தனை பேருக்கும் கட்டணம் செலுத்தி பெற்று செய்யவைப்பதே சிறந்த செயலாகும்.

ஜனரஞ்சகன் - கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் ஒரு பேரீச்சம்பழம்!





உலகின் பழமையான நாகரிகமான மொசபதேமியாவில்தான் முதன் முதலாகப் பேரீச்சம்பழத்தின் பயன் பற்றி கூறப்பட்டுள்ளது.

எகிப்திய பிரமிட்டுக்களிலும், கிரேக்க, ரோமானிய, பாலஸ்தீனிய வரலாற்றுக் குறிப்புகளிலும் இடம் பெற்றுள்ள பேரீச்சம்பழம் கடந்த 300 ஆண்டுகளாக உலகெங்கிலும் சத்துணவுப்பழமாக உலக மக்களால் உண்ணப்பட்டு வருகின்றது.

இரத்த விருத்திக்கான இயற்கை மருந்து பேரீச்சை. பேரீச்சையில் இரும்புச்சத்து மட்டுமல்ல, விற்றமின் ஏ, சுண்ணாம்புச் சத்தும் நிறைந்துள்ளது.

தசை வளர்ச்சியை அதிகரித்து, உடல் வலிமையைப் பெருக்கும் இந்தப் பழம், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கண்டிப்பாக சாப்பிட வேண்டிய அருமையான பழம்.

தினமும் ஒரு பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால் இதயம் வலுப்பெறும்.

தினமும் இரண்டு பேரீச்சம்பழத்துடன் ஒரு டம்ளர் பால் சாப்பிட்டு வந்தால் இரத்தம் விருத்தியடையும்.

இனிப்பு உணவுகளைத் தவிர்த்துத் தவிக்கும் சர்க்கரை நோயாளிகள் கூட தாராளமாக பேரீச்சம் பழம் சாப்பிடலாம். பேரீச்சம் பழத்தில் உள்ள இனிப்பால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.



ஒரு டம்ளர் பேரீச்சம் பழத்தை அரைத்துக் கலந்து சாப்பிட்டு வர எலும்பு வலுப்பெறுவதுடன், உடல் வலிமையும் கூடும்.

எங்கேனும் அடிபட்டதால் அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டவர்கள் தினமும் பேரீச்சம்பழம் சாப்பிட்டு வந்தால், இரத்த இழப்பை விரைவில் ஈடுகட்டலாம்.

வெண்குஷ்டம் இருப்பவர்கள் பேரீச்சம்பழ சாறு குடிக்கலாம். இது இரத்தத்தில் சிவப்பணுக்களை அதிகரிக்கச் செய்து, நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும்.

தினசரி இரவில் 3 பேரீச்சம் பழம் சாப்பிட்டு சுடுதண்ணீர் அருந்தினால் மலச்சிக்கலைத் தரும் மந்தமான மலக்குடல் சுறுசுறுப்பாகி மலம் சுலபமாக வெளியேறும்.

பேரீச்சம் பழத்தை பிற பழங்களுடன் கலந்து சாலட் ஆக செய்து சாப்பிட வாதம், பித்தம், முட்டி வீக்கம் குணமாகும்.

பேரீச்சம் கொட்டையை வறுத்து பொடி செய்து, காபி போல் பால் சர்க்கரை கலந்து பருகலாம். உடலுக்கு உரமளிக்கும் இதனை வாரம் ஓரிரு நாள் பருகுவது நல்லது.


பல் முளைக்கும் குழந்தைகள் வயிற்றுக் கடுப்பால் அவதியுறும்போது பேரீச்சம்பழத்தைச் சுடுநீரில் கலந்து குழைய வேக வைத்து வேளை ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் 3 வேளை பருக பேதி நிற்கும்.

தினசரி 4 பேரிச்சம்பழம் சாப்பிட்டு வந்தாள் வயிற்றுக்கடுப்பு, அஜீரணபேதி, மலச்சிக்கல், அமிபியாசிஸ் போன்ற வயிற்றுக் கோளாறுகள் வருவதில்லை. குறிப்பாக குடலுக்குப் பாதுகாப்பு கவசமாக பேரீச்சம்பழம் விளங்குகிறது.

நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் பிரேம் ராஜ்

# கிருஷ்ணன் தூதுச் சுருக்கம்


முத்து ஊர் வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்து உழவர் முன்றில் தோறும்
நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு
நாடு ஒன்றும் நல்கான் ஆகில்
ஐந்து ஊர் வேண்டு அவை இல் எனில் ஐந்து இலம் வேண்டு
அவை மறுத்தால் சுடு போர் வேண்டு
சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்
பருப்பு ஒசித்த செங்கண் மாலே

துரியோதனனிடம் தூது செல்ல கண்ணன் அனுப்பும் போது தருமன் சொல்வது - மேலே உள்ள செய்யுள் - அதுவே கொஞ்சம் எனில் நடையில்,

துரியனிடம் - ஒரு
துளியும் தகரறின்றி
தயவால் வாங்க வேண்டினான்
தனக்குரிய தரையை
கண்ணபிரானே!
கரிய மாலே!
நிலம் வந்து நடக்கும்
நான் மறை நூலே
தூது சென்று நீ
தவிர்த்திடல் வேண்டும் போரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குலத்தை வேரறுத்து - வெறும்
நிலத்தை வைத்துக் கொண்டு
நானென்ன
நாக்கா வழிப்பது? அது
நாணங் கெட்டசெயல்
நல்லோர் பழிப்பது!
மண்ணை
முன்னிட்டு
அண்ணன் தம்பிகள்
அடித்துக் கொண்டால்
மண்னே
மண்ணை வாரி இறைக்கும்
மண்ணையும்
மண்ணாளவொரு
மன்னனையும் - மெனக்கெட்டு
ஏனடா படைத்தோம்- எனும்
எண்ணம் வரும் இறைக்கும்!
துரியன் முதலானோர் - நம்
தமர்
தமருக்குளு' எதற்கு - வீண்
சமர் ?
சமாதானத்தையே - என்
சிந்தை விரும்புகிறது
நீ சொன்னால் - அது
நிகழும் என்று - ஒரு
நப்பாசை - என்
நெஞ்சுள் அரும்புகிறது!
ஆதலால் - என்
அய்யனே! வேய்ங்
குழலேந்தும்
கையேனே!
நாலு வார்த்தை
நல்ல தனமாகச் சொல்லி ....
பாம்புக் கொடினடிடம் - என்
பாகத்தைத் தரச்சொல்
இந்திரம் பிரஸ்தத்தை
ஈவதற்கு மறுத்தானாகில்
அஞ்சு பேருக்கும்
அஞ்சு ஊர்களைக் கேள்
அதையும் வீடுகளைக் கேள்
அதையும் மறுத்தானாகில்
அவனல்ல நமக்குக் கேள்

அமர் புரிய நாம் தயார்
அவன் தயாரா எனக் கேள்
என்றான் தருமன் கண்ணனிடம்

**மீண்டும்**
**செய்யுளுக்கு வருவோம்**

முந்திக் கொண்டு மிக விரைவாக செல்லும் பாம்பை தன் கொடியில் கொண்ட துரியோதனன், அஸ்தினாபுரத்திற்குச் சென்று, விவசாயம் பண்ணும் உழவர்களின் வீடுகளுக்கு முன்னால் ஊர்ந்து செல்லும் சங்குகளையும்,

தண்ணீர் வளம் மிகுதியாகக் கொண்டது மான குரு நாட்டின் எமக்கான பாகத்தைக் கேள்.துரியோதனன் அதைத் தர மறுத்தால் ஐந்து ஊர்களைக் கேள். முடியவில்லையா? ஐந்து வீடுகளையாவது தரச்சொல். அதுவும் முடியாவிட்டால் உயிர்கள் எல்லாம் மாண்டு போகும். போரைக் கேள். சிறிது தூரம் என்ற சிவந்த நிறம் பொடியால் உன் நெற்றியில் திலக மிட்டுக்கொண்டவனே, சிந்தூர யானையின் பலமான கொம்புகளை ஒடித்து செந்நிற கண்களைக் கொண்ட திருமாலே இதை உன்னால் மட்டுமே நிறைவேற்ற முடியும் - என்றான் தருமன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசியின் உதவிக்கரம் :-



### கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்




இம்மாத உதவியானது அச்சுவேலி தெற்கை சேர்ந்த அமரர் சின்னர் குணரத்தினம் அவர்களின் நினைவாக அவரது மகனான குணரத்தினம் ஜெகரூபன் என்பவரால் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் உயர்தர பாடசாலையின் தரம் 5 மாணவனான நகுலராசா அன்று ஜோய்ஸ் என்பவருக்கு வழங்கப்படுகின்றது. இவ்வாறு தமது உறவுகளின் நினைவாக வழங்கப்படும் கல்வி ஊக்குவிப்பு உதவியானது சிறந்த கல்விச்சமூகத்தை உருவாக்க உதவ வேண்டும் என்பதே இவர்களின் விருப்பமாகும். இத்தகையதோர் எண்ணங்கொண்ட ஜெகரூபனை எமது சஞ்சிகையின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களே, நீங்களும் இவர்களைப் போன்றவர்களுக்கு உதவ விரும்பினால் அல்லது உதவி தேவைப்பட்டால் எமது ஆசிரிய பீட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு :**

E-mail : oliarazi33@gmail.com, **0114320695 - 0714 273035**







ஒளி அரசியின் மாதாந்த புலமைப்பரிசில் திருத்தற்செயற்றிட்டத்துடன் இணைந்து உயர் புள்ளிகளைப்பெற்ற வடமராட்சி பிரதேச மாணவர்களுக்கான கருத்தரங்கு சென்ற மாதம் நெல்லியடி மெதடிஸ்ற்மிஷன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இடம் பெற்றது. ஒளிஅரசியின் நிர்வாக இயக்குனரும் பிரதம ஆசிரியருமான திருமதி யசோதை சர்வணபவன் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். அன்றைய வளவாளராக புலமைச்சுடர் பிரதம ஆசிரியர் திரு. திலீப்குமார் அவர்கள் கலந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளநலம் காப்போம்

தனக்கென்று சிந்திக்காமல் பொதுநலம், எதிர்காலச்சந்ததிகளின் முன்னேற்றம் என ஆர்வம்கொண்டு நிற்பதுமட்டுமல்ல அதைச் செயலாற்றியும் வருகின்றார் குமாரு யோகேஸ். தான்வாழும்போது தன் இனத்துக்கு நல்லதை செய்ய எண்ணும் மனிதர்கள் மிகக்குறைவு. எல்லாவற்றிலும் அவர் கொண்டுள்ள மனித நேய சிந்தனை என்பது பாராட்டிற்குரியதாகும்,

இவரது பெற்றோர் குமாரு யோகம்மா. மனைவி புனிதா. செழியன், மகிழினி என இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இவர் கடந்த யுத்தத்தில் தந்தை தாய் மற்றும் தனது ஒரு சகோதரர் ஆகியோரை இழந்தவர். இழப்பை அதிகமாக உணர்ந்ததனாலோ என்னவோ மன உழைச்சலை நீக்கும் ஆற்றுப்படுத்தல் மூலம் பலரது வாழ்வில் ஒளி யேற்றி வருபவர்.


இக்கலையை உண்மையாக பயன்படுத்தும் போது மனதில் ஒருவித புத்துணர்ச்சி தோன்றுவதாகவும் அதன்மூலம் மற்றவர்களின் மனதில் அமைதியை ஏற்படுத்துவதையும் இலகுவாக செய்யமுடியும். உதாரண மாக, கடந்த காலத்தில் ஏற்பட்ட பாரிய இழப்பு களை முழுமையாக மறந்துவிடமுடியாது, ஆனால் துக்கத்தை குறைத்துக் கொள்ளமுடியும் என்கின்றார். ஒரு ஆற்றுகையாளனாய் அவர் வழங்கியகருத்து கள் எம் வாசகர்களுக் காக.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**துக்கத்தை குறைப்பது எப்படி?**

மனிதர்களாகிய நாம் பலவித உணர்வுகளுடன் கூடியவர்கள். ஒரு உயிரிழப்பு ஏற்படும் போது அந்த துக்கமானது மனதை அரித்துக்கொண்டே இருக்கிறது, அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றோம். அதனை மறக்காமல் தொடர்ச்சியாக அழுதுகொண்டே இருப்பதால் உடல் சக்தியானது கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைகின்றது. இதனால் மனஅழுத்தம் அதிகரிக்கின்றது. உயிர் போகும் அபாயம் கூட ஏற்படலாம். இவ்வேளையில் எம்மைப்பற்றியும் எமது சிந்தனை பற்றியும் அறிந்துகொள்ளும் தியானப்பயிற்சிகளே எமக்குத் தேவை. அதனையே நானும் செய்து வருகின்றேன். நாம் அறியாத பல தேவையற்ற சிந்தனைகள் எமக்குள் இருக்கின்றன.



நாம் தியானம் செய்யும் போது எம்மை நாம் கோபப்படுத்தாமல் ஒவ்வொன்றாக அறிய வேண்டும். தண்ணீர் போத்தலினுள் போட்ட கல் எப்படி அதன் அடியில் மெல்ல விழுகின்றதோ அது போல தேவையான சிந்தனைகளை மனதின் ஆழத்தில் பதிக்கவேண்டும். துக்கம், எரிச்சல், கோபம், பொறாமை, அகங்காரம், களவு போன்ற தேவையற்ற எண்ணங்கள் எம் மனதில் இருக்கும் போது எமது செயல்களும் அவ்வாறே அமைந்துவிடுகிறது. அமைதியாக அமர்ந்திருந்து நாம் வெளிவிடுகின்ற மூச்சோடு தேவையற்ற சிந்தனைகளையும் மெதுவாக அகற்றி விட வேண்டும். தன்னைத்தானே நல்ல மாற்றத்திற்கு உள்ளாக்கும் போது ஒரு மனிதன் பிரச்சினை அற்றவனாக வாழமுடியும்.

இந்த மூச்சுகூட எமக்கு மிகப்பிரதானமானது. கோபம் வரும்வேளைகளில் மூச்சை சரியாக விடாமல் கட்டுப்படுத்தும் போது உச்ச கோபத்திற்கு ஆளாகி சுயநினைவில் இருந்துவிடுபட்டு மற்றவர்களை தாக்கிவிடுகின்றோம். பின்பு மெதுவாக மூச்சுவிடுகின்ற போது அதனை நினைத்து கவலைப்படுகின்றோம். மூச்சுப்பயிற்சியை சரியான முறையில் பின்பற்றும் போது இந்நிலையில் இருந்து விடுபடமுடியும். இவ்வாறான விடயங்களை உணர்ந்து நாமே எமக்குள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

**நீங்கள் எத்தகைய பிரச்சினைகளை கையாள்கின்றீர்கள்?**

ஒரு கலைஞராக உள்ள நான் கற்ற கலையின் மூலம் குடிப்பிரச்சினை, சிறுவர் துஸ்பிரயோகம் குடும்பங்களுக்கிடையிலான வன்முறைகளால் மன அழுத்தத்திற்கு ஆளானவர்கள் என அனைவருக்குமான ஆற்றுப்படுத்தல்களையும் செயன்முறை ஊடான பயிற்சிகளையும் வழங்கிவருகின்றேன். இது தவிர விவாத அரங்கம் என்ற நாடகத்தின் மூலம் மாணவர்களுக்கிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் வருகின்றேன்.

**இக்கற்கை நெறியை தொடர விரும்புபவர்களுக்கு பூரணமான விளக்கத்தினை தரமுடியுமா?**

நிச்சயமாக. நான் இந்த பயிற்சி வகுப்பினை கொழும்பில் இருக்கின்ற பிரபலமான அக்கடமிகளில் ஒன்றான அபினா அக்கடமியில்தான் கற்றேன். ஆரம்ப வகுப்புகள் தொடர்ச்சியாக ஆறுமாதங்கள் நடைபெற்றன. அதன் பின் மேலதிக பாடங்களை ஒரு வருடம் கற்றேன். அபினா அக்கடமியின் நிறைவேற்றுப் பணிப்பாளர், (இலங்கையில் நடித்த) நடிகர் அனோஜா வீரசிங்கம், வளவாளர் பிரதீபன் ஆகியோருடன் இணைந்து இலங்கையில் பல பகுதிகளிலுமுள்ள ஆசிரியர்களை இணைத்து ஏழு நாள் பயிற்சிகளை வழங்கியுள்ளோம். இப்பயிற்சியை தற்போது யாராவது பெறவிரும்பினால் எமது அக்கடமியோடு இணைத்து முழுமையான பயிற்சியாக வழங்கமுடியும் என்பதை தெரிவிக்கின்றோம்.

**உங்கள் பணியில் ஏற்பட்ட சவால்கள், பெருமையடைந்த சந்தர்ப்பங்கள் பற்றி?**

உண்மையில் இந்த துறையை முன்னெடுக்கும் போது அனேக பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியே உள்ளது. இருப்பினும் அனேக சந்தர்ப்பங்களில் பெருமையும் அடைந்துள்ளோம். உதாரணமாக, குடிக்கு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடிமையானவர்களை உடனடியாக மாற்றி விடமுடியாது. நாம் பலரை அவ்வாறு மதுபோதையிலிருந்து முழுமையாக மீட்டுள்ளோம். மன அழுத்தத்தில் இருந்து விடுபடமுடியாமல் தவித்தவர்களை குணப்படுத்தியுள்ளோம். வன்முறைகளில் ஈடுபட்டவர்களை ஆற்றுப்படுத்தியுள்ளோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் எமக்குள்ளேயே நாம் பெருமையடைந்துள்ளோம். மிக முக்கிய விடயம் என்னவென்றால் பிறப்பு, வளர்ப்பில் உள்ள குணங்களை நாம் ஒருபோதும் முழுமையாக குணப்படுத்த முடியாது என்பதே யதார்த்தம். மாறுவது போல தோன்றினாலும் பின்னர் ஏமாற்றமே ஏற்படும். இவ்வாறானவர்களுக்காக எமது சக்தியை வீணாக்காது மாறக்கூடியவர்களை இனங்கண்டு செயற்படவேண்டும். எமது கிராமத்திலும் சரி வேறு இடங்களுக்குச் செல்லும்போதும் சரி சிலர் இவ்வகையான ஆலோசனைகளை கேட்பார்கள், நான் தீர்வினை கூறும்போது அவர்களின் முகங்களில் தோன்றும் புன்னகை எனக்குப் பெருமையளிக்கும்.

**உங்கள் வெளியீடுகள் பற்றி?**

எமது முல்லை மாவட்ட கலைஞர்களை ஒன்றிணைத்து எமது முல்லை ஸ்வரங்கள் என்ற இசைக்குழுவை உருவாக்கியுள்ளேன். அதனூடாக பல வெளியீடுகளையும் செய்துள்ளோம். ஆழிப் பேரலையில் உயிர் நீத்தவர்களின் நினைவாக 'ஆழியோடு உறவாடலாம்' என்ற ஒலிப்பேழையையும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு 'சங்கரனை நினை மனமே' என்ற ஒலிப்பேழையையும் வவுனியா வேப்பங்குள ஸ்ரீல ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமிகள் நினைவாக 'கருணை பொழிவாள் காளிஅம்பாள்' என்ற ஒலிப்பேழையையும் வெளியிட்டுள்ளோம். எதிர்காலத்தில் குறும்படங்களை வெளியிட உள்ளோம். அத்தோடு எமது முல்லைஸ்வரம் இசைக்குழுவை மேலும் வளர்ச்சி பெறச்செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படும் எனது அன்பு உறவுகளான அவைத்தென்றல் வல்லிபுரம் திலகேஸ்வரன், வசந்தன் அண்ணா, தம்பி ஆனந், முல்லை ஜெயந்தன், செல்வா அண்ணா ஆகியோரை என்றும் மறவேன், மற்றும் எனக்கு ஊக்கத்தினை தந்து முல்லைஸ்வரம் இசைக்குழுவை முல்லை மாவட்டத்தில் வளர்ச்சி பெறச் செய்யும் அனைத்து அன்பு உறவுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்



**மாணவர்கள் மத்தியில் எவ்வகை மாற்றங்களை ஏற்படுத்தமுடியும்?**

மாணவர்களே நாளைய உலகை ஆழப்போகின்றவர்கள். சிறு வயதில் எதனைக் கற்பிக்கின்றேமோ அதனையே பின்பற்றமுனைவர். எதிர்மறையான கருத்துக்கள் அவர்களிடம் எதிர்மறை எண்ணங்களையே தோற்றுவிக்கும். சில பெற்றோர்களின் செயற்பாடுகளும் பிள்ளைகள் மனதில் இத்தகைய சிந்தனைகளை விதைக்கின்றது. பிள்ளைகள் முன் சண்டையிடுதல், தகாத வார்த்தைகளை பிரயோகித்தல், எதிர்வினை கருத்துக்களை




கூறுதல் என்பன மிக முக்கியமானவை. இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிள்ளைகள் எதிர்காலத்தில் உளப்பாதிப்புடையவர்களாகவே மாறுகின்றனர். இவ்விடயத்தில் பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் அனைவரும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். இவ்வாறான பாதிப்புகளை பிள்ளைகளுக்கு வழங்காதிருப்பதே உண்மையான ஒளியூட்டல் ஆகும். இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதும் ஒளிமயமான வருங்காலத்திற்கு தயார்ப்படுத்துவதுமே எமது பணியாகும். இதனை ஒருசிலர் மட்டும் உணர்வதால் பெரிதான மாற்றம் ஏற்படப்போவதில்லை. அனைவரும் உணரும் போது நாட்டில் பெரியதொரு சமூகமாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.

**இன்றைய காலத்திற்கு தேவையான பல கருத்துக்களை எம்மோடு பகிர்ந்துகொண்ட யோகேஸிற்கு நன்றிகளைத் தெரிவித்து அவரது முயற்சிகள் மேலும் வலுப்பெற வாழ்த்தி அவர் ஒளிஅரசிக்கு கூறிய நன்றிகளையும் ஏற்றுக்கொண்டு விடைபெற்றோம்.**

நேர்காணல் கோபிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தம்மண்ண செட்டியார்


பாகம் 4



# சாதனை செய்பவர்கள் அனுசரிக்கவேண்டிய விதிமுறைகள்

மற்றவர்களுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறவர்கள் முதலில் தங்களுக்கு ஆரோக்கியத்தைத் தேடுவது மிக அவசிய மாகும். தான் ஆரோக்கியமாக இருந்தால் தானே மற்றவர்களுக்கு அதைப் பற்றிச் சொல்லமுடியும்.

ஆதலால் சாதனை செய்ய விரும்பு பவர்கள் ஆகாரநியமம், சரியான தூக்கம், ஒழுக்கம், மன உறுதி, சுத்தமான மனம், எல்



லோரும் நன்றாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் என்பன உடையவர்களாக இருக்க வேண்டும். உடல், மனம் இவற்றுக்கு ஆரோக்கியத்தையும், பலத்தையும் கொடுக் கக்கூடிய ஆகாரம், பானங்கள் மட்டுமே சாப்பிடவேண்டும்.

மது வகைகள், பீடி, சிகரெட், புகை யிலை உபயோகிப்பதை அடியோடு விட்டுவிடவேண்டும். காய்கறி வகை, சைவ உணவுகளையே சாப்பிடவேண்டும்.

கோப தாபங்களை விட்டுவிட்டு எப் போதும் அமைதியுடனும், சிரித்த முகத்துட னும் இருக்கப் பழகவேண்டும்.

சாப்பிடும்போது மனதை அங்கும் இங் கும் அலையவிடாமல், 'சாப்பிடுகிறோம்' என்ற உணர்வுடன் சாப்பிடவேண்டும். இத னால் சாப்பிட்ட உணவு எளிதில் ஜீரணமாகி விடும்.

எந்தப் பானம் பருகினாலும் அதை மடமடவென்று ஒரே மிடரா கக் குடிக்காமல் கொஞ்சம் கொஞ்ச மாக சுவைத்துக் குடிக்க வேண்டும். எதையும் சுவைத்துச் சாப்பிடுவதால் அதில் உமிழ்நீர் கலந்து சென்று சாப்பிட்டது நன்கு ஜீரணமாக உதவி செய்கிறது.


பாலை மடமடவென்று குடித் தால் அது உள்ளே சென்று புளிப்ப டைந்து திரிந்துவிடுகிறது.

அதனால் அது விரைவில் ஜீரணம் ஆகாது. தண்ணீர் குடிக்கும் போதும் மெது வாக சுவைத்துக் குடிக்கவேண்டும்.

அதேபோல ஆகாரம் சாப்பிடும்போது பதார்த்தங்களை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். அவசரம் அவசரமாக அள்ளி உணவை வயிற்றில் தள்ளிவிடுவதால் அஜீரணம், மலச்சிக்கல் போன்றவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏற்படுகின்றன. நன்றாக மென்று சாப்பிடும்போது உமிழ்நீர் கலந்து ஜீரண சக்தியைத் தூண்ட உதவி செய்கிறது.

உணவை அளவுடன் சாப்பிடவேண்டும். ருசியாக இருக்கிறது என்று எதையும் அளவுக்கு அதிகம் சாப்பிடக்கூடாது. இத் தகைய விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வந்தால் நோய்கள் வருவது மிகக் குறைவாகவே இருக்கும்.

உணவில் அதிகபட்சம் காய்கறிகளை சேர்த்துக்கொள்ளுங்கள். பச்சைக் காய் கறிகளை சாலட் (Salad) ஆக செய்து சாப்பிடுவது மிகவும் சிறந்தது. தக்காளி, வெங்காயம், கேரட், பீட்ரூட், முள்ளங்கி, வெள்ளரிக்காய், கோஸ், இளம் வெண் டைக்காய் போன்றவைகளை சாலடாக செய்து அதனுடன் இஞ்சி, பச்சை கொத்த மல்லி சேர்த்துச் சாப்பிடலாம். கொஞ்சம் எலுமிச்சைச் சாறு பிழிந்து குறைவாக அரை உப்பு, மிளகு போட்டு சாப்பிடுவது மிகச் சிறந்தது.

தேவையில்லாத விடயங்களைப் பேசுவ தையும், பலருடன் விவாதிப்பதையும் தவிர்க் கவேண்டும்.

கூடியவரை அமைதியாக உட்கார்ந்து செயற்படுங்கள். எதையும் நிதானமாகவும்,





பொறுமையுடனும் செய்துவந்தால் தவறு ஏற்படாது.

தினசரி காலையில் எழுந்ததும் எந்தச் சிந் தனையும் இல்லாமல் பத்து நிமிடம் முதல் பதினைந்து நிமிடம் வரையிலும் அமைதி யுடன் உட்கார்ந்து வரவும். இதனால் உடலில் காந்தசக்தி விரயமாகாமல் சேமிப்பில் சேருகிறது.


தினசரி குளிர்ந்த தண்ணீரில் குளிப்பது மிகவும் சிறந்ததாகும். எளிமையான - வெண் மையான ஆடைகளை அணியுங்கள்.

மனதில் எவரைப் பற்றியும் குறைவா கவோ, உயர்வாகவோ மதிப்பிட்டு விடா தீர்கள். மனதால் கூட எவருக்கும் தீங்கு எண்ணக்கூடாது. மனதில் வேண்டாத கற்பனைகள் செய்வது, பிறரை எண்ணி ஏங்குவது போன்றவைகளால் உங்கள் சக்தி அதிகம் விரயமாகிறது. ஒருவரிடம் பேசும்போது படபடவென்று நீங்கள் முத லில் பேசிவிடாதீர்கள். முதலில் அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கேளுங்கள். அதன் பிறகே நீங்கள் பேசவேண்டும்.

எவருடன் பேசினாலும் பேசும்போது அவரது முகத்தை - கண்களைப் பார்த்துப் பேசுங்கள். தலைகுனிந்து கொண்டோ, வேறு எங்கேயோ பார்த்தபடி பேசாதீர்கள். இதனால் உங்களை அவர்கள் தவறாகப் புரிந்துகொள்வார்கள். நாம் பேசுவதைவிட மனதில் எண்ணும்போது சக்திகள் அதிகமா கக் செலவாகின்றன என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேசும் பட கவிதைகள்

என் முகத்தில்
எதைக்
காண்கிறாய்...
தாய் மொழி தமிழ்

என்றா....
இல்லை சிங்கள தேசத்தில்
ஓர் தமிழிச்சி என்றா.....
பரந்த பெரும் தேசத்தின்
செல்ல பிள்ளை.. நான் இன்று...
முட் கம்பிக்குள் சிதறிப்போய்...
பழைய நினைவுகளின்
பெட்டகமாய் நிற்கின்றேன்....

ம.துவாரகன்

வண்ணக் கோலமிடவே இவள்
வையகத்தில் வைகறையென வந்தாள்...
கையெழுத்திடும் அறிவை அஞ்ஞானம் சூழ
கைக் கம்பி வேலிக்குள் கைதியென....


எதிர்காலம் என்னென்றே புரியாத
சிறகொடிந்த பறவையென...
சிந்தனைகளை சில்லறையாய் சிதறவிட்டே,
சீறி ஓடாத மனித நதியாய் இவள்....

கோவை திரு

## அழகு நிலா

ஓராயிரம் கனவுகளை
சுமந்தபடி இவள்
இருவரிச் சிறைக்குள்
ஒளிந்து கொண்டு
எதிர்காலக் கண்ணாடியில்
என்னாகுமென்ற ஏக்கத்தோடு
இருவிழிப் பார்வை எங்கோ
தனியாய்த் தவிக்க
அழகு நிலா ஒன்று
ஐயம் கொள்கிறது இன்று!!!

அனுப்பிரியா.



ஏதிலி வாழ்வு
என்றுமுடியுமோ
என்ற அச்சத்தின்
ஏக்கத்தில் இவள்.

கோபிகை

## கைக்கூ கவிதைகள்



## அம்மா

தூளியில் குழந்தை
ஆடிக்கொண்டிருக்கிறது
தாய்மனசு.!

அடிக்கிறாள் அம்மா
அழுகிறது குழந்தை
அணைக்கச்சொல்லி.!

அனாதையாய் நினைத்தவளை
அம்மா என்றழைக்கிறது
ஒரு அனாதைக் குழந்தை.!

அம்மாவோடு சண்டை
பலமாக அடித்து விட்டாள்
அன்பால்.!

அம்மாவுக்கு நிலவைக் காட்டி
சோறு கேட்டமுகிறது
குழந்தை.!

யாழ் சபேசன், நெடுந்தீவு13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவோம் ஆயிரம்**

# வாழை அடி வாழை



வாழையடி வாழையாக நம் குலம் தலைத்து வாழவேண்டும் என்றால் நோய் நொடி இல்லாமல் வாழ்ந்தால் தான் முடியும். அதற்கு, நம் முன்னோர் சாப்பிட்டு வந்த இயற்கையான உணவு முறைகளை பின்பற்றுவதை தவிர, சிறந்த வழி வேறு இல்லை. நம் உணவுப் பொருட்களில், வாழையில் இருந்து கிடைக்கும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல மருத்துவ குணம் கொண்டவை. வாழைப் பூ முதல் தண்டு வரை உணவுக்கு சிறந்ததாகும். அதில், பல நோய்களை போக்கும் மருத்துவக் குணங்கள் உள்ளன.

வாழை இலையில் சாப்பிடுவதால், இளநரை வராமல், நீண்ட நாட்களுக்கு முடி கறுப்பாக இருக்கும். தீக்காயம் ஏற்பட்டவர்கள் வாழை இலை மீது தான் படுக்க வைக்க வேண்டும், அப்பொழுது தான் சூட்டின் தாக்கம் குறையும். காயம், தோல் புண்களுக்கு தேங்காய் எண்ணெய்யை துணியில் நனைத்து புண்மேல் தடவி, வாழை இலையை மேலே கட்டு மாதிரி கட்டி வந்தால், புண் குணமாகும். சின்னம்மை, படுக்கைப் புண்ணுக்கு வாழை இலையில் தேன் தடவி தினமும் சில மணி நேரம் படுக்க வைத்தால் விரைவில் குணமாகும்.

சோரியாசிஸ், தோல் ஒவ்வாமை, கொப்பளங்கள் பாதிக்கப்பட்ட இடத்தில், வாழை இலையை கட்டி வைக்க வேண்டும். தலை வாழை இலை என்றதும் அனைவருக்கும் ஞாபகம் வருவது விருந்து தான். அது, சைவ உணவாக இருந்தாலும், அசைவ உணவாக இருந்தாலும், இலையில் தான் நிச்சயம் சாப்பாடு இருக்கும். இன்றைய வேகமான முன்னேற்றத்தில் வாழையின் மகத்துவம் புரியாமல் போய் விட்டது. நகர்ப் புறங்களில், தட்டு அல்லது பொலீத்தின் பேப்பரில் தான் சாப்பாடு சுற்றி தரப்படுகிறது. இது நோய் மாற்றத்துக்கான அறிகுறியாக இருக்கிறது.

நவீனத்தால் ஏற்பட்ட மாற்றத்தால், நகர்புறத்தில் இருப்பவர்கள் சாப்பிட்டுத் தான் கொண்டிருக்கின்றனர். ஆனால், நம்மில் பலர் தனது சொந்தக் கிராமத்திற்கு விடுமுறை நாட்களில் செல்லும் போது தட்டிலேயே வாடிக்கையாக உணவு அருந்துகின்றனர் அதை மாற்ற முயற்சிக்கலாம். இலையில் சாப்பிடும் போது ஏற்படும் நன்மைகளை அறியும் போது, நம் முன்னோர்கள் ஏன் இலையில் சாப்பிட்டார்கள் என நமக்கு தெரியவரும்.


வாழைப்பூ, வாழைத் தண்டு மருத்துவத்துக்கு பயன்படுகிறது என்பது எல்லோரும் அறிந்ததே. வாழையின் வேர் கூட, சித்த மருத்துவத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. நம் முன்னோர்களின் வாழ்க்கை முறையில் எத்தனை சிறப்பு அம்சங்கள், அவர்கள் வகுத்துள்ள முறைப்படி, நாம் உணவு உண்டு வேலை செய்தாலே, நிச்சயம் நோயின்றி வாழலாம் அதற்கு வாழை இலையில் சாப்பிடுவதும் ஓர் உதாரணம்.

திருமணத்தின் போது கூட, வாழையடி வாழையாக குடும்பம் தழைக்க வேண்டும் என்பதன் மகத்துவம், இது தான். இப்போது வாழை இலை போன்று பிளாஸ்ரிக் இலை வந்து விட்டது. ஒரு பொருள் கொண்ட தோற்றத்தில் செயற்கை பொருள் இருந்து விட்டால், இயற்கையை ஒரு போதும் மிஞ்ச முடியாது என்பதற்கு சாட்சி, வாழை.

நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அறிவோம் ஆயிரம்



# சுரங்கப்பாதைகளும் வேற்றுக்கிரகவாசிகளும்

**பல மர்மமான நிலக்கீழ் நகரங்களையும் அவை ஏன் வேற்றுக்கிரக வாசிகளுடன் தொடர்புபடுத்தப்படக்கூடியன என்பவற்றையும் பார்ப்போம்.**

**கனடா**

நகானி வேலே (Nahanni Valley) எனும் பகுதி கனடாவின் மக்கன்சி (Mackenzie) மலைத்தொடரில் அமைந்துள்ளது. அப்பகுதியில் மலைக்கு கீழ் துவாரங்கள்/சுரங்கப்பாதைகள் இருப்பதாக கனேடிய கிராமக்கதைகளில் இருந்து அறியப்படுகிறது.

அடர்ந்த காட்டுப்பகுதியாக இருக்கும் அப்பகுதியில் நுழையும் மனிதர்கள் தலை துண்டிக்கப்பட்ட சடலங்கலாக மீட்கப்படுகிறார்கள். இப்பகுதியில் மர்ம நடமாட்டம் இருப்பதாக அப்பகுதியை ஆராய முட்பட்டோர் குறிப்பிடுகிறார்கள். இவ் ஆராய்வுகள் அனைத்தும் மேலோட்டமானவையாகவே அமைந்துள்ளன. காட்டுப்பகுதிக்குள் முழுமையாக ஆராய அனுமதி கொடுக்கப்படுவதில்லை.


இந்தப்பகுதியில் இருக்கும் முக்கிய மர்மம் என்னவென்றால், இப்பகுதியில் வேறு பல விலங்குகள் இருக்கின்றன. ஆனால், மனிதர்கள் உள் நுழையும் போதே, தலை துண்டித்த சடலங்களாக மீட்கப்படுகிறார்கள்.

வேறு விலங்குகளின் சடலங்கள் மீட்கப்பட்டதில்லை. கொடிய விலங்குகள் தாக்கி இருக்கலாம் என கருதினால், ஏன் அந்த விலங்குகள் தலையை துண்டித்துவிட்டு உடலை உண்ணாமல் விடவேண்டும் என்ற கேள்வி தங்கி நிற்கும்.

ஒரு வேளை பழங்குடி மக்களாகவோ வேற்றுக்கிரகவாசிகள்(?) ஆகவோ இருக்கலாம். கனடா ரொறன்டோ பகுதியில் இருக்கும் கைவிடப்பட்ட நிலக்கீழ் பகுதியொன்றின் மேற்புறத்தில் அதிக காந்தப்புல விசை இருப்பது உணரப்பட்டுள்ளது. அதற்கான விளக்கம் இதுவரை அரசால் கொடுக்கப்பட்டதில்லை.

Gerrard Church வீதிப்பகுதியில் அதிகளவான வாகன விபத்துக்கள் நடைபெறுகின்றன. நிலத்திற்கு கீழ் அதிகளவான காந்த விசை பயன்படுவது காரணமாக இருக்கலாம் என மர்ம பொருட்களை ஆராய்வோர் கூறுகின்றனர்.

**எகிப்து**




எகிப்தில் Cairo வை அண்டிய பகுதியில் 1987 ஆம் ஆண்டளவில் இரு ஆய்வாலர்கள் இரு நீண்ட சுரங்கப்பாதை இருப்பதை கண்டறிந்து ஆராய முட்பட்டனர். எனினும் சில காலங்களில் அந்த இரு சுரங்கப்பாதைகளையும் ஆராய்வதற்கு எகிப்திய அரசு தடை விதித்து விட்டது. அந்த சுரங்கப்பாதைகளின் பின்னனி என்ன என்பது இதுவரை அறியப்படவில்லை. எகிப்து கதைகளில் வேற்றுக்கிரக வாசிகளின் வருகை இருப்பதனால், இச் சுரங்கப்பாதை ஆர்வத்தை தூண்டும் ஒரு பகுதியாக இன்றுவரை இருக்கிறது.

**மெக்ஷிக்கோ,**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெக்ஷிக்கோவில் Mictlan எனும் பகுதியில் கத்தோலிக்க சபையால் மூடப்பட்ட ஒரு சுரங் கப்பாதை உள்ளது.

8 பெரிய கதவுகளில் 8 ஆவது கதவின் பின்னேயே இச் சுரங்கப்பாதையுள்ளது. நரகத் திற்கான பாதை எனக்கூறப்படும் இச்சுரங்கப் பாதையின் மர்மமும் இன்றுவரை விடுவிக்கப் படவில்லை.

**பிரேஷில்,**



பிரேஷிலின் Joinville எனும் மலைசார் பகுதியில் மலையடிவாரங்களில் பல சுரங்கப் பாதைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலப் பகுதிகளில் இச்சுரங்கப்பாதைகளை அண்டிய பகுதியில் இசைச்சத்தங்கள் கேட்பதாக அறிய பட்டுகிறது. இப்பகுதியும் ஆராய்ச்சிக்கு தடை விதிக்கப்பட்ட பகுதியாகும்.

இவ்வாறு சீனா, இங்கிலாந்து, மல்ட்டா, மலேசியா என பல நாடுகளில் அரசால் ஆராய் வுக்கு அனுமதிக்கப்படாத பல மர்ம சுரங்கப்பா தைகள் இருக்கின்றன.

**இந்தியாவை அண்டிய சுரங்கப்பகுதி.**

இமையமலைக்கு கீழே பெரிய நிலக்கீழ் நகரமிருப்பதாக ஆப்கானித்தான் (Afghanistan) கிராமியக்கதைகளில் கூறப்பட்டுள்ளது. இவ் நகரத்திற்கான நுழைவாயில் ஆப்கானித்தான் எல்லையை அண்டிய இமையமலைப்பகுதி யில் இருப்பதாகவும். இவ் நகருக்கு பல சுரங் கப்பாதைகள் இந்தியாவின் பல பகுதிகளில் இருப்பதாகவும் சில ஆய்வாளர்கள் கருதுகின் றனர். அவற்றில் ஒன்று எல்லோரா குகையை அண்டிய பகுதியில் இருப்பதற்கான குறிப்புக் கள் உள்ளன.

எல்லோரா குகையை அண்டிய பகுதிகளில் பல மர்மமான துவாரங்கள் இருப் பதாக கூறப்படுகிறது. இப்ப குதியில் அமைக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் சில நிலக்கீழ் நகரை விபரிப்பனவாகவும் உள்ளன.

உதாரணமாக, மேலே மனித உருவங் கள் இருக்க அதன் கீழ் மனிதர்கள் போன்றே ஆனால் உருவில் சிறிய உருவங்கள் வரையப் பட்டுள்ளன.

இந்துப்புராணங்களில் பல இடங்களில் நிலக்கீழ் மனிதர் கள் பற்றிய விபரங்கள் உள்ளன. இன்றளவும் இந்தியாவில் சித்தி ரக்குள்ளர்களை நாம் கண்டோம் என கூறும் சம்பவங்கள் நடக்கத் தான் செய்கின்றன.

அப்படியானால், நிலத்தின் கீழ் மனிதர்கள் இருக்கிறார்களா?

அப்படி இருந்தால் அவர்கள் எப்படி சுவாசிப்பார்கள்? எதை உண்வார்கள் போன்ற அடிப்ப டைக்கேள்விகள் எழும். அதே வேளை பல இடங்களில் வெவ் வேறு சமூதத்தவர்களால் தாங்கள் குள்ள மனிதர்களை கண்டதாக கூறப்படுவது எதனால் என்ற சந் தேகமும் இருக்கிறது.

இன்றுவரை இவை பற்றி ஒரு ஆய்வு நடை பெறாமல் இருப்பது மர்மத்தை மேலும் அதி கரிக்கிறது. ஒரு வேளை பரிணாமத்தில் மாறு பட்ட மனிதர்கள் நிலத்தின் கீழ் வாழ்வார்களா? அல்லது வேற்றுக்கிரகவாசிகள் பூமிக்கு வந்து நிலத்தின் கீழ் வாழ்கிறார்களா? அப்படி அவர் கள் வாழவேண்டியதன் அவசியம் என்ன?

நிலத்திற்கு கீழ் மனிதர்கள் என்றதும் தர்க் கரீதியாக சாத்தியமற்றது என்ற எண்ணக்கரும் இதை வாசிக்கும் உங்களுக்கும் வரலாம்.

ஆனாலும், சமீபத்திய அறிவியல் அறிக்கை ஒன்றின் படி, பூமிக்கு கீழும் பூமியின் மேற்ப ரப்பில் இருப்பதை விட 3 மடங்கு அதிக நீர் இருக்கலாம் என புவியியல் ஆய்வாளர் Steve Jacobsen என்பவர் உள்ளடங்களான குழு அறி வித்துள்ளது.

பூமிக்கு கீழ் மண், தண்ணீர், அதற்கு கீழ் பாறை அதற்கும் கீழ் நெருப்புக்குழம்பு இருக்கும் என இவ்வளவு நாளாக கருதிய எமக்கு இவ் ஆய்வு அறிக்கை மாற்றாகவும் வியப்பாகவும் அமைதிருக்கும்.

இப்போது தான் நாம் இவ்வாறான ஒரு அறிக்கையையே பெற்றிருக்கிறோம் என்றால், நாம் அறியாமல் பூமிக்குள் பல மர்மங்கள் இருக்கலாம்.

நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நட்சத்திர இல்லத்தரசி

# மணித்துளிகள் மகத்தானவை

உலகம் என்னும் ஓவியம் பெண்களால் அழகு பெறுகிறது என்கிறார் உலகக்கவி ஒருவர். உண்மைதான், பெண்கள் ஆளுமையின் வடிவங்களாக காட்சி தருகையில் அந்த அழகிற்கு ஈடு இணை கிடையாது. இத்தகைய ஆழுமைப் பெண்களை அடையாளமிட்டு அறிமுகப் படுத்தும் ஒளிஅரசியின் நட்சத்திர இல்லத்தரசி பகுதியை இம்மாதம் அலங்கரிப்பவர் ஆசிரியர், பகுதித்தலைவர், உபஅதிபர் ஆகிய பதவிகளை வகித்து மணிவிழா கண்டு ஓய்வுபெற்றுள்ள திருமதி றஞ்சினி சிவராஜா. உயர்தர கணிதத்துறை ஆசிரியராக பல மாணவர்களின் மனங்களை வென்று 33 வருடம் சேவையாற்றி பொறியியலாளர்களாக்கி உலகெங்கும் வியாபிக்கவைத்த திறன்மிகு ஆசான் இவர்.

''அன்பான புன்னகை ஆற்றுமே நற்கருமம்'' என்பதை எப்போதும் நெஞ்சிருத்தி தவறுகளைக் கூட தக்க விதத்தில் சொல்லிக் கொடுத்து மாணவமணிகளை அரவணைத்து வழிகாட்டிய இவர், பகலவன் மங்கும் இனிய மாலைப் பொழுதொன்றில் வாழ்த்து மடலோடு வணங்கி நின்ற மாணவர்களை அன்போடு வழியனுப்பிவிட்டு புன்னகையோடு எம்மோடு பகிர்ந்து கொண்டவை ஒளி அரசி வாசகர்களுக்காக..




**1.அறிமுகம்?**

நான் திருமதி றஞ்சினி சிவராஜா. கணவர், ஒரே மகன். பொறியியலாளர், மருமகள் கணிதபாட ஆசிரியர். ஆசைக்கு பேரன்.

**2.மேலே குறிப்பிட்ட மூன்று நிலைகளிலும் பணியாற்றியுள்ளீர்கள். உங்கள் அனுபவம் பற்றி?**

புத்தளம் ஸாகிறாக் கல்லூரியில் ஐந்து வருடங்களும் அதன் பின்னான காலப்பகுதி முழுவதும் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் பணிபுரிந்துள்ளேன். கடவுள் தந்த வரம், மாணவர்களின் பணிவு, அதிபர்களின் ஒத்துழைப்பு, எனக்கு அமைந்த குடும்பம், கிடைத்த சகபாடிகள் அனைத்துமே நன்றாய் அமைந்தமை எந்த இடையூறும் இன்றி எனது பணியை சிறப்புற ஆற்ற வழிவகுத்தது எனலாம்.

**3. உங்கள் பணியில் உங்கள் குடும்பத்தின் பங்களிப்பு எத்தகையது?**

எனது தந்தை, கணவர், மகன் என அனைவருமே எனக்கு மிகுந்த ஒத்துழைப்பை வழங்கினர். அதிலும் எனது சகோதரர்கள் எனது நிகழ்வுகளின் அடிப்படையிலேயே தமது வேலைகளை திட்டமிடுவர். இவ்வாறு அனைவருமே எனக்கு பக்கபலமாக இருந்து உதவியமையே எனது பணியை நான் சிறப்புற ஆற்றவும் மனநிறைவுடன் ஓய்வுபெறவும் வழிவகுத்தது.

**4.நேரமுகாமைத்துவம் பற்றி மாணவர்களுக்கு யாதுகூற விரும்புகின்றீர்கள்?**

நேரம் என்பது மிகமுக்கியமானது. ஒவ்வொரு நிமிடத்தையும் பிற்போடுவது எமக்கான பின்னடைவிற்கு வழி தேடுவதேயாகும். எனது வாழ்வில் ஒவ்வொரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடியையும்சரியாகதிட்டமிட்டதனாலேயே குடும்பம், பாடசாலை இரண்டையும் சரியாக நிர்வகிக்கமுடிந்தது. நேரமில்லை என்ற சொல்லை நான் ஒரு போதும் சொல்லநேரவில்லை. எல்லாவற்றையும் திட்டமிட்டு இறுதியாக அன்றைய நாளிதழ், ஏதாவது புத்தகம் இவற்றை வாசிக்காது உறங்கியதே இல்லை. ஒரு நாள் கூட பாடசாலைக்கு நேரம் தவறிச் சென்றதுமில்லை.

**5. பெண் ஆசிரியர்களை அதிகமாக கொண்டிராத இத்துறையில் தாங்கள் பணியாற்றியுள்ளீர்கள். இது பற்றி?**

சாதாரணதரம் வரை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலேயே கல்விகற்றேன். அன்றைய எனது ஆசானான திருமதி ராஜேந்திரம் அவர்களின் கற்பிக்கும் திறனே கணிதத்தை கசடறக் கற்க வைத்தது. கணிதத்தை நேசித்து கற்றதும் கற்பிக்க எண்ணியதும் இத்துறையில் என்னை ஈடுபாட்டுடன் செயற்படவைத்தது எனலாம். ஆசிரியத்தொழில் மீதான எனது அதிக விருப்பிற்கு ஸாகிறாக்கல்லூரியே காரணம். அன்றைய அதிபரின் வழிகாட்டலும் ஒத்துழைப்பும் மாணவர்களின் அன்பும் என்னை வழப்படுத்த உதவியது.

**6. உங்கள் ஆளுமையின் வழிகாட்டி யார்?**


எனது தந்தையாரே. அவர் ஓய்வுபெற்ற அரச அதிபர். அவரது நிர்வாகத்திறனே என் ஆளுமையை வளர்த்தது எனலாம்.

**7.மாணவர்கள் கணிதத்துறையை தெரிவு செய்வதற்கான அனுகூலம், பிரதிகூலங்கள் பற்றி?**

கணிதத்துறையானது கடினமானது தான். அதில் பிரதிகூலம் கிடையாது. இத்துறையை கற்கும் ஒருவர் தொடர்ச்சியாக கற்கவேண்டும். அப்போதுதான் வெற்றிகள் கிட்டும். அதாவது கணிதம் கற்பது சமூகத்தில் நன்மதிப்பையும் சிறந்த திட்டமிடலையும் எதனையும் ஆராயும் மனப்பாங்கையும் தெளிவான மற்றும் விரைவான புரிதலையும் தருகின்றது.

**7. நீங்கள் கல்வி கற்ற சூழல், கற்பிக்கும் சூழல் இவற்றிற்கான வேறுபாடுகள் பற்றி?**

கற்ற சூழல் மிக அமைதியானது, விசேட வகுப்புகள் கிடையாது. பாடசாலைக் கல்வி மட்டுமே. கற்பிக்கும் சூழல் அப்படி அல்ல. அதற்காக மாணவர்கள் மரியாதை அற்றவர்கள் என்றுகூறமுடியாது.



ஆரம்பத்தில் கற்பித்த மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்கும் வித்தியாசங்கள் உண்டு. அதாவது இன்று, கவனக் கலைப்பான்கள் அதிகம். தம்மை வருத்துவதற்கு பின்னிற்கின்றனர். அதனால் நான் அதிகளவில் அவர்களுக்காக உழைக்கவேண்டியுள்ளது.

**9. ஒரு ஆளுமைப்பெண்ணாக பெண்களிற்கு கூறவிரும்புவது?**

கடவுளிற்கும் மனச்சாட்சிக்கும் பயந்து தமக்கு சரியெனப்படுவதை செய்தே ஆக வேண்டும். தமது கடமைகளை இன்முகத்துடன் செய்வதற்கு பின்னிற்ககூடாது. எமது திறன்களின் மூலம் மற்றவர்களின் ஒத்துழைப்பை பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். கடமைக்காக குடும்பத்தையோ குடும்பத்திற்காக கடமையையோ இழக்காமல் இரண்டையும் சரிவர கையாளவேண்டும்.

**10. இதுவரை உயர்தர மாணவர்களுக்கு இலவசமாக கற்பித்து கல்விச்சேவை புரிந்துள்ளீர்கள். எதிர்கால சமூகப்பணிகள் தொடர்பாக?**

மாணவர்களே எதிர்கால தூண்கள். அவர்களை சிறப்புற வழிநடத்துவதே சமூகமாற்றத்திற்கான மிகப்பெரிய விடயமென கருதுகிறேன். அதனாலேயே அதிபர் பதவிக்கான வாய்ப்புகளையும் நான் தவிர்த்திருக்கிறேன். தொடர்ந்தும் மாணவ சமூகத்திற்கு சேவையாற்றவே விரும்புகின்றேன்.

**11. நீங்கள் கூறுவிரும்பும் வேறுவிடயங்கள்?**

நிச்சயம் ஒளிஅரசி சஞ்சிகை பற்றி கூற வேண்டும். ஒரு குடும்பத்திற்கான அழகான அடக்கமான சஞ்சிகை. மாதாந்தம் எனது மேசையை அலங்கரிக்கும் அற்புத சஞ்சிகை. அதாவது எமது பிரதேசம் சார்ந்த நிகழ்வுகள், சாதனைகள், ஆளுமையின் அடையாளங்கள் என அனைத்தையும் ஒரே இதழில் இலகுவான மொழிநடையில் காண்பது மிக மகிழ்வு. கடமையாற்றும் அனைவருக்கும் எனது பாராட்டுகளும் நன்றிகளும்.

நாங்களும் அவரது ஓய்வுகாலம் சிறப்புற அமைய வாழ்த்தி விடைபெற்றோம்.

நேர்காணல் ஜயிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணக்கார சங்கங்கள் என எமக்கு முத்திரை குத்துவது தவறாகும்

- கிளி. ப.தெ.வள பொது முகாமையாளர்

கூட்டுறவு அமைப்புகள் சமூகவிருத்தியோடு தொடர்புடையவை. இதனை வெளிப்படுத்த வேண்டியதும் ஆவணப்படுத்தவேண்டியதும் ஊடகங்களின் கடமை ஆகும். அந்த வகையில் கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச்சங்கத்தினரின் நேர்காணல் பிரசுரமாகிறது. இத்தகவல்களை எம்மோடு பகிர்ந்துகொள்பவர் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.துரைசிங்கம்

கேள்வி : கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதனுடைய தோற்றம் பற்றி கூறுங்கள்?


பதில் : கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 45 வருடங்களிற்கு முன்னர் அதாவது கடந்த 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் அப்போது அமரர் மாசிலாமணி அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டு பின்நாளில் பல தலைவர்கள் பல பொதுமுகாமையாளர்கள் இச்சங்கத்தை நிர்வகித்து வந்தனர். கடந்த இடப்பெயர்விற்கு பின்னர் 2011ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்று இன்றுவரைக்கும் இச்சங்கத்தை நடாத்தி வருகின்றேன்.

கேள்வி : பனை தென்னை வள தொழில் துறை தற்போது எத்தகைய முன்னேற்றத்தை எட்டியுள்ளது? எத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது?

பதில் : கடந்த காலங்களில் இந்த தொழிலை நம்பி வாழ்ந்த சாதாரண தொழிலாளர்கள் விபத்தின்போதும், மரணமடைகின்ற சந்தர்ப்பங்களிலும் அங்கவீனமான சந்தர்ப்பங்களிலும் இந்த தொழிலாளர்கள் கைவிடப்பட்டநிலையில், அநாதரவாக அவர்களின் குடும்பங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் பாதிப்புக்குள்ளாகி சொல்லொண்ணாத் துயரங்களிற்கும் மத்தியில் வாழ்ந்து வந்தனர். ஆனால், தற்போது இச்சங்கத்தில் அவர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காப்புறுதித்திட்டங்கள் தொடக்கம் கல்வி வளர்ச்சிக் காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் சங்கத்தில் பாரிய திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம். அந்தவகையில் எமது சங்கத்தின் மூத்த அங்கத்தவர் (உருத்திரபுரத்தில்) ஒருவர் 40அடி உயர மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமானார். அதேபோன்று முரசுமோட்டை பகுதியில் ஒரு அங்கத்தவர் மரத்தில் இருந்து விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார். இந்த இருவருக்கும் மரணக்கொடையாக மரத்தில் இருந்து தவறி விழுந்து இறந்தவருக்கு பதினைந்து இலட்சம் ரூபாவும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவருக்கு பத்து இலட்சம் ரூபா வீதமும் அவர்களுக்கு வழங்கியுள்ளோம். தற்போது அந்த அங்கத்தவர்களை நம்பி வாழ்ந்த குடும்பங்கள் நின்மதியாக வாழக்கூடிய வழிவகைகளைச் செய்துள்ளோம். அதுபோல பல்வேறு திட்டங்களை அவர்களுக்காக செயற்படுத்தி வருகின்றோம். இத்திட்டங்கள் ஏற்கனவே சமாசங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி வந்திருந்தாலும், அவர்கள் இந்த அங்கத்தவர்களுக்கு போய்ச்சேரக்கூடிய அளவிற்கு நிதி உதவிகளை செய்யாது வெறுமனே ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என வழங்கியதால் அவர்களுடைய இறப்பின் செலவிற்கே போதுமானதாக இருக்கவில்லை. எனவேதான், அவர்களின் உற்பத்தியில் இருந்து கணிசமான ஒரு தொகையை அறவிட்டு அதற்கு சமனான தொகையை சங்கமும் வழங்கி நாங்களே இத்திட்டத்தை செய்து வந்துள்ளோம்.

## கைத்தொழில் சிறப்பு

கேள்வி : பனை வெல்ல உற்பத்தி பற்றி சொல்லுங்கள்?


பதில் : பனைவெல்லம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் தான் இருக்கின்றது. கடந்த காலங்களில் வருடா வருடம் சுமார் 20 ஆயிரம் கிலோ வெல்லங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை, அதனைத் தொடர்ந்து செய்ய முடியாத ஒரு சூழல் இருந்தாலும், கடந்த 2012 ஆம் ஆண்டு அரசாங்க அதிபர் மதிப்பிற்குரிய திருமதி றூபவதி கேதீஸ்வரன் அம்மா அவர்களின் ஊடாக UNDP நிறுவனம் எமக்கு சுமார் 12.5 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியதன் மூலம் பெரிய வெல்லத் தொழிற்சாலை ஒன்றினை கண்டாவளை சந்தியில் அமைந்துள்ள காணியில் உருவாக்கி பாரியளவில் வெல்லங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தோம்.

கடந்த சில வருடங்களாக மக்கள் மத்தியில் சுகர் என்கின்ற வருத்தம் பாதிக்கக்கூடிய அளவிற்கு உறுவெடுத்த வகையில், அனைத்து மக்களும் இந்த பனை வெல்லத்தை நாடி நிற்கின்றனர். எனவே, நாங்கள் கடந்த வருடமும் அதிகூடியளவு வெல்லத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளோம். இந்தவருடமும் 30ஆயிரம் கிலோ வெல்லம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். எனவே, இந்தவருடம் பனை வெல்ல உற்பத்தி என்பது ஒவ்வொரு மக்களினுடைய தேவைப்பாட்டிற்கும் சென்றடைய வேண்டும் என்ற வகையில் அதனை செய்து வருகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைத்தொழில் சிறப்பு

**கேள்வி : பனை தென்னை வள தொழில் காப்புறுதி மற்றும் இழப் பீடு பற்றி அறிந்துகொள் ளலாமா?**

பதில் : பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில் புரிகின்ற அங்கத்தவர்கள் ஒருசிலருக்கு சங்கத்தின் ஊடாக ஏனைய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதிகள் செய்திருந் தாலும், எங்கள் சங்கத்தின் ஊடாக அவர் களிற்கான விபத்து காப்புறுதி ஒன்றை செய்திருக்கின்றோம். அதேநேரத்தில் சங்க நிதியில் இருந்தும் அவர்களுக்கு விபத்து உதவுதொகை திட்டம் ஒன்றையும் ஆரம்பித் துள்ளோம். தொழில் புரிகின்றபோது மரத் தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் மரணம் அடைந்ததால், அவரின் குடும்பத்திற்கு 15 இலட்சம் ரூபாய்களை வழங்கியிருக்கின் றோம். அதேநேரத்தில் தொழில் ரீதியாக ஏதேனும் வகையில் விபத்து நடந்து அவர் மரணமடைந்தால், அவருக்கு பத்து இலட் சம் ரூபாவும், தொழில் புரிகின்றபோது இயற்கையாகவே அவர் நோய்வாய்ப்பட்டு மரணம் அடைந்தால் ஐந்து இலட்சம் ரூபாய் களையும் வழங்குகின்றோம். இது அவர்களு டைய தொழில் பங்களிப்பிற்கு ஏற்ப அல்ல, கள்ளினது உற்பத்திக்கு ஏற்ப அவர் 10 போத் தல் என்ன 100 போத்தல் கொடுத்தால் என்ன அல்லது அவருடை பங்களிப்பு 1500.00 ரூபாவிற்கு மேற்பட்ட பங்களிப்பாக இருந் தால் என்ன அவருக்கான இந்த காப்புறுதித் திட்டத்தில் அதற்கான நிதி வழங்கப்படும். சமாசத்தினை பொறுத்தளவில் ஒரு அங்கத் தவரின் பங்களிப்பின் வீதத்திற்கு ஏற்பவே, மரணக்கொடையாக இருந்தாலும் சரி பென் சனாக இருந்தாலும் சரி வழங்கப்படும். ஆனால், எங்களைப் பொறுத்தளவில் அவரு டைய விபத்து நிதிக்காக சேர்க்கப்படும் ஒரு தொகையின் 10 வீதத்தை அவர் 60 வயது கடந்ததும் உதாரணமாக 500,000.00 அவ ரின் விபத்து நிதி இருந்தால் அதன் 10 வீதம் மாதாந்தம் 50,000.00 ரூபா பென்சனாக எடுக் கக்கூடிய திட்டத்தை நாங்கள் செய்துள் ளோம். அவர் உயிர் வாழும் வரைக்கும் அவர் தவறுதலாக இறந்தால், அவரின் மனைவியோ பிள்ளைகளோ அவரின் பென் சனை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு இத் திட்டத்தை நாங்கள் வகுத்துள்ளோம்.


**கேள்வி : கூட்டுறவுச் சங்கங்களின் நிதி மற்றும் ஊழியர் பலம் போன்றவை பனை தென்னை வள சங்கங்களுக்கு அதிகம் உண்டு, இது எப்படி ஏற்பட்டது?**

பதில் : பனை தென்னை வள அபிவி ருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பணக்கார சங்கங்கள் என எல்லோராலும் பேசப்படு வது, உண்மையில் அதனை விளங்கிக் கொள்வதாக இல்லை. அங்கே நாளாந்தம் கொடுக்கின்ற உற்பத்திக்கு ஏற்ப ஒவ் வொரு விதமாக சேமத்தை பிடிக்கின் றது. நாங்கள் ஒருவர் ஒரு போத்தல் கள் வழங்குகின்றபோது 05.00 ரூபா அவரின் சம்பளத்தில் இருந்து அறவிட்டு சங்கம் 05.00 ரூபா சேர்த்து ஒருபோத்தலுக்கு 10.00 ரூபா வாக சேமம் சேமிக்கப்படுகின்றது. உதாரண மாக ஒருவர் ஒருநாளைக்கு 100 போத்தல் கொடுப்பாராக இருந்தால் ஒரு நாளைக்கு அவருக்கு 100 போத்தலுக்கும் 10.00 வீதம் 1000.00 ரூபா சேமமாக சேமிக்கப்படுகின் றது. எனவே, இந்த நிதிகளை வங்கியில் வைக்கின்றபடியால், அது பலகோடிகளாக வைப்பில் இருக்கின்றமையினை அனை வரும் பார்த்துவிட்டு சங்கத்தின் நிதி சங்க இலாப நிதி எனக்கருதி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பாரிய ஒரு நிதி வல்லமையுடன் இயங்கு வதாக கருதுகின்றனர். உண்மையில் அது இலாபத்தில் ஈட்டப்படும் நிதியல்ல, ஒவ் வொரு அங்கத்தவர்களுடைய நிதியையும் நாங்கள் வங்கியில் நிரந்தர வைப்பில் வைத் துள்ளோம். அதுதான் எங்களிற்கு பாரிய நிதியாக இருக்கின்றது.

**கேள்வி : இறுதியாக, உங்கள் சங்கத் தினால் மேற் கொள்ளப்பட்டுவரும் சமூக சேவைகள் பற்றி தெரிவிக்க முடியுமா?**

பதில்: எமது ஏனைய சங்கங்கள் சிலவற்றை செய்தாலும் கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யை பொறுத்தளவில் கிளிநொச்சி பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மானது ஒவ்வொரு வருடமும் ஆகக் குறைந்தது பத்து இலட்சம் ரூபாவிற்கு மேலதிகமாக வழங்கிவருகின்றோம். அன்பளிப்புக்களாக இருக்கலாம் அல்லது சமூக சேவைகளாக இருக்கலாம். பாரியளவில் நோய்த் தாக்கங்களிற்கு உள்ளான அங்கத்தவர்களின் பிள்ளைகள் மாத்திரம் அல்லாமல் ஏனைய தரப்பிலும் உதாரணமாக அண்மையில் ஒரு பாடசாலை மாணவனுக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியை வழங்கி இருந்தோம். புதுமுறிப்பைச் சேர்ந்த 11 வயது மதிக்கத்தக்க மாணவன் விழுந்ததில் தலையில் அடிபட்டு அக்காயத்தை சத்திரசிகிச்சை செய்வதற்கு 11 இலட்சம் தேவையென குறிப்பிட்டபோது எமது சங்கத்தால் 1 இலட்சம் ரூபா வழங்கியபோது பலர் முன்வந்து அவர்களிற்கு பல இலட்சம் ரூபாய்களை வழங்கி இன்று அந்த மாணவன் உயிர் பிழைத்துள்ளான். இதுபோல பல விதமான உதவிகளை நாங்கள் செய்து வருகின்றோம். பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கி வருகின்றோம். மாவட்ட அரசாங்க பணிமனை கலாசார விழாவிற்கும், மாவட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கும் உதவி புரிகின்றோம். பிரதேச செயலகங்களினுடைய கலாசார விழாவிற்கும் அவர்களினுடைய விளையாட்டு நிகழ்விற்கும் நிதிபங்களிப்பு செய்து வருகின்றோம். எமது மாவட்டத்திலுள்ள அனேக பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்விற்கும் பரிசளிப்புக்கும் நாங்கள் நிதி வழங்கி வருகின்றோம்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் நிதி வழங்கி வருகின்றோம். இது போல எங்களுடைய அங்கத்தவர் சமூகம் சார்ந்த பிள்ளைகளுக்கும் அதாவது தரம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 18 மாணவர்களுக்கு 2015, 2016ம் ஆண்டிற்கு மாதாந்தம் 1500.00 வீதம் வழங்கியுள்ளோம். அவர்கள் க.பொ.த. சாதார தரம் படிக்கும் வரைக்கும் இப்பணம் வழங்கப்படும்.

அதேபோன்று ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் க.பொ.த.சா.தரம் சித்திபெற்று க.பொ.த.உ. தரம் செல்கின்றபோது, 2000.00 ரூபா மாதாந்தம் வழங்கி வருகின்றோம். க.பொ.த.உ.தரம் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களிற்கு மாதாந்தம் 3500.00 ரூபா வீதம் வழங்கி வருகின்றோம். இது அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக சங்கத்தின் இலாபத்தில் இருந்தும் அங்கத்தவர்களின் நிதியில் இருந்தும் வழங்கி வருகின்றோம்.

மேலும் வளர வாழ்த்தி நன்றி கூறி விடை பெற்றோம்

நேர்காணல் : ஜயிலா

## 52 ஆம் பக்க விடைகள்

### தத்துவங்கள்

Let's plant a tree. We get a boon for the day.

ஆளுக்கொரு மரம் நடுவோம். நாளுக்கொரு வரம் பெறுவோம்.

---

### வித்தியாசங்கள்

குரங்கின் வால், மரக்கிளை, பறவையின் இறகு, வாழையிலை,

குரங்கின் கையிலுள்ள தடி, புலியின் காது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தினங்களின் மகிமை**

# நட்பினில் மலர்வோம்

நட்பென்றால் யாதென்றால் சட்டென்று யாராலும் விளக்கிவிடமுடியாது, ஏனெனில் யாதுமானதே நட்பு. நட்பு என்ற ஒற்றைச் சொல் இல்லையென்றால் உலகம் வெறும் இயந்திரமாகவே சுற்றிக்கொண்டிருக்கும் என்பது உண்மை.

எந்த உறவிற்குள்ளும் நட்பு என்ற நூலிழை ஓடிக்கொண்டிருப்பதாலேயே உறவுகள் அர்த்தம் கொள்கின்றன. கணவன் மனைவி உறவினில் கூட நல்ல நட்பு இல்லாவிட்டால் அது நீண்டு நிலைப்பது சாத்தியமில்லை. காதலுக்குள்ளும் நட்பு வேண்டுமென்றால் யோசிக்கத் தோன்றுகின்றதல்லவா? ஆனால் நட்பு இல்லா விட்டால் எதுவுமே நிலைக்கமுடியாது. தோல்வியின் போது தோள் கொடுக்கவும் வலியின் கணங்களை சுகமாய் மாற்றவும் நட்பினாலேயே முடியும். ஆகஸ்ட் 6 நண்பர்கள் தினம்.

சங்க காலத்தில், பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலவர் பிசிராந்தையாரும், சோழ நாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழனும் ஒருவரையொருவர் பார்க்காமலேயே நட்பை வளர்த்து நண்பர்களாக வாழ்ந்த வரலாற்றை நாம் மறக்க முடியுமா..? கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து மரணமெய்தியசெய்தி கேட்டு, பிசிராந்தையாரும் தன் நண்பரின் பக்கத்திலேயே வடக்கிருந்து மரணமெய்திய நிகழ்ச்சியை போல் நட்பை உயர்வு செய்யும் வேறு நிகழ்ச்சியை சொல்ல முடியுமா..?

அதேபோல் சங்ககாலத்தில், வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்யும் நெல்லிக் கனியை தான் சாப்பிடாமல் தன் நண்பரான அவ்வைக்கு கொடுத்தானே அதியமான்...

கர்ணன் துரியோதனன் நட்பும் வரலாற்றில் பதிந்துபோனதே என்பது அனைவரும் அறிந்ததே. இன்றேல் எடுக்கவா? கோர்க்கவா? என விளம்பியிருக்கமாட்டான் துரியோதனன்.

நட்பினை புனிதப்படுத்தும் வகையில் நண்பர்கள் தின சிறப்பு பதிவு ஒன்றினை முல்லைத்தீவிலுள்ள நெய்தல் தனியார் கல்வி நிலையத்தில் மேற்கொண்டபோது நட்பு பற்றிய அக்கல்விநிலைய மாணவர்களின் மனப் பதிவுகள் இங்கே பதிவிடப்படுகின்றன.

நுழைவாயிலில் நுழையுமுன்னே சினேகம் கொண்ட புன்னகையும் நட்பாய் நீண்ட கரங்களும் காலப் பெருவெளியின் கலையாத பொக்கிசம் நட்பே என்பதை மெல்லச் சொல்லியது. அழகான புன்னகையும் அணிசேர்க்கும் சிரிப்புமாய் மாணவ மணிகளின் அன்பான வணக்கத்தில் அகமகிழ்ந்தோம் உளம் குளிர்ந்தே.

முல்லை மண்ணின் கல்விச் சொத்தாக பல நூறு மாணவர்களை தன்னகத்தே கொண்டு பல கல்விமான்களை உலகிற்கு உவந்தளிக்கும் கல்வித்தாயாய் பரிணமித்து மிளிர்பவள் நெய்தல் தாய். அதன் நிர்வாகியாய் அன்புடன் இணைந்த கண்டிப்பையும் கவனிப்பையும் ஒருங்கே வழங்கி மாணவ மணிகளை சிற்பங்களாய் மாற்றும் அளப்பரிய பணியாற்றி வருபவர் ஆசிரியர் கரன். நெய்தலின் சொத்துக்கள் எண்ணத்தில் ஈந்த முத்துக்கள் இதோ.

அவனியின் பிரசவிப்பில்
ஆயிரமாயிரம் பிறவிகள்
அழகாய் வாழ வரம் தந்த
அற்புதமான நட்பே நீ வாழி.

நந்தவனத்தில் பூத்த மலர்கள் நாம்
நாவினால் இதமாய் உரையாடியே
நானிலம் போற்றும் உறவாம்
நட்பதனில் இணைந்திட்டோம்.


தவறே செய்யாத போதும் மன்னிப்பு கோரலும் மன்னிப்பு கோரலின் போது மன்னிப்பு அளித்தலும் நட்பின் மீதான நம்பிக்கையை வலுப்பெறச் செய்கிறது. இது ஒருவர் இன்னொருவர் மீது கொண்ட நட்பின் ஆழத்தை உணர்த்துகின்ற அற்புத வழியாகும்.

நட்பு என்பது இதயம் போல
எமக்கு தெரியாமலே
எமக்காக துடிக்கும்
எப்போதும்.

பூக்கள் என்பது உதிரும் வரை
இரவு என்பத விடியும் வரை
பிரிவு என்பது இணையும் வரை
நட்பு என்பது உயிருள்ளவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நட்பினில் மலர்வோம்

ஒரு கூட்டு பட்சிகளாய்
இடுக்கண் அகல
இன்பத்தில் திழைத்தோம்.
பலகை தட்டி ஓசை எழுப்பும்
பாங்கான பருவ நட்பிதுவே.
கல்லூரி காலமதில்
கருத்துடன் ஒளிதந்த நட்பே
காலங்கள் கடந்து சென்றாலும்
கைசேர்த்து கரம் கோர்த்த நட்பு
கலைவதுமில்லை,அழிவதுமில்லை.

**பி. மிதுசனா 2019 கலை.**

பிரிவை நினைத்து
நான் அழுத போது
கண்களில் வழிந்த
கண்ணீருக்கு
ஆறுதல் சொன்னது
என்றும் நான் மட்டும்
உன்னுடன் இருப்பேனென
என் நட்பு

**அ. ஜெபர்சன்**

எதிர்பார்க்கின்ற உறவுகளுக்கிடையில்
சிக்கித்தவிக்கின்ற மனமும்
குதூகலம் கொள்வது
எதிர்பார்ப்பில்லா நட்பினால் மட்டுமே.

உன்னைப் போலொரு நட்பு
கிடைக்கும் என்று தெரிந்திருந்தால்
பூமியில் நான் பிறக்கும் போதே
அழாமல் பிறந்திருப்பேன்.

நட்பின் ஆழம் உணர்கிறேன்,
உன்னை காணாத அந்த
நொடிகளில் தான் தோழியே.

**சௌ.சவிதா**

அறிமுகம் இல்லாமல் வந்தோம்.
அடிக்கடி பேசிக்கொண்டோம்.
உறவுகளுக்கு மேலும் உயிரானோம்.
காலங்கள் பல ஓடி கடந்துசென்றாலும்
ஓயாமல் தொடருமே எம் நட்பு.

**ந. கௌசிகா 2019 வணிகம்.**

சொந்தமாகாத சொந்தம் நட்பு
பனிபடர்ந்த பாதையிலே
பாதியிலே சென்றாலும்
எழுதிவைத்த ஓவியம் போல்
உன் அன்பு எப்போதும்
என்னோடு நட்பே.
ஆண்பெண் நட்பு அழகானது
அழகாய் அமைவது வரமானது.

**எ. செந்துஜா.**

என் முன்னால் எப்போதும்
புன்னகைக்கும் என் நண்பன்
முதல் முறையாய் அழகிறான்,
எழுந்து துடைக்கிறேன்
நான் இறந்து கிடப்பதையும் மறந்து.

**க. பாவரசி**

அவளது நட்பை
ஓவியமாய் வரைய
எண்ணினேன், முடியவில்லை,
ரோஜாவின் உருவத்தை வரையலாம்,
அதன் வாசத்தை வரையமுடியாதே.

தனிமையும்,
எனக்காய் யார்
என்ற வினாவும் வரும்போது
எளிமையாய்
என் முன்னே வருவது
நின் நட்பு மட்டுமே.

ஆயிரம் சொந்தம்
எமக்காக இருந்தாலும்
தேடினாலும் கிடைக்காத
உயர்ந்த உறவு
நல்ல நண்பர்கள் மட்டுமே.

காலத்தால் என்றும் மறக்கமுடியாத மாணவப்பருவத்து நட்பு எம் கைவிட்டுப்போனாலும் உள்ளத்தின் ஆழத்தில் உயிரோவியமாய் வாழும் எம் இளமைக்கால நட்பை மீண்டும் ஒருமுறை அசைபோட்டபடியே இவ்வாறான ஒரு சிறந்த பதிவின் நிமித்தம் நண்பர்களாய் இணையக்கிடைத்த அற்புதமான இனிய தருணத்திற்காய் நன்றி பகிர்ந்தபடி விடைபெற்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





நன்றி யோகேஸ்





# நட்பினில் மலர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பார்ப்போம் பழகுவோம்



# தையற்கலை


→ தொடர்ச்சி ←

# பெண்களுக்கான இரவு உடை



## நடுச் சுருக்கு அமைத்தல்

05. Q,R இன் வழியே வெட்டுக
06. Q,R இன் உயரம் கொண்ட ஒரு தாளில் மேல் விரிவு உம், கீழ் விரிவு இருக்கும் வண்ணம் வெட்டிக் கொள்க.



07. வெட்டிக்கொண்ட தாளை Q,R கோட்டால் பிரித்த இடைவெளியில் வைத்து ஒட்டிக்கொள்க.
08. ஒட்டிய பின் மேல், கீழ் பகுதிகளை வளை கோடாக இருக்கும் வண்ணம் வெட்டிச் சீர் செய்து கொள்க.

## தையல் இடைவெளி

ஜோக் - JK - மடிப்பு IJ - 1 cm IH - 1 cm HMK வளைகோடு - 1 cm
கீழ் உடம்பு - KD - மடிப்பு KM வளைகோடு - 1 cm MN - 1 cm NP - 2 cm
DP - மடித்துத் தைப்பதாயின் 2 cm - frill வைப்பதாயின் 1 cm

## துணி வெட்டுதல்

1. கீழ் உடம்பின் உயரத்தின் 2 மடங்கு அளவை துணியின் உள் வளமாக அளந்து இரண்டாக மடிக்கவும்.
2. உடம்பின் அகலத்திற்கேட்ப கிடையாக அளந்து இரண்டாக மடிக்குக.
3. தாளில் வெட்டிக்கொண்ட அமைப்பை இதன் மீது வைத்து சீராக வெட்டுக.

குறிப்பு - தாளில் வரையும் அமைப்பானது எமது உடல் சுற்றின் 1/4 பகுதியானது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஜோக்

ஜோக்கின் உயரமளவு 4 துண்டுகளை எடுத்து ஜோக்கின் அகலத்திற்கேற்ப கிடையாக இரண்டாக மடித்து வெட்டிக்கொள்க.
இந்த வடிவில் 4 ஜோக்ஸ் பெறப்படும்.
இதில் M புள்ளிக்குரிய இடத்தில் V வடிவில் சிறிய வெட்டு அடையாளம் இட்டுகொள்க.
கீழ் உடம்பின் கை பொருந்த வேண்டிய இடம்.



## சுருக்குச் சிறகுகளால் (Frill) அழகு படுத்த.

1. ஜோக்கின் விளிம்பில் Frill அமைக்க விரும்பின் 2.5" - 4" அகலமும் ஜோக்கின் 2 மடங்கு நீளமும் கொண்ட துணியை வெட்டிக் கொள்ள.
2. சட்டையின் கீழ்ப்பகுதியில் சுருக்கு அமைக்க விரும்பின். Frill இன் உயரத்தை கீழ் உடம்பின் இறக்கத்திலிருந்து கழிக்கவும்.
   Frill இற்கென நீங்கள் தெரிவு செய்த உயரத்தை (5"-10") உயரமாகவும் சட்டையின் கீழ்பகுதிச் சுற்றளவின் இரண்டு மடங்கு நீளமும் கொண்ட துணியை வெட்டடிக்கொள்க.
3. கை, கழுத்திற்குத் தேவையான குறுக்குத் துண்டுகள்.

## தைக்கும் முறை

1. ஜோக்ஸை சோடிகளாக வைத்துத் தோள் பொருத்துக.
2. பொருந்திய ஜோக்ஸை விரித்து முகப்புப் பக்கங்கள் உள்ளிருக்குமாறு வைத்து கழுத்தைத் தைத்துத் திருப்புக.
3. வெளிப்பக்க ஜோக்கில் Frill ஐ வைத்து தைக்குக.
4. கீழ் உடம்பின் MN பகுதிக்கு குறுக்குத்துண்டு வைத்து விளிம்பில் (பைன்டிங்காக) மடித்துத் தைக்குக.
5. ஜோக்குடன் கீழ் உடம்பை வைத்துத் தைக்க.
6. இப் பொருந்துகளை மூடும் வண்ணம் உள்வள ஜோக்கை மடித்து மேற்தையல் இடுக.
7. சட்டையில் இரு பக்கக் கரைகளையும் பொருத்துக.
8. கீழ் பகுதியை மடித்து அல்லது சுருக்குச் சிறகு (Frill) வைத்துத் தைத்து முழுமைப்படுத்துக.



திருமதி சுமித்ரமலர் ராகவன்
ஆசிரியர் - யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு விவேகானந்தா தேசிய கல்லூரியின் தமிழ் மொழி மூல தேசிய போட்டியில் மூன்று பிரிவுகளிலும் வெற்றியீட்டிய மாணவர்கள், நெறிப்படுத்திய ஆசிரியர் திருமதி உமா சிவகுமார் மற்றும் அதிபர், ஆசிரியர் உட்பட பாடசாலை சமூகத்தினரை ஒளிஅரசியின் சார்பில் பாராட்டுகின்றோம்.





AMMU BEAUTY CARE இனால் நடைபெற்றவருடாந்த Bridal Show & Certification நிகழ்வு 02.07.2017 அன்றுவவுனியாறோயல் மண்டபத்தில் மாலை 3மணியளவில்சிறந்தமுறையில் நடைபெற்றது. அந் நிகழ்விற்குபிரதமவிருந்தினராகதிரு. செரோன் பீரிஸ் (Managing Director ,Sunguinpvt, Colombo) அவர்களும்சிறப்புவிருந்தினராகதிருமதி கி. சுகந்திகிசோர் (செயலாளர் பிரதேச சபை வவுனியா) மற்றும் திருமதி. கீதாஞ்சலிநகுலேஸ்வரன் (பணிப்பாளர் Royal Lead English School) அவர்களும்கலந்துகொண்டுநிகழ்வினைசிறப்பித்தனர். அத்தோடு BEAUTY CARE நிலையத்தின் பயிற்சியைமுடித்தபதினாறுமாணவர்களுக்குசான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPECIALIZED IN WEDDING CARDS




## Available Places

**Kilinochchi**
Velan Printers / Siva Pathippagam

**Vavuniya**
Kalaimagal Printers / Vanni Quick Printers

**Batticaloa**
Aathavan Printers / New Keen Printers
United Book Shop

**Yatiyantota**
Swarna Print

**Matale**
VJ Printers

**Thalawakala**
Geetha Press / Harani Printers
Umaiyal Printers

**Trincomalee**
Sun Printers / New Uthayan Printers

**Paruththithurai**
Jeevan Printers

**Kaludawalai**
Maaruthi Printers

**Nuwara Eliya**
Nuwara Eliya Printers
Apeksha Offset Printers
Laxmi Printers

**Puttalam**
Serendip Printers

**Kandy**
Vino Printers

Wedding Cards : Print & Sale

CTP & Colour Separation

**United Creation**

51A, Negombo Road, Peliyagoda.
Tel : 0112 938 083, 0115 767 309
Mobile : 0777 347 452
Email : unitprintek@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org